அறைவு 04 இயம் 12 Oct 17 - 23, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

சகல வடிவங்களினதும் தாயாக மக்கள் போராட்டம் இருக்க வேண்டும். மக்களிடமும், ஒடுக்கு முறைக்கெதிரான அவர்களது போராட்டங்களிலும் ஒரு கலைஞன் அக்கறை செலுத்தாவிட்டால் அவன் வரலாற்றின் குப்பைத் தொட்டியில் தூக்கி எறியப்படுவான்.

தெலுங்குக் கவிஞர் கும்மாட்டி விட்டலு

HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

தொண்டர் ஆசிரியர், சுகாதாரத் தொண்டர்கள் போன்றோருக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் தற்போது வரை நிறைவேற்றப்படாத நிலையில் மீண்டும்

# உறுதிமொழிகளை நம்பி போராட்டம் கைவிடப்பட்டது

அரச நியமனங்களின் போது தம்மைத் திட்டமிட்டுப் புறக்கணித்தாகக் குற்றஞ்சாட்டி கிழக்கு மாகாண சபையின் முன்றலில் நடைபெற்ற பதின்நான்கு நாட் பொராட்டம் வேலையற்ற பட்டதாரிகளால் கைவிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணசபை அரச நியமனங்களுக்கென உருவாக்கியிருந்த இனவிகிதாசார நியமன முறை மூலம் அம்பாரை மாவட்டப் பட்டதாரிகள் பழிவாங்கப்பட்ட சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே 17



## திருமலையில் இன்று போராட்டம்

அரசியல் கைதிகளின் விடுதலைக்கான போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாக இன்று திருகோணமலையில் ஒரு நாள் அடையாள பட்டினிப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் நலன்காப்புக் குழவினரால் மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் பட்டினிப் போராட்டத்திற்கு வண. பிரபாகரன் அடிகளார் தலைமை தாங்கவுள்ளார்.

இன்று சிவன்கோவில் முன்றலில் நடைபெறவிருந்த இப் போராட்டத்திற்கு தமிழ் விசமிகள் சிலர் தடையை ஏற்படுத்த முனைந்ததை 17

220 அரசியல் கைதிகளின் விவகாரத்தில் முன்னுக்குப் பின் முரணான செய்திகள்

## தீர்வுக்கு 1 வருடம் வேண்டுமா அல்லது நவம்பர் 7ல் தீர்வா ?

தமிழ் அரசியல் கைதிகள் முன்னெடுத்துள்ள உண்ணாநிலைப் போராட்டமானது சர்வதேச அழுத்தங்களை அரசின் மீது திணிக்கும் நிலை தோன்றியதை அடுத்து அப் போராட்டத்தை முடக்கும் வகையில் செய்திகள் வெளியாகத் தொடங்கியுள்ளன.

பட்டினிப் போராட்டம் ஆரம்பாமாகிய மூன்றாவது நாளான கடந்த 14ம் திகதி மகசீன் சிறைச்சாலைக்கு நீதி அமைச்சர் விஜயதாச ராசபக்ச, அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், எம்.ஏ சுமந்திரன் நா.உ. 17





## குற்றம் நிரூபிக்கப்பட்டால் உச்சபட்ச தண்டனை???

கைதுசெய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய மாகாணசபை உறுப்பினரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சி. சந்திர - காந்தனின் விசாரணைத் தடுப்பு நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாமனிதர் யோசப் பரராசசிங்கம் அவா்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை தொடர்பான சந்தேக விசாரணைகளுக்கு முகம் கொடுத்துள்ள சந்திரகாந்தன் கடந்த 11ம் 17

அரசின் உறுதிமொழியை ஏற்க மாட்டோம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு தமிழ் அரசியல் கைதிகள் தெரிவிப்பு

தமிழ் அரசியல் கைதிகளை நவம்பர் 7ம் திகதியில் இருந்து கட்டம் கட்டமாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் வெளியிட்டுள்ள உறுதி மொழியை ஏற்கமாட்டோம் என தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

நவம்பர் மாதம் 7ம் திகதி முதல் தமிழ் அரசியல் கைதிகள் கட்டம் கட்டமாக விடுதலை செய்யபடவுள்ளதாக ஜனாதிபதியின் உறுதி மொழியினை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனிடம் வழங்கியுள்ளதாக தமிழ் அரசியல் கைதிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிமலநாதன் தெரிவித்துள்ளார்.

ஆனால் இதனை தாம் ஏற்க முடியாது என அவர்கள் நிராகரித்துள்ளனர்.

நேற்று (16) நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிமலநாதன் மற்றும் சட்டத்தரணிகளான அன்ரன் புனிதநாயகம் ஆகியோர் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று உணவுத் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# அரசியல் கைதிகளின் விடுதலை... பந்து யார் மீது?

தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலை தொடர்பாகத் தற்போது இறுக்கமான உண்ணா நோன்பைக் கைக்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

நிராகாரத்தைக் கூட மறுத்துள்ள அவர்கள் இப்பத்தி எழுதப்படும்போது தமது ஐந்தாவது நாளைக் கடந்துள்ளனர்.

அரசியில் கைதிகள் என்ற சொற்பதமே ஒரு அங்கீகாரமான சொற்பதமாக போராட்டம் நடைபெறும் உலகெங்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையை நாம் காணலாம்.

தமது உரிமைகளுக்காக, அரசியல் எதேச்சாதிகாரத்திற்கு எதிராகப் போராடுபவர்கள் அரசியல் கைதிகளாக்கப்படுகின்ற நிலை சர்வதேசமெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஆனால் குறித்த போராட்டம் தோற்கடிக்கப்படுகின்ற போதோ அல்லது வெற்றியடைகின்றபோதோ உடனடியாகவே விடுதலை அடைகின்றவர்களாக இருப்பவர்கள் அவ்வரசியல் கைதிகளே!

ஆனால் சிறீலங்காவைப் பொறுத்தவரை அரசியல் கைதிகளின் விவகாரம் கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளதையிட்டு அவ்வரசியல் கைதிகளைத் தவிர எவரும் மிகக் கரிசனை எடுப்பதாகத் தெரியவில்லை.

தமிழர் தேச விடுதலைக்கான போரைப் பயங்கரவாதம் என்றும் அப் போரில் ஈடுபட்டவர்களைப் பயங்கரவாதிகள் என்றும் அழைக்கும் எதிர்தரப்பையும் அதனை ஏற்றுக்கொண்டுள்ள தமிழ்த் தரப்பின் இடையேயும் மாட்டிக்கொண்டுள்ள இந்த அரசியல் கைதிகளின் விடுதலைக்கான பொறுப்பை தமது தோள்மேல் தாங்கிக் கொள்ள யாரும் முன்வருவதாயில்லை.

ஆயுதப் போர் முடிவிற்கு வந்து ஆறு ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் பயங்கரவாதிகள் எனப் பட்டம் சூட்டப்பட்ட போராளிகள் கூட புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனா. அத்துடன் போராட்டத்தின் முக்கிய தளபதிகளாக செயற்பட்டு அரசின் கைக்கூலிகளாக மாறி போராட்டத்தை வெல்லவதற்கு உறுதுணை அளித்த சிலர் கைது செய்யப்படாமலே சுகபோக வாழ்வை அனுபித்து வருகின்றனர்.

ஆனால் அவ்வாயுதப் போரிற்கு உதவியளித்த சந்தேகத்தின் பேரில் கைதான பலர் இன்றும் சிறையில் வாடுகின்றனர். கடந்தவாரம் 16 ஆண்டுகளாகச் சிறைவாசமிருந்த பெண்ணொருவர் குற்றமற்றவர் என நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட போது அவர் கடந்த 16 ஆண்டுகளாக அனுபவித்த கொடுமை தமிழர் மனங்களை வதைத்ததை யாவரும் அறிவர்.

இந்த நிலையில் இவ்வாறு ஒரு தசாப்தத்திற்கும் மேலாகவும் வழக்கு அல்லது குற்றச்சாட்டுப்பத்திரங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாமல் பலர் அரசியல் கைதிகளாகச் சிறையில் இருக்கின்றனர்.

இவ்வாறு சிறையிருப்பவர்கள் தொடங்கியுள்ள உண்ணாநோன்புப் போர் ஐந்து நாட்களைக் கடந்துள்ள நிலையில் தமிழ் அரசியல் தலைவர்கள் சகட்டுமேனிக்கு அறிக்கைவிடுவதுடன் தமது பொறுப்புக்கள் முடிவடைந்து விட்டதாகக் கருதத் தொடங்கி விட்டனர்.

அதற்கும் மேல் ஒரு படிக்குச் சென்று உண்ணாநோன்பிருக்கும் அரசியல் கைதிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கு அரசே பொறுப்பு என்று கூறி தமக்கும் அரசிற்கும் எவ்வித தொடர்பும் இல்லாதது போல் உணர்சிநிலை அறிக்கைகளையும் வெளியிடத் தொடங்கி விட்டனர்.

அதாவது அரசியல் கைதிகளின் விடுதலை என்ற பந்தை சிங்கள ஆட்சியின் மீது பரிமாற்றிக்கொடுத்து விட்டு அச்சிங்கள ஆட்சியின் பங்காளர்களாகத் தாம் இருப்பதைத் தமிழர் அரசியல் கைதிகளின் விடயத்தில் மறந்து இருக்கின்றனர்.

உண்மையில் அவ்வாறானதொரு சூழ்நிலை தேர்தலில் வென்ற தமிழ் அரசியல் தலைவர்களுக்கு தற்போது இல்லை என்றே சொல்லலாம். ஏனெனில் அரசின் உயர் மட்டப் பதவிகளுள் ஒன்றான எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அமர்ந்திருப்பவர் தமிழ்க் கட்சிக் கூட்டின் தலைவரே. அவர் நேரடியாக எக்கணத்திலும் சனாதிபதியுடன் பேசக்கூடிய வல்லமையைக் கொண்டிருப்பதுடன் சனாதிபதி அல்லது சிறீலங்கா அரசின் மீது அழுத்தத்தையும் கொடுக்கக்கூடியவராக இருக்கின்றார். எனவே அத்துனை வலுக்கொண்ட ஒருவர் ஐந்து நாட்களாக அமைதிகாப்பதுடன் அவரது சகாக்கள் அரசின் பக்கமே பந்தைப் பரிமாற்ற முயற்சிப்பதும் தமிழ் அரசியல் சாணக்கியம் என்றாகுமா?

அரசயில் கைதிகளை பிணையில் விடுதலை செய்து அவர்கள் உரிய திகதிகளில் நீதிமன்றுக்கு வருகை தரப் பண்ணும் ஆற்றல் தற்போதுள்ள நிலையில் காவல்துறை உட்பட அரச இயந்திரத்திற்கு உள்ளது. எனவே அவர்களை நிபந்தனையின் பேரிலாவது விடுதலை செய்யக் கூடிய வாய்ப்பு உள்ளது என்பதையாவது சனாதிபதிக்கு எடுத்துச் சொல்லப் பலநாட்கள் தேவையா என்பதையிட்டு சிந்திப்பது யார்?.......

# குளவிக் கொட்டும் கஞ்சாவும் திருமலையில் அதிகரிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களில் குளவித் தாக்குதலுக்கு உள்ளாகி சுமார் அறுவர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிக்குஞ்சுமலைப் பகுதியில் திருகோணமலை நகரசபையில் சுகாதார ஊழியராக கடமையாற்றுகின்ற கே.பிரகாஸ், கந்தளாய் வாத்தியகம பகுதியில் மீன் வியாபாரியான எம்.சுனில் சாந்த, மஹாதிவுல்வெவ பகுதியில் சுகதபாலகே சுமித் ஆகிய மூவரும் கடந்த செவ்வாய்க்கிழமை குளவிக் கொட்டுக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை பனை மரத்திலிருந்த குளவிக்கூடு கலைந்து, வீதியில் சென்று கொண்டிருந்த ஏ.எஸ்.சம்சுதீன், எம்.இ.நௌபீஸ் முகம்மட் நிப்றாஸ் ஆகியோர் குளவிக் கொட்டுக்குள்ளாகி கந்தளாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கந்தளாய்ப் பகுதியில் ஒரு கிலோகிராம் கஞ்சா வைத்திருந்த ஒருவரும், குமரக் கடவை (கோமரங்கடவல) ஏழு கிராம் கஞ்சா வைத்திருந்த ஊர்காவல் படைவீரர் ஒருவரும் கைதாகிஉள்ளனர்.



சம்பூர்

## "பன்றி வெடியில்" சிக்கிய சிறுவர்கள் படுகாயம்

சம்பூர் நீனாக்கேணி கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்கள் இருவர் பன்றிக்குச் செய்த வெடியில் சிக்கிப் படுகாயம் அடைந்துள்ளனர்.

சந்திரசேகரன் குமரன் (வயது 13),சிவபால் விதுஸ்கன்(வயது 13) ஆகிய சிறுவர்களே இவ்வாறு படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். குறித்த இரண்டு சிறுவர்களும் பாடசாலை விட்டு வரும் வழியில் வீதியில் கிடந்த உருளை வடிவிலான பொருளொன்றை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்று எறிந்து விளையாடிய போதே அது வெடித்துள்ளது.

திரியாய்

## யானை மரணம் தமிழ் விவசாயிகள் கைது

திரியாய் கட்டுக்குளம் பிரதேசத்தில் யானையொன்று மரணமானதைத் தொடர்ந்து இரண்டு தமிழின விவசாயிகள் காவல்துறையால் கைதாகியுள்ளனர்.

கடந்த 14ம் திகதி வனசீவராசிகள் திணைக்களத்தினர் குச்சவெளி காவல்துறையில் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து கட்டுக்குளம்பிரதேசத்தைச் சேர்ந்த கந்தையா தியாகலிங்கம் (வயது 55) மற்றும் மகனான தியாகலிங்கம் ராசா (வயது 26) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளர்.

யானையின் இறப்பிற்குக் காரணம் மின்சாரம் அந்த யானையின் மீது பாய்ச்சப்பட்டதே எனத் தெரிவித்துள்ள வனசீவராசிகள் திணைக்களத்தினர் மின்சாரம் பாய்ச்சுவதற்குப் பயன்படுத்திய மின் வடத்தைக் கைப்பற்றயதை அடுத்தே மேற்படி இருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

## "வர்ஷனம்" இணைய வழி விளம்பர சேவை ஆரம்பம்

இலங்கை மற்றும் வெளிநாடுகளுக்கான முதலாவது ஒரே ஒரு தமிழ் மொழி மூலமான இணைய விளம்பர சேவை வர்ஷனம்.கொம், 22.10.2015 விஜயதசமி தினம் முதல் தனது சேவையை இலங்கையில் இருந்து ஆரம்பிக்கின்றது.

இணைய விளம்பர சேவை, வியாபார ஸ்தாபனங்களைப் பதிவு செய்தல், வணிக மற்றும் தொழிநுட்ப செய்திகளை வழங்கல் ஆகிய மூன்று பிரதான சேவைகளை மையமாகக் கொண்டு இச் சேவை நடைபெறவிருப்பதாக அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு.வ.வாகீசன் தெரிவித்தார்.

"எதிர்கால விளம்பரம்" என்பதைத் தனது தொனிப்பொருளாகக்கொண்டு செயற்படும் "வர்ஷனம்.கொம்" சேவையின் துரித தொலைபேசி இலக்கம் 0094 77 88 66 444 மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என திரு.வாகீசன் தெரிவித்தார்.

## வாய்மைக்களம் விவாதப் போட்டி

## இந்துக் கல்லூரி முதலிடம் – செல்வநாயகபுரம் தமிழ் மகா வித்தியாலயம் இரண்டாமிடம்

கதிரவன் - அச்சுதன்

திருகோணமலை மாவட்டப் பலகலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நடாத்தப்பட்ட "வாய்மைக்களம்" விவாதப் போட்டியில் இந்துக்கல்லூரி முதலிடத்தையும் , செல்வநாயகபுரம் தமிழ் மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த 10ம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம், மேல்நீதிமன்ற நீதிபதி சசிமகேந்திரன், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) குமரகுரு ஆகியோர் கலந்துகொண்டதுடன் அனுசரணையை எம்ஜசி கணணி நிறுவன உரிமையாளர் ராஜ் சுதர்சன் வழங்கியதுடன் பரிசளிப்பு விழா மண்டப அனுசரணையை சண்சைன் திருமண மண்டப நிர்வாகி சுரேஸ் வழங்கியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
மட்டக்களப்பு செய்திகள்

# சிறைச்சாலை கைதிகளின் உடல்நிலை பாதிப்பு




சிறிநேசன் பா.உ

தங்களின் நிலைமையையும் தமது குடும்ப நிலைமையையும் அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தி தங்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மட்டக்களப்பு சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல்க் கைதிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள 09 தமிழ் அரசியல் கைதிகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் கடந்த புதன்கிழமை சென்று பார்வையிட்ட போதே, நாடாளுமன்ற உறுப்பினரிடம் கைதிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், "உண்ணா-விரதத்தில் ஈடுபட்டுள்ள கைதிகள் சோர்வடைந்து காணப்படுகின்றனர்" என்றார்.

மேலும், குற்றம் செய்யாத தாம் சிறையில் வாடுவதாக அக்கைதிகள் கூறினர். தமது மனைவி, பிள்ளைகள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகின்றது. தாம் வெளியில் இருந்தால், ஏதாவது தொழில் செய்து பிள்ளைகளின் கல்வியைக் கவனிப்போம்.

தமது விடுதலைக்காக சட்டத்தரணிகளுக்கு கொடுப்பதற்கு தங்களிடம் பணம் இல்லையெனவும் அக்கைதிகள் கூறினர்" எனத் தெரிவித்தார்.

## அரச அதிகாரிகள் விசாரணை

# பெரும்பான்மையினரின் கையகப்படுத்தலில் உள்ள தமிழ், முஸ்லிம் காணிகள்

காணிப் பிரச்சினை தொடர்பாக அரச அதிகாரிகள் நேரில் சென்று விசாரணைகள் நடாத்தியுள்ளனர்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்-துரைகளுக்கமைய ஆலையடிவேம்பு மற்றும் தமண பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட எல்லைப் பிரதேசங்க-ளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை நேரில் சென்ற அரச அதிகாரிகள் காணிப் பிரச்சினை தொடர்பாக பார்வையிட்டதுடன் விசாரணையிலும் ஈடுபட்டனர். இதன்போது, ஆலையடிவேம்பு மற்றும் தமண பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லைக் கிராமமான பாவாபுரம் வயற்பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான நெற்காணிகளில் தமண பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெஹெரகல (மாந்தோட்டம்) கிராமத்தைச் சேர்ந்த பெரும்பான்மை-யினத்தவர்கள் அத்துமீறி நெற்செய்கையில் ஈடுபடுவது குறித்து ஆராயப்பட்டது. மேலும், தமிழ், முஸ்லிம் மக்களை அப்பிரதேசத்துக்குள் நுழையவிடாமல் தடுத்து அடாவடித்தனங்களில் ஈடுபடுவது குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்-பட்டன.

# 26%மான மாணவர்கள் போதைப்பழக்கத்திற்கு அடிமை



மதுபானம் மற்றும் புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி ஜோசப் பரராஜசிங்கம் நினைவு மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வாலிபப் பருவத்திலுள்ள மாணவர்களில் 26 சதவீதமானோர் மதுபானம் மற்றும் புகைப் பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாக மட்டக்களப்பு மாநகர சபையின் சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.தேவநேசன் தெரிவித்தார்.

பல்லூடகத் திரையில் மாணவர்களுக்கு விளக்கமளித்த அவர், "போதைப்பொருள் பாவிப்போர் எப்போதும் மன அழுத்தம் மற்றும் மன இறுக்கத்துக்கு உள்ளாகுவர். எதிர்காலத் தலைவர்களாக திகழவுள்ள மாணவர்கள் சுகாதாரமிக்க மாணவர்களாக வாழ்ந்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ வேண்டும்" என தெரிவித்தார்.

## மண் அகழ்வை தற்காலிகமாக நிறுத்துமாறு வேண்டுகோள்

மட்டக்களப்பு மாவட்ட பொதுமக்கள், அமைச்சரை சந்தித்து புகார் தெரிவித்ததை அடுத்து பிரதி அமைச்சர் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் மணல் அகழ்வை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பொறுப்பான காவல் அத்தியட்சகர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இங்கு அகழப்படும் மணலானது வெளிமாவட்டங்களில் அதிக தொகைக்கு விற்கப்படுவதனால், மட்டக்களப்பு மாவட்டத்தில் மணல் தேவை உடையோருக்கு அதைப் பெற்றுக்கொள்வதில் சிரமத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் மண் அகழ்விற்கு அரச அதிகாரிகள் மற்றும் பூகோல விஞ்ஞான திணைக்களத்தின் உத்தியோகத்தவர்கள் உதவி செய்வதாகவும் அவர்கள் பிரதி அமைச்சரிடம் முறையிட்டனர்.

## மட்டுக்கு விஜயமாகிறார் சனாதிபதி

சனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (27.10.2015) மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளதாக மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கடந்த புதன்கிழமை தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்யும் சனாதிபதி அன்றைய தினம் மட்டக்களப்பு மங்களராமய பௌத்த விகாரையில் நடைபெறும் தம்ம போதனை வைபவத்தில் கலந்து கொள்வதுடன் மட்டக்களப்பிலுள்ள ஏனைய மத வழிபாட்டுத் தளங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார் என்றார்.

## இடமாற்றம்




கிழக்கு மாகாண சிரேஸ்ட காவல் அதியட்சகராக யாழ் மாவட்ட சிரேஸ்ட காவல் அத்தியட்சர் லலித் ஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண சிரேஸ்ட காவல் அத்தியட்சகராக கடமையாற்றிய டபிள்யு.என்.பெர்ணான்டோ யாழ் குடாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் எதிர்வரும் வியாழக்கிழமை கடமையினை பொறுப்பேற்கவுள்ளதாக காவல்துறை தலைமையகம் அறிவித்துள்ளது.

## இரண்டரை வருடங்களாகியும் பெண் வீடு திரும்பவில்லை

கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலை நகர்க் கிராமத்தில் கடந்த இரண்டரை வருடங்களுக்கு முன்னர் காணாமல் போன மாணவியைக் கண்டுபிடிக்கக் கோரி கல்குடா உலமா சபையின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகையின் பின்னர் பேரணி இடம்பெற்றது. இம்மாணவி காணாமல்போய் இரண்டரை வருடங்களாகியபோதிலும், அம்மாணவி பற்றிய எந்தவித தகவலும் இதுவரையில் கிடைக்கவில்லை. 27.03.2013 அன்று பாடசாலைக்குச் சென்றவர் இன்றுவரை வீடு திரும்பவில்லை. இதனைத் தொடர்ந்து கல்குடா உலமா சபையிடம் பெற்றோர் முன்வைத்த கோரிக்கையைத் தொடர்ந்து பேரணி முன்னெடுக்கப்பட்டது.

## வெள்ளைப் பிரம்பு தின விழிப்புணர்வு பேரணி

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி கழகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் அத்துடன் கல்லடி உதயம் விழிப்புலனற்றோர் என்பன இணைந்து கடந்த வியாழக்கிழமை விழிப்புணர்வு பேரணி ஒன்றினை நடாத்தப்பட்டது. இப் பேரணியானது களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளரும் கல்முனை நார லயன்ஸ் கழகத்தின் தலைவருமான லயன் கலாநிதி எம்.கோபாலரெத்தினம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



## அடையாள உண்ணாவிரதத்திற்கு அழைப்பு



தங்களது விடுதலை வேண்டி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் எதிர்வரும் சனிக்கிழமை அடையாள உண்ணாவிரதம் ஒன்றுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் துணைத் தலைவருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) அழைப்பு விடுத்துள்ளார். சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறலுக்கு எதிரானதும் மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரானதும் சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையிலும் பல வருடங்களாக எவ்வித சட்ட நிவாரணமுமின்றி சிறையில் எம் தமிழர் வாடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது எவ்வித அரசியல் சார்பான நிகழ்வல்ல என்பதையும், நீதி மறுக்கப்பட்டவர்களுக்கான நீதியினை பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு எனவும் தெரிவித்துள்ளார்.

## சிறுவர்களின் பாதுகாப்பு

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை இல்லாமல் செய்யும் வேலைத்திட்டத்தின் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற போது சிறுவர் தொழில்களில் அமர்த்துதல், அதற்கெதிரான நடவடிக்கைகள், சிறுவர் தொழிலைக் குறைத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கம் வழங்கப்பட்டதுடன், கலந்துரையாடலும் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இலங்கைச் செய்திகள்

# மகிந்தவின் எதிர்ப்பு நிராகரிப்பு

## மீண்டும் விசாரணைக்கு அழைப்பு

பாரிய மோசடிகள் மற்றும் ஊழல் தொடர்பான ஜனாதிபதியின் ஈணைக்குழுவில் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் கடந்த வியாழக்கிழமை முன்னிலையாகியுள்ளார். எனினும் இந்த ஆணைக்குழுவுக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்றும், அதனால் மகிந்தவை அழைக்க முடியாது என்றும் மகிந்தவின் தரப்பினர் தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து அன்றைய விசாரணைகள் பிற்போடப்பட்டன.

மகிந்த தரப்பு முன்வைத்த குற்றச்சாட்டை மறுத்துள்ள ஆணைக்குழு தற்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை விசாரணைக்கு உட்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது




## கியூபா மீதான தடையை நீக்க ஜே.வி.பி கோரிக்கை

கியூபா மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை நீக்குமாறு ஜே.வி.பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திடம் நேற்று வெள்ளிக்கிழமை மனு கையளித்துள்ளனர். முற்றுகை நாளை முன்னிட்டு இந்த மனுவை அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபை உறுப்பினர் ஆகியோர் கையளித்துள்ளனர் கியூபா மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை இராஜதந்திர உறவுகளுக்குப் பின்னர் நீக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்திருந்த போதிலும், அந்த தடைகள் இதுவரையிலும் நீக்கப்படவில்லை என்று சுனில் ஹந்துநெத்தி எம்.பி குற்றம் சாட்டினார்.

## அதிகளவு இலஞ்சம் பெற்ற பெருமை

### சுங்க அதிகாரிகளுக்கே

அதிகளவில் இலஞ்சம் பெற்றதாக கைது செய்யப்பட்ட சுங்க அதிகாரிகள் மூவரும் இம்மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சுங்க அதிகாரி சுஜீவ பராகிரம ஜுனதாஸ, பிரதி சுங்க அதிகாரி ஜகத் குணதிலக, உதவி சுங்க அதிகாரி எம்.டீ.யூ.ஜீ. மற்றும் பெரேரா ஆகியோர் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

குறித்த சந்தேக நபர்கள் மூவரையும் நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

125 மில்லியன் ரூபாய் இலஞ்சமாக பெற்றதாக குற்றச்சாட்டில் கைது-செய்யப்பட்டனர்.

இலங்கை வரலாற்றில் அதிகமாக பெறப்பட்ட இலஞ்சத் தொகை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## போலி நாணயத் தாள்களுடன் 48 வயதானவர் கைது

5000 ரூபா பெறுமதியுடைய 71 போலி நாணயத்தாள்களுடன் சந்தேகநபர் ஒருவர் பதுளை நகரில் கைதுசெய்யப்-பட்டுள்ளார்.

கிடைத்த தகவலொன்றின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் மூலம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிடுகின்றது. சந்தேக நபரிடமிருந்து 100 அமெரிக்க டொலர் பெறுமதியுடைய 20 நாணயத் தாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் போலி நாணயத்-தாள்களுடன் 48 வயதான ராகல பகுதியைச் சேர்ந்த ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## மேர்வினுக்கு கொலை அச்சுறுத்தல்



முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. தமக்கு இந்த முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதாக நாரஹன்பிட்டி காவல்-துறையினர் நேற்று கொழும்பு மேலதிக நீதிவானிடம் தெரிவித்தனர். இனந்தெரியாதவர்கள் தொலைபேசியின் மூலம் தமது கொலை அச்சுறுத்தல் விடுப்பதாக மேர்வின் சில்வா முறையிட்டுள்ளார். இந்தநிலையில் மேர்வின் சில்வாவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களை பெற்றுத்தருமாறு நீதிவான் தொலைபேசி நிறுவனத்துக்கு உத்தரவிட்டார்.

## பிணை கிடைத்தும் வெளி வர முடியவில்லை

நேற்று வெள்ளி அன்று தடுப்பு காவலில் வைக்க உத்தரவிடப்பட்ட புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்த பெரேராவுக்கு சிலாபம் நீதிமன்றம் பிணை வழங்கிய போதும், மீண்டும் அவர் சிறைக்கே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவரை 25 ஆயிரம் ரூபாய் றொக்க பிணையிலும், இரண்டரை லட்சம் பெறுமதியான இரண்டு சரீர பிணையிலும் வெளியில் செல்ல சிலாபம் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. எனினும் சரீர பிணையை வழங்குவதற்கு முன்வந்தவர்களால் சொத்து விபரங்களை அறிவிக்க முடியாத நிலை ஏற்பட்டதால், நாடாளுமன்ற உறுப்பினர் மீண்டும் சிறைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

## அவன்ற் கார்ட் சம்பவம் தொடர்பிலான விசாரணை திருப்தியளிக்கவில்லை

### - சனாதிபதி -

அவன்ற் கார்ட் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் குறித்து ஜனாதிபதிக்கு திருப்தியற்ற நிலைமை காணப்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதனால் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இந்த விடயத்தில் தலையீடு செய்வார் எனவும் அமைச்சர் இதன் போது மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, காலி துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள அவன்ற் கார்ட் மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவு இன்னும் விசாரணைகளை ஆரம்பிக்கவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.



## கொலையாளிகளுக்கு மரண தண்டனை

மாத்தளை - ரத்தொட்ட பகுதியில் 30 வயதான தமது மனைவியை கொலை செய்த நபர் ஒருவருக்கும் அவரது தாயாருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கண்டி மேல் நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியது. 2009ம் ஆண்டு இந்த கொலை இம்பெற்றது.

சந்தேக நபரான கணவர், அவரது தாயாரால் வழங்கப்பட்ட துப்பாக்கியில் தமது மனைவியை சுட்டு பின்னர் ஆயுதம் ஒன்றில் தாக்கி கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் பிள்ளை வழங்கிய சாட்சியின் அடிப்படையிலேயே இந்த குற்றம் நிரூபிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் அரசியல் கைதிகளை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும்

தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் இருக்கும் பட்சத்தில் பெருமளவில் பாதிக்கப்படுவது பெண்களே என மனித உரிமை செயற்பாட்டாளர் நளினி குறிப்பிட்டுள்ளார். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஐபிசி தமிழ் செய்திகளுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## அன்று போல் இன்று ஊடக சுதந்திரம் இல்லை

### நா.உ மகிந்த ராஜபக்ஷ



ஆணைக்குழுவுக்கு மேல்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்று மகிந்த தரப்பின் சட்டத்தரணிகள் கடந்த வியாழக்கிழமை அடிப்படை எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனை அடுத்து விசாரணை ஆணைக்குழுவின் நடவடிக்கை நேற்று வரையில் பிற்போடப்பட்டது. எனினும் நேற்று தமது செயற்பாடுகளை ஆரம்பித்த ஆணைக்குழு, மகிந்த தரப்பின் எதிர்ப்பை நிராகரித்தது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது விளம்பரங்களை ஒளிபரப்பியமைக்கான 200 மில்லியனுக்கும் அதிக கட்டணத்தை சுயாதீன தொலைக்காட்சிக்கு செலுத்தப்படாமை தொடர்பில் இந்த விசாரணை இடம்பெற்றது.

இரண்டு மணிநேர விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, நீதிமன்றத்தை போன்று இது சாட்சியளிக்கும் விசாரணை இல்லை என்றும், இங்கு விளக்கமளிப்பு மாத்திரமே கோரப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தாம் கூறுகின்ற எந்த விடயமும் முழுமையாக ஊடகங்களில் ஒளிபரப்படுவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எனவே தாம் சில விடயங்களை கூறாமல் விடுவது, ஊடகவியலாளர்களுக்கும், ஊடக நிறுவனங்களுக்கும் நன்மையாக இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

ஆனால் அன்றிருந்தது போல் ஊடக சுதந்திரம் தற்போது இல்லை என்பதை தெளிவாக கூற முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

# அமெரிக்க ஆவணங்கள் திருடியவர் கைது

ஐ எஸ் ஆயுததாரிகளுக்காக இணைய வழி ஊடுருவல் மூலம் அமெரிக்க ஆவணங்களை திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்ட கொசோவோ நாட்டு பிரஜையை மலேஷிய அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

20 வயதுடைய ஆடீட் ்.பேரிஸி என்ற குறித்த இளைஞர் கடந்த செப்டெம்பர் 15 ஆம் திகதி தடுத்து வைக்கப்பட்டதாக மலேஷிய காவல்துறையினரால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கொசோவோ இணைய ஊடுருவல் பாதுகாப்பு குழுவின் தலைவரே கைதுசெய்யப்பட்ட இளைஞர் என அமெரிக்க காவல்துறையினர் அடையாளம் கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது
குறித்த இளைஞர் அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்படவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
இணையவழி ஊடுருவல் மற்றும் திருட்டு குற்றச்சாட்டுக்கள் அவருக்கு எதிராக பதிவுசெய்யப்படவுள்ளதுடன், இந்த குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாக காணப்படும் பட்சத்தில் குறித்த இளைஞருக்கு 35 வருட சிறைத் தண்டனை விதிக்கப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## போகோ ஹராமுக்கு அச்சுறுத்தல்

### கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்வரை படை நிலைக்கும்

கெமரூனில் மோதல்களில் ஈடுபட்டு வரும் இஸ்லாமிய போராளிகளான போகோ ஹராமுக்கு எதிராக அமெரிக்க படைகளை ஈடுபடுத்தவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி அறிவித்துள்ளார். கெமரூன் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் அமெரிக்க படையினர் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.
இதன்படி, புலனாய்வாளர்கள், உளவுத்துறையினர், நுணங்கு மேற்பார்வையாளர்கள், உட்பட 300 க்கும் மேற்பட்ட அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். கெமரூன் மற்றும் சாட் ஆகிய பிராந்தியங்கள் நைஜீரியாவிலிருந்து செயற்படும் போகோ ஹராம் போராளிகளால் இலக்கு வைக்கப்பட்டுள்ளன.



## பள்ளிவாசல் மீது இரட்டைத் தாக்குதல்

நைஜீரிய பள்ளிவாசல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட இரட்டை தாக்குதலில் 30 பேர் பலியாகினர். சம்பவத்தில் மேலும் பலர் காயமடைந்துள்ளதாக நைஜீரிய தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

போகோ ஹராம் தீவிரவாத அமைப்பை இலக்கு வைத்தே இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.


எனினும் குறித்த தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரை எந்தவித அமைப்பும் உரிமை கோரவில்லை.

## ஐரோப்பிய ஒன்றியம் பச்சைக்கொடி

அகதிகள் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு துருக்கி அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட கூட்டு நடவடிக்கை திட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.



பெல்ஜியத் தலைநகர் பிரசல்ஸ்சில் கடந்த வியாழக்கிழமை ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களிடையே இது தொடர்பிலான முக்கிய சுற்றுப் பேச்சு நடைபெற்றுள்ளது.
இந்த ஆண்டு மாத்திரம் சுமார் 6 இலட்சம் புலம்பெயர்வோர் ஐரோப்பிய நாடுகளுக்குள் பிரவேசித்துள்ளனர். இவர்களில் துருக்கியிலிருந்து சென்றவர்களே அதிகம் என்றும் கூறப்படுகின்றது.
இந்த நிலையில் அகதிகளின் சட்டவிரோத பிரவேசத்தைத் தவிர்ப்பதற்காக துருக்கி அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் உதவிகோரியிருந்த நிலையிலேயே இந்த திட்டத்தை அங்கீகரிப்பதாக ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் டொனால்ட் டாஸ்க்



## சமாதான ஒப்பந்தம் கைச்சாத்து

நாடாளாவிய ரீதியிலான சமாதான ஒப்பந்தம் என்று மியான்மார் அரசாங்கத்தினால் கூறப்படும் ஒப்பந்தத்தை, ஆயுதம் தரித்த எட்டு இனக்குழுக்களுடன் மியான்மார் அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது.
இரண்டு ஆண்டுகளாக இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முடிவிலேயே, இந்த ஒப்பந்தம் மியான்மார் தலைநகரம் நே பி டோவில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. எனினும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் 15 குழுக்கள் பங்குபற்றியிருந்த-போதும், அதில் ஏழு குழுக்கள் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கவில்லை.
இருப்பினும் அன்று கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம், நீடித்த அரசியல் தீர்வுக்கான முதற்படியாக இருக்குமென்று மியான்மார் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## சிறைச்சாலைக்குள் தொ.பேசி கடத்தல்

மாலை வேளையொன்றில் பிரேசிலியாவில் பபுடா சிறைச்சாலையிலிருந்து வெளியில் செல்வ தற்கு அனுமதிக்கப்பட்டதையடுத்து, மேற்படி கைதி கையடக்கத் தொலைபேசியையும் உபகரணங்களையும் விழுங்கி சிறைச்சாலைக்குள் கடத்த முயற்சித்துள்ளார்.
இந்நிலையில் அச்சிறைச்சாலை யிலுள்ள எக்ஸ்ரே ஊடுகாட்டும் கருவியை அவர் கடந்து சென்ற போது, அவரது வயிற்றில் கையடக்கத்தொலை பேசிகளும் ஏனைய உபகரணங்களும் இருப்பது அம்பலமாகி அதிகாரிகளிடம் சிக்கியுள்ளார்.

## ஐ.எஸ்.ஐ இன் வருவாய் 300மில். பவுண்டுகள்

ஐ.எஸ்.தீவிரவாத குழுவின் ஆண்டு வருவாய் 320 மில்லியன் பவுண்டுகளை தாண்டும் என அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.
ஈராக் மற்றும் சிரியாவின் ஒட்டு மொத்த எண்ணெய் கிணறுகளையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஐ.எஸ்.தீவிரவாதிகள் நாள் ஒன்றுக்கு 40 ஆயிரம் பீப்பாய்கள் வரை எண்ணெய் உற்பத்தி செய்கின்றனராம். இதனால் தினமும் ஒரு மில்லியன் பவுண்டுகள் வருவாய் ஈட்டுவதாக கூறப்படுகிறது.



கிளர்ச்சி படைகளின் தலைவர்களே ஐ.எஸ்.தீவிரவாதிகளிடம் இருந்து எண்ணெய் வாங்க நிர்பந்திக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.
ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு நூற்றுக்கணக்கான எண்ணெய் சுத்தீகரிப்பு நிலையங்கள் இருப்பதாக அமெரிக்க கூட்டுப்படைகளின் அதிகாரிகளே உறுதி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச குற்ற விசாரணை

ரஷ்யா மற்றும் ஜோர்ஜியா ஆகிய நாடுகளுக்கு இடையில் இடம்பெற்ற மோதல்களின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச குற்றவிசாரணை நீதிமன்றம் விசாரணை நடத்தவுள்ளது.
சர்வதேச குற்றவிசாரணை நீதிமன்றத்தின் சட்டவல்லுனரான வாடோவ் பென்சவுடா இந்த தகவலை வெளியிட்டுள்ளார். 2008ம் ஆண்டு தென் ஒசெட்டியா பகுதியை மையமாக கொண்டு இடம்பெற்ற மோதல் நிலைமைகள் தொடர்பாகவே முக்கியமாக விசாரணை நடத்தப்படவுள்ளது.

## சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் குறிப்புகள் ஜனவரியில் வெளியிடப்படும்

புரட்சித் தலைவர் சுபாஷ் சந்திரபோஸ் தொடர்பான முக்கிய கோப்புக்களை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வெளியிடப்போவதாக இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது. கடந்த 1945ஆம் ஆண்டு விமான விபத்தொன்றில் அவர் மரணமடைந்தது தொடர்பான உத்தியோகபூர்வமான தரவுகளை இந்தியாவிலிருந்த சிலர் கோரியிருந்தனர். இந்தியாவிலிருந்து பிரித்தானியாவை விரட்டியடிப்பதுக்காக, ஜேர்மனியையும், அடோல்ப் ஹிட்லரையும் நாடியிருந்த அவர் எதிரணிப் படைகளால் வேண்டப்பட்டவராக இருந்தார். அவரது மரணம் தொடர்பாக பல சதிக் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறிருக்கையில் அரசாங்கம் வெளியிடப்படாத 39 கோப்புக்களை வைத்திருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கடந்த புதன்கிழமை டெல்லியில் சுபாஷ் சந்திர போஸின் குடும்ப உறுப்பினர்கள் 35 பேரைச் சந்தித்த பின்னரே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கோப்புக்களை வெளியிடுவதுக்கான அறிவிப்பை மேற்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU



# தாயகச் செய்திகள்

## அரியாலையில் இரு எலும்புக்கூடுகள் கண்டெடுப்பு

யாழ்.அரியாலை முள்ளி பகுதியில் மணல் அகழ்ந்து கொண்டிருந்தவர்களால் இரு மனித எலும்பு கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு பெண்கள் அணியும் ஆடைகள், பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபடும் சிலர் குறித்த எலும்பு கூடுகளை கண்டெடுத்த போதும் அவை பற்றி வெளியில் சொல்லாதிருந்த நிலையில் குறித்த பகுதியில் முயல் பிடிக்கச் சென்றிருந்த ஒருவர் விடயத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு முன்னாள் நா.உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் மற்றும் கஜேந்திரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் இரு பெண்களின் புதைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

மேலும் மீட்கப்பட்ட எலும்பு கூட்டின் மண்டை ஓட்டில் சூட்டு காயம் ஒன்றும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வலிவடக்கில் வீடுகள் விடுவிப்பு

### - பிரதேச செயலாளரிடம் கையளிப்பு -

வலி வடக்கு பிரதேசத்தில் இராணுவம் ஆக்கிரமித்திருந்த இடங்களை அண்மைக்காலமாக விடுவிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஓர் அங்கமாக கீரிமலையில் அமைந்திருந்த கடற்படை முகாம் இன்று அகற்றப்பட்டுள்ளதுடன் உரிய வீடுகளும் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கீரிமலை கேணிக்கு அண்மையாக மூன்று வீடுகளில் கடற்படையினர் நிலை கொண்டிருந்தனர்.

இதில் ஒரு வீடு ஏற்கனவே உரியவர்களிடம் கையளிக்கப்பட்ட நிலையில் மிகுதியாகவுள்ள இரண்டு வீடுகளும் கடநந்த திங்கட்கிழமை வலி வடக்கு பிரதேச செயலாளர் க.ஸ்ரீமோகனன்னிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து வீடுகள் காணிகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.



## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இன்றைய தினம் நண்பகல் 12 மணியளவில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

இதில் கலைப்பீட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர். சுமார் 20 நிமிடங்கள் இந்த போராட்டம் நடைபெற்றது எனத் தெரிகின்றது.

## மாமியாரை அடித்தமைக்கு சிறைத் தண்டனை



மாமியாரைத் தாக்கி காயப்படுத்திய மருமகனுக்கு 3 மாதகாலங்கள் சிறைத்தண்டனை விதித்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி.ஸ்ரீநிதி நந்தசேகரன், கடந்த புதன்கிழமை தீர்ப்பளித்தார்.

மந்துவில் கிழக்குப் பகுதியில் கடந்த செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில், படுகாயமடைந்த மாமியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது.

## கணவரே மனைவியை வெ.வானில் கடத்தினார்

வடமராட்சியில் வல்வெட்டித்துறை கம்பர்மலை பகுதியில் கடந்த புதன்கிழமை கடத்தப்பட்ட குடும்பப் பெண், மறுநாள் வியாழக்கிழமை காலை புத்தூர் பகுதியிலுள்ள சட்டத்தரணி ஒருவரின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

கடத்தலுக்கு காரணமான அவரது கணவர் உட்பட 9 பேரை வல்வெட்டித்துறை இரகசியப் காவல்துறையினர் கைது செய்துள்ளதாக காங்கேசன்துறை பிராந்தியத்துக்கு பொறுப்பான உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெற்று வரும் வழக்கு நடவடிக்கைக்கு தாயாருடன் சென்று விட்டு திரும்பிய இ.ஜானகி எனபவரே கடத்திச் செல்லப்பட்டவராகும்.

இக்கடத்தலுக்கு கணவர் 25,000 ரூபாய் கூலியாக கொடுத்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்தவர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் காவல்துறையினர், குறித்த நபர்களை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

## யுத்தம் முடிந்தும் மீனவர்களுக்கு விடிவில்லை

வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக 10 அம்சக் கோரிக்கைகளை வடமாகாண கடற்தொழிலாளர்கள் இணையம் கடந்த வியாழக்கிழமை மக்கள் பிரதிநிதிகளிடம் கையளித்தது.

வடமாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் ஏற்பாட்டில் வவுனியா விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்ற வடமாகாண மீனவர் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வின் போதே இது கையளிக்கப்பட்டது.

யுத்தம் முடிவடைந்து 6 வருடங்கள் கடந்த நிலையிலும் வடபகுதி மீனவர்கள் பல பிரச்சினைகளை முகங்கொடுத்து வருகின்றனர்.

## கிராமசேவையாளர்களும் காவல் பணியில்

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு, கிராம சேவையாளர்களை காவல்துறை கடமை புரியும் அதிகாரிகளாக நியமனம் செய்யுமாறு அந்த மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.



யாழ்ப்பாணத்தில் நீதிமன்றத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்குகள் மீதான விசாரணையையடுத்து வழங்கப்பட்ட தீர்ப்பிலேயே, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் இவ்வாறு பரிந்துரைத்திருக்கின்றார்.

அந்தப் பரிந்துரையில் மேலும் தெரிவித்ததாவது, யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் அதிக அளவில் இடம்பெறுகின்ற குற்றச் செயலகளைக் கட்டுப்படுத்த காவல்துறையினர் மட்டும் கடமையைச் செய்தால் போதாது என்றார்.

## வேட்டி உட்பட அனைத்தும் திருட்டு

யாழ்.கல்வியங்காட்டுச் சந்தியில் கடந்த புதன்கிழமை இரவு தனிமையில் நின்றிருந்த முதியவரை, இனந்தெரியாத சிலர் கடத்திச் சென்று செம்மணிப் பகுதியில் வைத்து, அவர் அணிந்திருந்த நகைகள், அலைபேசி என்பவற்றைப் பறித்த பின்னர், அவர் அணிந்திருந்த வேட்டியையும் அவிழ்த்துச் சென்றுள்ளதாக கோப்பாய் காவல்துறையினர் தெரிவித்தனர்.

கடத்திய போது, அவர் முகத்தில் இரசாயனப் பதார்த்தத்தை வீசியதால், அவர் நிலைதடுமாறிய நிலையில் மறுநாள் வியாழக்கிழமை வீடு சென்று சேர்ந்துள்ளார்.

தன்னைக் முதலில் துவிச்சக்கர வண்டியில் கடத்தியதாகக் கூறிய முதியவர், பின்னர் வானில் கடத்தியதாகக் கூறுவதால், தெளிவான வாக்குமூலத்தை முதியவரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாக காவல்துறையினர் கூறினர்.

## சாதிப்பிரச்சினையை ஒழிக்க வேண்டும்

வடக்கில் தற்போது பல கிராமங்களில் சாதிப் பிரச்சினை தலைத்தூக்கியுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார். விடுதலைப் போராளிகள் இருந்த போது இல்லாத சாதிப் பிரச்சினைகள், தற்போது தலைதூக்கி உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

## புல் வெட்டச் சென்றவர் சடலமாக

மூளாய் சுழிபுரம் பகுதியிலுள்ள வயலில், புல்லு வெட்டுவதற்கு கடந்த வியாழக்-கிழமை மாலை சென்றவர், வயல் கிணற்றிலிருந்து, நேற்று வெள்ளிக்கிழமை காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டைப் காவல்துறையினர் தெரிவித்தனர்.

அதேயிடத்தைச் சேர்ந்த ஆழ்வார் பாலகிருஸ்ணன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். மாட்டுக்குப் புல் வெட்டச் சென்றவர், தவறிக் கிணற்றுக்குள் வீழ்ந்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## மீள என் வீடு நோக்கிய பயணம்

நாங்கள் இருந்த தடங்கள்
எவையுமில்லை.

இறந்த எச்சங்களே
எஞ்சிக் கிடக்கின்றன.

எரிந்த வீடு
முறிந்த பனைகள்
உவர்ப்புச் சுவறிய
கிணற்று நீர்
ஓரிரண்டு
மண்டையோடுகள்

வெடித்துச் சிதறிய குண்டுகளின்
பின்னே
மிஞ்சியிருந்தன வீடுகள்

மரணம்
அலைந்து.. அலைந்து
கதவுகளை உடைத்து
சுவர்களில் மோதி
கூரைகளில் வெடித்தாடிய
ஊழித் தாண்டவத்தின் பின்
எஞ்சிய சாம்பல்மேடாய்
மிஞ்சிப்போன
எம் வீடுகள்.

விடலைப் பருவத்தின்
நாட்களைத் தொலைத்த
வீதிகளில் எல்லாம்
பற்றைகள் மூடிக்கிடந்தன.

பூசைப் பூக்களின்றி
முருகன் கோவில்.
மூலத்தான காவல் வேல்
களவு போய் கன நாட்கள்.

பிரதான மண்டபத்தில்
பலியிட்ட உயிர்களால்
நரமாமிசக் காளி
நடமாடிய பாடசாலை

பயிரிட வெதுவுமின்றிப்
பாழாய்ப்போய்க்கிடக்கிறது

நிலம்


என் நிலம்..

எனினும்
புதிதாய்த்தான் இருக்கிறது
மயானம்..

நேற்றும் இன்றும் நாளையும்
மறுநாளும்



மாயன்



## நகர வாழ்க்கை

அ. கௌரிதாசன்
ஆலங்கேணி கிழக்கு

நகர வாழ்க்கை எந்தனுக்கே
நரக வாழ்க்கை ஆனதே!
பகர முடியாத விதம்
பரிதவித்து நிற்கின்றேன்!

நீர்வழங்கள் நடவடிக்கை
நின்றுவிடும் சில கணம்!
வேர்வை யுடல் நாள்முழுவதும்
விசிறி துணை தேவையே!

பகலினிலே இலையான்கள்
படுத்தும் பாடு கொஞ்சமா?
பாலிரவில் நுளம்புத் தொல்லை
பகலைவிட மிஞ்சுமே!

மின்சார துண்டிப்பு
மின்விளக்கை அணைத்திடும்!
என்தாரம் மெழுகுதிரி
ஏற்ற ஒளி விழங்கிடும்!

சாலைகளில் ஊர்திகளின்
சத்தம் காதைத் துளைக்குமே!
வேலை வெட்டி இல்லை எனினும்
விட்டிருக்க இயலுமோ?

மரநிழலில் இருக்கையிலே
மனதினிலே மகிழ் வலை!
அறை நிழலி இருப்பதிலே
ஆர் பெருவார் மகிழ்வினை?

பட்டணத்து வாழ்க்கையிலே
பட்ட துயர் போதுமே!
விட்டுநகர் கிராமத்துக்கு
விரையவேண்டும் நாளையே!

## காட்டுமா?

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு - கிண்ணியா)

மாறும் உலகிலே உரிய
மாற்றம் தேவையே!
கூறும் தமிழரின் சிக்கல்
குறையும் மறையுமா?

சிக்கல் வருமென அன்று
தெரிந்திடாமலே
மிக்க வாழ்த்துக்கள் கூறி,
மேன்மை காட்டினோம்?

பொறுத்த தெவ்விதம்? மிகப்
பிந்திச் செய்த போர்
பொருத்தமற்றுமே விட்டுப்
போன தெவ்விதம்?

நம்பிக்கெட்ட நாம்
நம்பிப்பார்ப்பமா?
அம்புவியில் எம்பாடு
அமைதி காட்டுமா?

— .. — .. — .. —

## குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ள கூடாது

எய்தவன் இருக்க தைக்கும்
அம்பை நொந்து
என்ன பயன்

விதைத்தவனே அந்த
விளைவைப் பெற வேண்டும்
செய்த தீவினைக்கும்
விசாரணைக்கு முகம்
கொடுத்தாக வேண்டும்

கௌரவம் தராதரம்
காட்டுத் தர்பார்தாரருக்கு
கடுகளவும் பாராமல்
சட்டத்தின் முன்னாள்
தலை கவிழ வைக்க வேண்டும்

நீதி தேவதை வழங்கும்
தீர்ப்புக்கு ஆளாக வேண்டும்
நிச்சயம் குற்றவாளி
தப்பித்துக் கொள்ள கூடாது

தர்மம் நிலைக்கவும்
சம நீதி ஓங்கவும்
அதர்மம் அழியவும்
அமைதி தவழவும்
அவசியம் நல்லாட்சி
ஆனதைச் செய்ய வேண்டும்

சேனையூரான்
மூதூர் கிழக்கு

## மாதவம்

.பொறுப்பினை உணர்ந்தோம்
கடுமையாய் உழைத்தோம்

சூழலை பலப்படுத்திட
பொறுமையை அரவனைத்தோம

உரிமையை நிலை நாட்டிட
வீண் வன்மத்துக் கஞ்சோம்

ஆணாதிக்க போக்கினை
ஆணி வேறறுத்து
நல் புதிய மாற்றம்
கானும் புதமைகளாய்!

பெண்ணாகிய மாதவத்தில்
பெருமையில் பூரித்து.

திருமலை சுந்தா

— .. — .. — .. —

## என் தயங்குகிறாய்

ஏன் தயங்குகிறாய் ஐ.நாவே
ஏன் தயங்குகிறாய்!
அச்சமா அல்லது அசமந்தமா!

ஏன் தயங்குகிறாய்
தமிழர் நிலைகாண
கண் இழந்து உள்ளாயோ! - அல்ல
நாக்கவிழ்ந்து உள்ளாயோ!

தமிழர் நிலை காணொளியைக்
கண்டுமா
கனவாக்க விரும்புகிறாய்?
தாயின்றி உயிரில்லை
தமிழனின்றி
உலகமே இல்லை!!

((கிஷோ - லிங்கநகரான்))

— .. — .. — .. —

## காதல்

என் இதயஅறைக்குள்
பூட்டிவைத்த உன் நினைவுகள்
என் மனதில் மெல்ல மெல்ல
தொட்டு உரசுகின்றது...

அந்த நினைவுகள்
என் நினைவுகள்
எப்போதும்
உன் நினைவுகள்

என் வாழ்வில்
தென்றல் வீசுகிறது
அது எப்போதும் தொடருமா?

என் காதலனே
உன் பதிலை
என் வாழ்வினில் வந்து
ஒளியேற்றிவிடு

மேரி அன்ரூ
நாவற்சோலை

## பழமொழிகளின் பழம்பொருண்மைகள்




### 13. மார்கழி பீடை மாதம்

இப்படி சொல்லியிருப்பார்களா? இப்படி இருக்க முடியுமா? மாதங்களில் கண்ணன் மார்கழியாக இருப்பதாக பெருமையாக இம்மாதம் பேசப்படுகிறது. இறை அன்பர்களுக்கு இம்மாதம் உயர்ந்த மாதம்! கோயில்கள் எங்கும் இறையின்பத் திருவிளையாடல்கள் பெருமைக்குரிய மாதமாக இம்மாதம் திகழ்வதால், பெருமை எனப்பொருள்தரும் வகையில் மார்கழி பீடுடை மாதம் என்று பழமொழி அமைத்திருப்பர் நம் முன்னோர் என்பது பொருந்தும்.

### 14. தை பிறந்தால் வழி பிறக்கும்

இறைநிலையில் பீடுடை மாதமாக மார்கழி விளங்கினாலும் வேளாண் அடிப்படையிலான பொருளாதாரம் விளங்கும் நம் நாட்டில் தை மாதம் நெற்பயிர் அறுவடைக்கு வரும். அதன் காரணமாக வறுமை நீங்கி, வளமை உண்டாகும். வாடிய மக்கள், தங்கள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ள தை மாதப்பிறப்பு வழி வகுக்கும். இவ்வெண்ணத்தில் தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழமொழி ஏற்பட்டுள்ளது. இதை உறுதி செய்வதாக நம் மக்கள் கூறும் "மார்கழிப் பஞ்சம் மக்களை விற்கும்" என்னும் பழமொழி அமைந்துள்ளது. இவ்விரண்டையும் தொடர்புபடுத்திப் பார்த்தால் பழமொழிகளின் பொருள் நன்கு விளங்கும்.

முடிவுரை

இவ்வாறு சில பழமொழிகள் மூலம் அவற்றுக்குரிய இன்னைப் பொருளும் முன்னைப் பொருளும் அறிந்தோம். பழமொழிகள் நமக்கு வாழ்க்கைப் பாடமாக அமைபவை. நீதி கூறுபவை நம்மை நேர்ப்படுத்துபவை. எளிய சொற்கள் இனிய தொடர்களால் வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பவை. பாமரர்களின் பல்கலைக்-கழகமாக விளங்குபவை.

பழமொழிகளை ஆராய்ந்து பொருள் கொள்ளும்போது பொதுவாக அனைவர்க்கும் வெளிப்படையாக தெரிந்த ஒன்றை அறிவுத் தெளிவு பெற்ற நம் ஆன்றோர்கள் பழமொழியாகக் கூறி இருக்க மாட்டார்கள். நுட்பமான அறிவுடைய அவர்கள் ஆழமான கருத்துகளைக் கூறவே பழமொழிகளை உருவாக்கிப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என அறியலாம்.

முற்றும்.. .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தம் இல்லாமல் பேசும் சம்பந்தனும் சம்பந்தத்தோடு பேசும் முதலமைச்சரும்

– கதிர் செல்லமுத்து –

**சர்வதேச அகிம்சை தினம்** யாழ்ப்பாணத்திலே இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் கடந்த 2 ஆம் திகதி நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு பேசிய எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தமிழ் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தை "வன்முறை" என்று பேசியுள்ளமை பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை காலமும் ஆயுதப் போராட்டம் என்று அனைவராலும் கூறப்பட்ட போராட்டத்தை வெறும் வன்முறை என்று சம்பந்தன் குறிப்பிட்டது எதற்காக?

"எமது இனம் ஏன் வன்முறையைக் கையாண்டது என்பது மிக முக்கியமான கேள்வி. வன்முறை இன விடுதலைக்கான போராட்டமாக ஆரம்பித்ததன் காரணமாக எமது இனத்துக்கு பெரும் அழிவு ஏற்பட்டது. நாம் ஏன் வன்முறையைப் பின்பற்றினோம் என்பது பெரிய கேள்வி. இனி அவ்வாறான வன்முறையை ஆரம்பிக்க முடியாது" என்று பேசியுள்ளார் சம்பந்தன். இவ்வாறு பேசிய சம்பந்தன் 1961 இல் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தையும் தொடர்புபடுத்திப் பேசியுள்ளமை ஏன் என்பதில் தான் அவரது நோக்கம் தெளிவாகின்றது. இவர் இவ்வுரையை ஆற்றியது இந்தியத் துணைத்தூதுவர் முன்பாக. அத்துடன் ஜெனிவாவில் இலங்கை பற்றிய விசாரணை பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட உடன் இக் கருத்தைச் சம்பந்தன் முன் வைக்கின்றார்.

> **வன்முறை இன விடுதலைக்கான போராட்டமாக ஆரம்பித்ததன் காரணமாக எமது இனத்துக்கு பெரும் அழிவு ஏற்பட்டது. எமது இனம் ஏன் வன்முறையை கையாண்டது என்பது பெரிய கேள்வி**
> **– சம்பந்தன் –**

இதே நேரம் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் "30 ஆண்டுகள் எமது இளைஞர்கள் ஆயுதத்தால் மனவுறுதி காட்டினர்" என்று பேசியுள்ளார். விக்கினேஸ்வரன் வன்முறை என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை என்பதுடன் மனவுறுதி காட்டினர் ஆயுதங்களால் எமது இளைஞர் யுவதிகள் என்று பெருமை பேசியுள்ளார்.

சம்பந்தன் நீண்ட காலம் அரசியலில் இருந்தவருக்கு ஏன் தமிழ் இளைஞர்கள் வன்முறையை நாடினார்கள் என்ற கேள்விக்குப் பதில் தெரியாமல் உள்ளார். இவர் குறிப்பிடுகின்றார் 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது ஊரடங்கு பிறப்பித்தாலும் நாம் தொடர்ந்து போராட வேண்டும் என்று அமிர்தலிங்கம் உட்பட பலர் கூறிய பொழுது அவ்விதமாகப் போராடினால் அது எமது மக்களுக்குச் சாதகமாக இருக்காது எனவே போராட்டத்தை நிறுத்திப் பின்னர் தொடர்வதே சரி என்று தந்தை செல்வா கூறினார் என்கிறார். இவர் இதன் மூலம் சொல்ல முயல்வது என்னவென்றால் தந்தை செல்வா மக்களுக்குத் துன்பம் வரும் என்பதால் போராட்டத்தை நிறுத்திப் பின்னர் தொடரலாம் என்ற மக்கள் சிந்தனையுடன் வாழ்ந்ததாகவும் ஆனால் தமிழ் இளைஞர்கள் என்று இவர் குறிப்பிடும் விடுதலைப் புலிகளின் தலைவர் மக்களின் துயரைப் பற்றிக் கவலைப்படாது வன்முறையில் ஈடுபட்டார். மக்களுக்குப் பேரவலத்தை வன்முறை மூலம் ஏற்படுத்தினார் என்பதேயாகும்.

இவ்வாறு பேசும் சம்பந்தன் 1961 இல் என்ன பங்கைக் கட்சியில் வகித்தார்? இவர் அவ்வறப் போராட்டத்தில் பங்கு-பற்றினாரா என்ற வினாவும் எழுகி-ன்றது. ஏனெனில் இவரது அரசியல் என்பது 1977 இல் தான் நாடாளுமன்ற உறுப்பினராக வந்த பின்பு தான் மக்களுக்குத் தெரிந்த-தாகின்றது. இவரை திருகோணமலைத் தேர்தலில் போட்டியிட அழைத்து வந்த அமிர்தலிங்கத்துக்கு விசுவாச-மாக இதுவரை இருந்து வந்தவர் திடீரென்று ஊரடங்கு பிறப்பித்தாலும் தொடர்ந்து போராடுவோம் என்று அவர் கூறியதாக ஒரு போலியான நம்பமுடியாத கூற்றை முன்வைக்கின்றார். ஊரடங்கு நேரத்தில் எவ்வாறு இயங்காத அலுவலகங்களில் மறியல் போராட்டம் நடத்துவது? இது தானே யதார்த்தம். இதை அமிர்தலிங்கம் நன்கு அறிவார். எனவே ஊரடங்கு அறிவிக்கப்பட்டாலும் போராட வேண்டும் என்று அவர் கூறியிருக்க வாய்ப்பில்லை. சம்பந்தன் தான் அப்பொழுதே தந்தை செல்வாவுடன் தொடர்பில் இருந்ததான ஒரு பொய்த் தோற்றத்தைக் காட்டவும் தந்தை செல்வாவுக்கு மக்கள் மேல் இருந்த அக்கறை போல் தனக்கும் இருப்பதாக வேடம் போடவுமே இவ்வாறு பேசியுள்ளார்.

தமிழ் இளைஞர்களை வன்முறையாளர்கள் என்று இவர் பேசியது இந்தியத் துணைத் தூதுவர் முன்பேயாகும். இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தவை 1956 1958 1961 1977 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற இனஅழிப்பு நடவடிக்கைகளும் அறவழியில் போராடியவர்களைச் சாதாரண சட்டங்களின் மூலம் தண்டிக்க முடிந்திருந்தும் இராணுவத்தை ஏவி அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டதுமேயாகும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் இதை வன்முறை என்று கூறும் சம்பந்தன் 1983 வரை பலம் குறைந்திருந்த இளைஞர்களை அழைத்து ஆயுதப் பயிற்சி கொடுத்தது தான் ஏற்றிப் போற்றுகின்ற இந்திய நாடு தான் என்பதை மறந்தது ஏன்?

இந்திய நாடுதான் தமிழீழ இலட்சியத்தோடு புறப்பட்ட தமிழ் இளைஞர்களை அழைத்து ஆயுதப் பயிற்சி கொடுத்தது. விடுதலைப் புலிகளுக்கும் இதர ஆயுதக் குழுக்களு-க்கும் ஆயுதப் பயிற்சி கொடுத்ததை மறைத்து விட்டுத் தமிழ் இளைஞர்கள் வன்முறையை ஏன் தெரிவு செய்தார்கள் என்று தெரியாமல் குழம்புவதாகப் பேசியுள்ளார் சம்பந்தன். இது மாத்திர-மல்ல இவ்வாயுதக் குழுக்களுக்கும் மேலதிகமாக வேறு ஒரு ஆயுதக் குழுவான ஈழ மக்கள் ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என்.டி.எல்.எவ்) என்ற ஆயுதக் குழுவை உருவாக்கியமையும். அக் குழு இன்று வரை இந்திய அரசின் அரவணைப்பில் பலமிழந்தாலும் இருக்கிறது என்பதும் உண்மை. இது மாத்திரமல்ல அமைதிப்படை என்ற பெயரில் வந்த இந்தியப் படை தமிழ் இளைஞர்களைக் கட்டாயப்படுத்தித் தமிழ்த் தேசிய இராணுவம் என்ற பெயரில் ஓர் இராணுவ அமைப்பை உருவாக்கியதும் சம்பந்தனுக்குத் தெரியாதா. வெறுமனே தமிழ் இளைஞர்கள் வன்முறையாளர்கள் என்று கூறும் சம்பந்தன் இந்தியாவே ஆயுதங்களைக் கொடுத்து வன்முறையை வளர்த்துவிட்டது என்று இந்தியாவைச் சுட்டிக் காட்டியிருப்பாரானால் போற்றி-யிருக்கலாம்.

தற்பொழுது ஏதோ ஒரு வகையில் ஒரு விசாரணை ஜெனிவாவின் அமெரிக்கத் தீர்மானத்தின் அடிப்படையில் நடைபெறப் போகின்றது. அது நிச்சயமாக உள்நாட்டு விசாரணையாகவே இருக்கும். இந்த விசாரணை தமிழீழ விடுதலைப் புலிகளையே குற்றவாளிகளாகக் காட்ட முயலும். அதற்கு அச்சாரமாகவே சம்பந்தன் தமிழ் இளைஞர்களை வன்முறையாளர்கள் என்று கூறி முதல் அடி எடுத்து வைத்துள்ளனர்.

இவர் இவ்வாறு கூறி இந்தியாவையும் அமெரிக்காவையும் சிறீலங்காவையும் மகிழ்வித்திருக்கும் நிலையில் வடமாகாண முதலமைச்சர் மேலே குறிப்பிட்டது போல் "30 ஆண்டுகள் எமது இளைஞர்கள் ஆயுதத்தால் மனவுறுதி காட்டினர்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். வடக்கு முதலமைச்சரின் அரசியல் நிலைப்பாடு எப்படிப்பட்டதாக இருந்தாலும் அவர் ஆயுதப் போராட்டத்தை ஆதரிப்பவரோ இல்லையோ பிரபாகரனை எச்சந்தர்ப்பத்திலும் பயங்கரவாதி என்று கூறுவதை எதிர்த்துக் குரல் கொடுத்து வருகின்றார். தலைவர் பிரபாகரன் பெரிய மாவீரன் என்று துணிந்து கூறிவருகின்றார். முதலமைச்சர் ஜனாதிபதிக்கு முன்னால் ஒன்றும் தமிழ் மக்களுக்கு முன்னால் வேறொன்றும் பேசுபவராக இல்லை.

தமிழினம் சிறுபான்மை இனம் இது கொடி போன்றது பற்றிப் படர்வதற்குப் பெரும்பான்மை இனமான சிங்கள இனத்தை சார்ந்து தான் என்றும் இருக்க வேண்டும் என்ற சிங்களத்துக் கருத்தைச் சிறீலங்காவின் ஜனாதிபதிக்கு முன்னால் வைத்துச் சாடியுள்ளார் வடமாகாண முதலமைச்சர்.

தமிழ் மக்கள் கொடிகள் போன்றவர்கள் அல்லர். எவ்வாறு சிங்கள மக்கள் தனி மரமாக வாழ்கின்றார்களோ அவ்வாறே தனி மரமாக வாழவே தமிழினம் விரும்புகின்றது என்று மைத்திரிபாலாவை வைத்துக் கொண்டு முதலமைச்சர் உரையாற்றி-யுள்ளார். இது ஓர் ஆழமான கருத்து. **சிங்களம் மாத்திரமல்ல தமிழ் அரசியல் வாதிகளும் தமிழ் மக்களைச் சிறுபான்மை இனம் என்று கூறி வரும் நிலையில் தமிழினம் ஒரு தேசிய இனம் என்று தந்தை செல்வா தலைமையில் அன்றிருந்த தமிழரசுக் கட்சி வலியுறுத்தி வந்தது.** அதன் பின்னர் 1976 இல் தேசிய இனத்தின் உரிமையான சுயநிர்ணய அடிப்படையில் தமிழீழம் அமைப்பதென வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் செல்வா வலியுறுத்தினார்.

ஆனால் செல்வாவின் பின்னர் அவரையே பின்பற்றுவதாகக் கூறிக் கொள்பவர்கள் அதனைக் கைவிட்டுச் சரணாகதி அரசியலுக்குள் புகுந்துவிட்டனர். இதனை வன்முறை பற்றிப் பேசிய அகிம்சைக் கூட்டத்திலும் தாங்கள் 1976 இல் தமிழ் மக்களின் இறைமை பற்றிப் பேசியதாகவும் ஆனால் தற்பொழுது அதற்குத் தேவை இல்லை என்றும் சம்பந்தன் பேசியுள்ளார். வன்முறை முடிவுக்கு வந்துவிட்டதால் நீதியான தீர்வை உலகம் தரும் என்றும் சம்பந்தன் பேசியுள்ளார். ஆனால் முதலமைச்சர் சிங்கள மக்கள் தனி மரமாக வளர்வது போன்று தமிழ் மக்களும் தனி மரமாகவே வாழவே ஆசைப்படுகிறார்கள் என்று கூறுவதன் மூலம் தமிழ் மக்களின் தேசியத்தையும் இறைமையையும் மைத்திரிபால முன் சொல்லியுள்ளார் என்பது வரவேற்கப்படக் கூடியது.

அகிம்சை பற்றிய கூட்டத்தில் தமிழ் மக்களின் ஈகத்தை வன்முறையால் ஏற்பட்ட அவலம் என்று சம்பந்தமில்லாமல் சம்பந்தன் ஆற்றிய அடிமையின் உரையுடன் ஒப்பிடுகையில் முதலமைச்சரின் உரை தமிழ் மக்களின் உரிமை சம்பந்தமான நல்ல உரை என்றே கூற வேண்டும்.

இங்கே மேலும் ஒரு செயலால் முதலமைச்சர் தன்னை சம்பந்தன் குழுவில் இருந்து வேறுபடுத்திக் காட்டியுள்ளார். சிறீலங்கா ஜனாதிபதி தன்னுடன் விருந்து உண்ண அழைத்துள்ளார். அவ்விருந்தை ஏற்பாடு செய்தவர்கள் சிறீலங்கா இராணுவத்தினர். அப்பொழுது முதலமைச்சர் தான் இராணுவத்தை வெளியேற வேண்டும் என்று கூறுகின்றேன். பின்னர் எவ்வாறு அவர்களுடன் விருந்துண்ண முடியும் என்று கூறி மறுத்துவிட்டார். இது மற்ற அரசியல்வாதிகள் பார்த்து புரிந்து கொள்ள வேண்டியதாகும். ஜனாதிபதி அழைத்துவிட்டார் நாம் செல்வது தான் நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் உண்டாக்கும் என்று சொல்லி விட்டு விருந்துக்குச் செல்லும் அரசியல் வாதிகள் நிறைந்த தற்போதைய தமிழ் அரசியல் வாதிகளிடையே முதல்வரின் செயல் தனித்துவமானதே.

இவற்றை நோக்கும் பொழுது எதுவித அடிப்படைக் கொள்கைகளும் இல்லாமல் சம்பந்தன் சம்பந்தம் இல்லாமல் பேசி வருவதைத் தமிழினம் கண்டுகொள்ள வேண்டும். தந்தை செல்வா தமிழினத்துக்கு விட்டுச் சென்ற இறைமையை மீட்கும் பணியில் இருந்து தடம் புரண்டவர்கள் காலத்திற்கு காலம் நேரத்துக்கு நேரம் மாறுபட்ட பேச்சுக்களைப் பேசித் தங்களது இயலாமையை வெளிக்காட்டியுள்ளனர். இவர்களுடன் ஒப்பிடுகையில் அரசியலுக்குப் புதியவரான முதலமைச்சரின் பேச்சு பொருள் நிறைந்ததாக உள்ளது.

ஆனால் தமிழினம் தனது அடிப்படை உரிமையை எவ்வாறு அடைவது என்பது தான் இன்று எழுந்துள்ள வினாவாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயருக்குள் மறைந்து கொண்டு நீண்ட நாட்களுக்கு ஏமாற்று அரசியல் செய்து தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது. அதே நேரம் நல்ல ஆக்கபூர்வமான கருத்து-களை மக்கள் முன் வைப்பதால் மட்டும் உரிமைகள் கிடைத்துவிடப் போவதில்லை என்பதையும் உணர்ந்து உரிமைகளை எவ்வாறு மீட்பது என்ற தெளிந்த சிந்தனையுடன் மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய கடமை உண்டு. அதைத் தொடரப் போவது யார் என்ற வினாவிற்கு விடை வேண்டும்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 75

# காலம் பொன்னானது

(வி. என். சந்திரகாந்தி)





**இயற்கை** எமக்கு சில வரப்பிரசாதங்களை வழங்கியுள்ளது. நாம் சம்பாதிக்கும் பணம் பொருள் பொன் ஆகியவற்றை எம்மால் சேமித்து வைக்கவும் அவசியமான நேரத்தில் மட்டும் செலவிடவும் முடியும். ஆனால் காலத்தை மட்டும் எம்மால் சேமிக்கவோ அதை வேண்டிய வேண்டிய நேரத்தில் செலவிடவோ முடியாது எமது காலம் பற்றிய அசட்டை ஒரு பேரூந்தை தவறவிடுவதிலிருந்து வாழ்கையின் அதி முக்கிய வாய்ப்புக்களை இழப்பது வரை எமக்கு பல நஷ்டங்களை உண்டுபண்ண வல்லது.

காலம் எம்மை ஏமாற்றுவதில்லை. எமது அசட்டைதான் பொன்னான காலத்தை வீணடிக்கின்றது. அதிகாலையில் விழிக்க வேண்டும் என்றால் இந் நாட்களில் யார் கேட்கின்றார்கள். ஒரு மணி நேரம் காலதாமதமாக எழும்பினால் நேரத்திற்கு பாடசாலை போவது தடைப்படும். காரியாலயத்திற்கு குறுகிய லீவு போடவேண்டி வரும். இனி தயாராவதற்கு தேவையான பொருட்களை தேடினால் கிடைக்காது. அதில் பெருமளவான நேரம் போய்விடுகின்றது. நாம் தான் வீடுகளில் அந்தந்த பொருட்களை அதற்காக குறிப்பிட்ட இடங்களில் வைப்பதில்லையே!. அதனால் கால விரயத்துடன் சேர்ந்து ஆத்திரம் கோபம் பிறரை பழிவாங்கும் உணர்வு எல்லாம் உண்டாகின்றது.

எந்த பொருளை எங்கு வைக்கவேண்டும். என்பது தெரியாமல் இருப்பது போல எந்த நேரத்தில் எந்த வேலையை செய்யவேண்டும் என்கிற திட்டமும் எம்மிடம் இல்லாதிருக்கின்றது. "காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா" என்று பாரதி அன்றே காலத்தை ஒவ்வொரு செயலுக்கும் நிர்ணயித்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளான்.

வீட்டுப்பாடமோ கந்தோர் வேலையோ அதை இரவு சாப்பாட்டுக்கு முன்னர் பூர்த்தி செய்தால் விட்டது கவலை!

எமக்கான இருப்பத்திநான்கு மணித்தியாலத்தில் எட்டு மணித்தியாலம் தூக்கத்தில் போய்விடுகின்றது. எட்டு மணித்தியாலம் காரியாலயம் அல்லது பாடசாலை என்று கழிகின்றது. மிகுதி எட்டு மணித்தியாலயமே நாம் சுதந்திரமாக எமது வாழ்கையின் கருமங்களை நிறைவேற்ற எஞ்சியுள்ளது. அந்த பொன்னான நேரத்தை நாம் பயனுள்ள வழியில் கழிக்க வேண்டும். எமது காரியாலயத்திற்கு போய் வர நான்கு மணிநேரம் தொடரூந்திற்கு செலவாகின்றது என்றால் எமக்கான பல கருமங்கள் அதனால் தடைப்படும்.

இந்த விடயத்தில் வெளிநாடுகளில் சிலர் விழிப்பாக இருக்கின்றார்கள். தொடரூந்தில் பிரயாணிக்கும் போதே "சேவ்" செய்தல் ஸ்நானம் செய்தல் போன்ற கருமங்களை நிறைவேற்றிக்கொள்கின்றார்கள். இன்னும் படிக்கவேண்டிய குறிப்பெடுக்கவேண்டிய நூல்களை வாசிக்க அது பொன்னான நேரம். பெண்கள் கைவேலை செய்யலாம். மாணவர்கள் மனப்பாடம் செய்யலாம். எம்மில் பலர் செய்ய வேண்டிய கருமங்களை ஒத்திப்போட்டுக்கொண்டே இருப்பார்கள். "பில்" கொடுப்பனவா? அதை உடனே செலுத்தவேண்டும். அந்த நேரத்தை பயன்படுத்தி "கிரடிற் காட்டுக்கு" செலுத்தவேண்டிய பணத்தையும் கட்டிவிடலாம். எமக்கு வரும் கடிதங்களுக்கு உடனேயே பதில் தரலாம். கடித உறை தபால் தலை, பசை என்பன எம்முடன் இருந்தால் சரி. நண்பரை வருத்தம் பார்க்க வேண்டுமா? மதிய உணவு இடைவேளையை பயன்படுத்திக்கொள்ளலாம்.

எமக்கு பல பொறுப்புக்கள் இருக்கும். அவற்றை நிறைவேற்றுவதில் நாம் விரைந்து செயற்பட்டால் காலம் மிச்சமாகும். அதற்கு வேண்டியது நாம் முடிவெடுப்பதில் காட்டும் அதீத வேகம் ஆகும். ஒரு விஷயத்தை வைத்து மண்டையை குடைந்துகொண்டிருந்தால். இன்னும் பல பொறுப்புக்கள் வந்து எமது நேரத்தை விழுங்கிவிடும்.

எமது நேரத்தை விரயம் செய்வதில் அதிக பங்களிப்பு வழங்குபவர்கள் அரட்டை அடிப்பவர்கள் தான். அவர்கள் பற்றி எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். அவர்கள் கூறுவார்கள் உங்களை விட்டால் இந்த விடயத்தையிட்டு கருத்து கூறுவதற்கு யாருமில்லை! நீங்கள் அதை நம்பிவிட்டால் போதும். உங்கள் நேரத்தை நீங்கள் அறியாமலே வீணடித்து விடுவார்கள். அவர்கள் விடயத்தில் முகத்தை முறிக்கலாமா என்றெல்லாம் நீங்கள் தயங்க கூடாது. சிலர் தங்களது கருமங்களுக்கு உதவியாக உங்களை அழைப்பார்கள். அதனால் உங்களுக்கு பயன் ஏதும் இருக்காது. ஆனால் உங்கள் வேலைகள் பல தடைப்படுவதோடு நேரமும் விரயமாகும். அதே போன்று அநாவசிய தொலைபேசி அழைப்புகளுக்கு நீங்கள் காது கொடுத்தால் அந்நேரத்தில் நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பல கருமங்கள் தடைப்படும்.

ஒரு நூலின் அட்டைப்படத்தில் மயங்கி அதனை வாசிக்க முடிவெடுத்தீர்களா? முதலில் "அறிமுக உரை" "நூல் நயவுரை" இரண்டையும் வாசியுங்கள். அந்த நூல் உங்களுக்கு எவ்வளவு பயன்படும் என்பதை தெரிந்து கொண்ட பின்னர் அவசியம் என்றால் வாசிக்கலாம். இல்லாவிட்டால் அந்த நூலை வாசிப்பதை தவிர்த்து நேரத்தை மிச்சப்படுத்த முடியும்.

உங்களுக்கு தொலைக்காட்சி பார்ப்பதில் ஆர்வம் இருக்கலாம். நீங்கள் உற்சாகமாக பெரும் பொறுப்பொன்றை நிறைவேற்றக் கூடிய நிலையில் இருக்கும் போது செட்டியில் உட்கார்ந்து ரீ.வி பார்ப்பது போன்ற முட்டாள்தனம் எதுவும் இல்லை. உடல் தளர்ந்த நிலையில் எதனைச்செய்வதற்கும் இலாயக்கில்லாத நேரத்தல் ரீ.வி பார்க்கலாமல்லவா? சிலரது அடுத்த தவறு சில புரோகிராம் பிடித்து விட்டது என்பதற்காக திரும்ப திரும்ப பார்ப்பது.

வாழ்கையிலும் கூட எம்மில் பலர் ஒரு வேலையை ஒரு தடவையில் செய்து முடிக்க மாட்டார்கள். ஒரு கட்டுரையோ சிறுகதையோ எழுத வேண்டியிருக்கும். எழுத தொடங்குவதற்கு முன்னரே அது பற்றி சரியாக சிந்தித்து அது எந்த கோணத்தில் அமைய வேண்டும். எத்தனை சொற்களுக்குள் அடங்க வேண்டும் என்றெல்லாம் தீர்மானித்து விட வேண்டும்.

பின்னர் நல்ல கடதாசியில் உறுப்பெழுத்தில் எந்த வெட்டுக் கொத்தும் இல்லாமல் எழுத வேண்டும். வேண்டுமென்றால் நிழற்பட பிரதி எடுக்கலாம். மூலப்பிரதியை தாமதம் இன்றி பிரசுரத்திற்கு அனுப்ப அது வசதியாக இருக்கும். திரும்ப எழுதுவதில் உள்ள நேர விரயம் தவிர்க்கப்படுகிறது. நாம் ஆற்றும் எந்த விடயத்திலும் அவதானமாக இருப்பதன் மூலம் நேர விரயத்தை தடுக்க முடியும்.

பலர் விடும் இன்னுமொரு தவறு வாழ்க்கையை நல்ல முறையில திட்டமிடாமை. எவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை நாம் முற்கூட்டியே தீர்மானித்து விட்டிருந்தால் சம்மந்தப்-படாத விடயங்களை ஒதுக்கி விடலாம்.

எமக்கு பல நிறுவனங்களிடம் இருந்தும் அமைப்புக்களிடமிருந்தும். அழைப்புக்கள் வரலாம். அதையெல்லாம் ஏற்க வேண்டிய அவசியம் எமக்கு உண்டா இல்லையா என்பதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும். மற்றவர்களின் உயர்ச்சிக்காக நமது நேரத்தை விரயம் செய்ய முற்படக்கூடாது. சரியான திட்டம் எமக்கு இருந்தால் ஒரே நேரத்தில் நிறைவேற்றக் கூடிய கருமங்களை இனங்கண்டு பூர்த்திசெய்து விட வசதியாக இருக்கும்.

குடும்பத்தில் ஒரு அங்கத்தவருக்கு அன்றைய தினம் மெடிக்கல் கிளினிக் ஆக இருக்கும். மற்றொருவருக்கு பெருவிரல் காயம் காரணமாக உபாதை. இரண்டையும் சேர்த்தே செய்துவிடலாம்.

மாதத்திற்கு தேவையான மளிகைச் சாமான்களை ஒரே தடவையில் கொள்வனவு செய்வதால் பணம் சேமிக்கப்படுவதுடன் நேரமும் மிச்சம். குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் மாறுபட்ட தேவைகள் இருக்கும். அவற்றை கேட்டறிந்து லிஸ்டில் சேர்த்துவிட்டால் அவர்களது நேர விரயத்தை தவிர்க்கலாம்.

ஒரு குடும்ப அங்கத்தவர் ஒரு நாளில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் பல இருந்தால் அவற்றை ஒரே தடவையில் காலையிலேயே கூறிவிடவேண்டும். அவர் தனது சொந்த கருமங்கள் மத்தியில் அவற்றை இலகுவாக பூர்த்திசெய்ய அது உதவும்.

அதே நடைமுறையை அலுவலகங்களிலும் கடைப்பிடிக்க வேண்டும். அலுவலர்கள் தேவையற்ற ரென்ஷனுக்கு உட்படாமல் சுமூகமாக தமது நாளாந்த கடமையை நிறைவேற்ற அது உதவும்.

காலம் எவ்வளவு பெறுமதியானதென்பதை உணர்வதில்தான் எமது வெற்றி தங்கி உள்ளது..

ஒரு எழுத்தாளருக்கு நேரம் மிக முக்கியம். சிறுகதை கட்டுரை, தொடர் நவீனம் கவிதை என்று எழுதிக் கொண்டே இருக்க வேண்டும். யோசித்துக் கொண்டிருந்தால் நேரம் தான் விரயமாகும். எழுதுவதற்காக அமர்ந்து விட வேண்டும். எழுத்தாளர்களுக்கு பிரபஞ்ச சக்தியுடன் தொடர்பு உண்டு. எழுத தொடங்கிவிட்டால் புது புது கருத்துகளுக்கு பஞ்சம் இருக்காது. எழுத்து வேகம் அதிகரிப்பதால் நேரமும் மீதியாகும்!

எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல. விஞ்ஞானிகள், சிற்பகலைஞர்கள், ஓவியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் போன்ற பிரிவுகளில் அடங்கும் நம் எல்லோருக்குமே ஒரு உந்து சக்தி உண்டு. நாம் நேர விரயமின்றி முயற்சித்தால் தானாகவே எல்லாமும் கைகூடும்!

# இவ்வளவு காதலா? அற்புதமான மனைவி




திருகோணமலை நகரப்பகுதி நண்பியின் உண்மை சம்பவம்.....

அவளது பெயர் கமலநாயகி. அனைவரும் அவளை கமலா எனவே அழைப்பர். எனினும் அவளது அன்புக் கணவர் மாத்திரம் நாயகி என அழைப்பார். அவர்க்கு இரண்டு குழந்தைகள் இருந்தனர். மூத்தவன் அஜய், இரண்டாமவள் சாம்பவி. நால்வரும் தமது மகிழூர்ந்தில் ஒரு சாரதியை வாடகைக்குப் பெற்று ஐந்து நாட்கள் கொண்ட சுற்றுலாவிற்குச் சென்றனர்.

மிகவும் சந்தோசமான குடும்பம் அவர்களுடையது. கணவன், மனைவியிடையே அவ்வளவு அன்னியோன்யம் காணப்படும். மோதல் இருந்தால் தான் காதல் அதிகரிக்கும் என்பதற்கிணங்க அடிக்கடி சண்டை போடுவர். இருப்பினும் அது ஐந்து நிமிடங்கள் நீடிப்பது கூட கடினமே.

வழமை போல் இருவரும் சண்டை பிடித்தனர். உடன் மகன் கேட்டான், அப்பா! உங்கள் சண்டை நாடகங்களில் வருவது போல் ஏன் நிறைய நேரம் நீடிப்பதில்லை என.... அதற்கு தந்தை அவனை கட்டிப்பிடித்துக் கொண்டு அம்மாவை சீண்டினான். இவ்வாறே அந்நாள் கழிந்தது.

மிகவும் சந்தோசமாக தமது சுற்றுலாவை கழித்துக் கொண்டிருந்தனர்.

அன்று சாரதியின் முகம் சரியில்லை. ஏன் என கமலா வினவிய போது, அம்மா உங்களிடம் ஒரு இரகசியம் உரைக்க வேண்டும். ஐயாவைப் பற்றியது. என்னைத் தவறாக நினைக்கா விட்டால் நான் கூறுவேன் என கூறினான். இவளும் இவனது தவறான கருத்தை நீக்க வேண்டும் என்பதற்காக அவன் கூறுவதை பொறுமையாக கேட்டாள்.

ஐயா, இரவு வேளைகளில் வெளியில் வருகிறார். வந்ததும் அவர் தனியே கதைக்கத் தொடங்குகிறார். யாருடனோ சண்டை பிடிப்பது போல் சைகை செய்து தகாத வார்த்தைகளால் எல்லாம் பேசுகிறார் என்றான்.

இவள் அதற்கு ஆகட்டும் நானும் இன்று இரவு வந்து பார்க்கின்றேன் என்றாள்.

இரவு 12ஐ நெருங்கியது. அவள் கண் விழித்துப் பார்க்க போது தன் கணவன் வெளியில் செல்வது தெரிந்தது. இவளும் எழுந்து சென்று மறைந்திருந்து பார்த்தாள். சாரதி கூறியது உண்மையே!!

சரியாக 1.30 மணி தாண்டியதும் எழுந்து உடம்பை உதறிவிட்டு உள்ளே செல்ல தயாரானாள். அவனுக்கு முன் இவள் தான் சென்று படுத்துக் கொண்டாள். உள்ளே வந்த கணவன் மிகுந்த அசதியாக காணப்பட்டான்.

விடிந்ததும் அவள் சாதாரணமானவளாக அவனை நோட்டம் விட்டாள். எந்தவொரு வித்தியாசமும் தெரியவில்லை.

மறுநாளும் இவ்வாறே அவன் எழுந்து செல்ல அவளும் சற்றுப் பின்னே சென்றாள். இவள் இருக்கும் இடத்திற்கு வந்த சாரதி அம்மா! சற்று கூர்ந்து கவனியுங்கள் அதோ ஒரு வெள்ளை புகை தெரிகிறது. ஐயா அப்பக்கம் பார்த்தே கத்துகிறார் என்றான். அவளுக்கும் தெரிந்தது. ....

என்ன செய்வது? அது என்னவாக இருக்கும்?

இவளால் கண்டுபிடிக்க முடியவில்லை. சுற்றுலா முடிந்து வீடு திரும்பிய அன்றிரவும் கூட அவ்வாறே நிகழ்ந்தது. கமலா சற்று துணிந்தவள் என்பதால், அடுத்த இரவுதனில் அவள் சென்று அவன் முன் தோன்றினாள். அதிர்ந்து போனான் அவன்.

அவள் நேராகவே கேட்டுவிட்டாள். என்ன பிரச்சினை என்னிடம் கூறுங்கள் என்று தனக்கே உரிய கெஞ்சுவதையும் மிஞ்சிய தொனியில் கேட்டாள்.

அதற்கு அவனோ என்னால் தொழிலகத்தில் கோபத்தை கட்டுப் படுத்த முடிவதில்லை. அதற்காக கோபப்படவும் முடியவில்லை. அக் கோபத்தை உன்னிடமும் காட்ட முடியாது. எனவே தான்.......

அவள் அவனை இறுகப் பற்றி எஉனக்கு என்னில் எல்லா உரிமையும் உள்ளது. கோபப்பட வேண்டும் என தோன்றினாள் என்னிடம் கோபப்படு நான் புரிந்து கொள்வேன் என்றாள். (தன்யா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

## சிம்புதேவனின் இயக்கத்தில் விஜய், ஸ்ருதி, ஹன்சிகா நடிக்கும் "புலி"

இக்கதை எந்த காலம் என்று குறிப்பிடவில்லை, ஆனால், அழகிய தேசத்தில் கர்ணன் ஸ்டைலில் ஆற்றில் ஒரு குழந்தை குருவி முட்டையுடன் மிதந்து வருகின்றது. அந்த குழந்தையை பிரபு எடுத்து வளர்க்கிறார். அமைதியாக இருக்கும் அவர்கள் கிராமத்தில் வேதாள உலகத்தை சார்ந்த வேதாளங்கள் அவ்வப்போது வந்து மிரட்டுகின்றது. வேதாள உலகத்தில் ராணி ஸ்ரீதேவி, தளபதி சுதீப்பின் மாய வலையில் நாட்டை கொடூரமாக ஆள்கின்றார். ஒருநாள் விஜய்யின் காதல் மனைவி ஸ்ருதிஹாசனை வேதாள உலகத்தினர் கடத்தி செல்ல, விஜய் அவரை தேடி போகின்றார். அங்கு செல்ல வேண்டும் என்றால் செல்பவரும் வேதாளமாக தான் இருக்க வேண்டும் என ஒரு மந்திர பாணத்தை குடித்துவிட்டு 8 நிமிடம் மட்டும் வேதாளமாக மாறும் திறன் கொண்டு அந்த வேதாள கோட்டையை அடைகின்றார். அதன் பிறகு பல டுவிஸ்டுகள் அவிழ, தன் காதல் மனைவி ஸ்ருதியை கண்டுப்பிடித்தாரா? நாட்டை சுதீப்பிடம் இருந்து காப்பாற்றினாரா? என்பதை ஒரு மாய உலகத்திற்கு நம்மை அழைத்து சென்று காட்டுகின்றது இந்த புலி.



இளைய தளபதி விஜய் ஒவ்வொரு காட்சிகளிலும் ஆட்டம், பாட்டம், துறுதுறு நடிப்பு என கலக்கியுள்ளார். பிரபு கொஞ்சம் நேரம் வந்தாலும் நிறைவான நடிப்பை கொடுத்துள்ளார். ஹன்சிகா, ஸ்ருதி வெறும் கவர்ச்சிக்கு மட்டும் தான் போல, நடிப்பில் எந்த இடத்திலும் ஈர்க்கவில்லை. இதுவரை ஹாலிவுட் படங்களை மட்டும் மெய் மறந்து பார்த்த நம்மூர் மக்களுக்கு ராட்சஸ மனிதன், குள்ள மனிதர்கள், பேசும் குருவி, ஆமை என சிம்புதேவன் கொடுத்துள்ளார்.

அதிலும் ஆமை வேதாளக் கோட்டைக்கு வழி சொல்லி, அதன் படி அவர்கள் செய்யும் காரியங்கள் குழந்தைகளுக்கு செம்ம ஜாலி தான்.

ரோபோ ஷங்கர், தம்பி ராமையா, சத்யன், வித்யூலேகா என பலரும் தங்கள் கதாபாத்திரங்களில் வந்து தங்கள் கடமையை ஆற்றி செல்கின்றனர். ஸ்ரீதேவி இத்தனை வருடத்திற்கு பிறகு தமிழில் கலக்க வருகிறார்.

படத்தின் ஒவ்வொரு பாகமும் குழந்தைகள் ரசிக்கும்படி உள்ளது. இதையெல்லாம் விட இரண்டாம் பாதியில் வரும் அப்பா விஜய்யின் கம்பீர நடிப்பு. ஒரு சில காட்சிகள் என்றாலும் மிரட்டியுள்ளார்.

இருப்பினும் நல்ல கதை இருந்தும் சொதப்பலான திரைக்கதை, அப்பட்டமாக தெரியும் கிராபிக்ஸ் காட்சிகள் என ரசிகனை கொஞ்சம் சோதிக்கின்றது.

மொத்தத்தில் இந்த புலி கொஞ்சம் ரசிகர்களை ஏமாற்றியிருந்தாலும், குழந்தைகளுக்கு மிகவும் சந்தோசமான ஒரு படம்.

---

**ராஜிவ் பிரசாந்தின் இயக்கத்தில் வெளியான "சதுரனி" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......**



## "ஆச்சி" அக்னியுடன்

கிட்டத்தட்ட 1300 படங்களில் கொடிகட்டிப் பறந்த பல விருதுகளையும் பெற்ற ஆச்சி என அழைக்கப்படும் மனோரமா அவர்கள் கடந்த 11ம் திகதி அக்னியுடன் சங்கமம் ஆகியுள்ளார். ஐந்து முதலமைச்சர்களுடனும் மற்றும் சிவாஜி அவர்களுடனும் நடித்த பெருமையும் அவருக்கே உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

பழம்பெரும் நடிகை மனோரமாவின் உடல், 11.10.2015 அன்று இரவு 7 மணியளவில் மைலாப்பூர் கைலாசபுரம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த இறுதி ஊர்வலத்தில் திரையுலகினர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். வீதியின் இருபுறங்களிலும் ஏராளமானோர் கூடி அஞ்சலி செலுத்தினர். அனைவரும் மனோரமா ஆச்சிக்கு இறுதி அஞ்சலி செலுத்தி பிரியா விடை கொடுத்தனர்.

## மீண்டும் முதல் காதலில்

செம பிஸியாக இருக்கும் த்ரிஷா தனது முதல் காதலுக்கு திரும்பியதாக அதிர்ச்சி கொடுத்துள்ளார். "பேக் டி மை .:.பர்ஸ்ட் லவ்" என தலைப்பைக் கண்டவுடன் ஏற்பட்ட பீதியில் முழுமையாக படித்தபோதுதான் உண்மை நிலவரம் தெரிந்தது.

த்ரிஷா இடைவிடாது நீச்சல் பயிற்சி எடுத்துக்கொள்பவராம் இடையில் பிசியாக இருந்ததால் நீச்சல பயிற்சி செய்ய-முடியாமல் இருந்ததாம். தற்போது மீண்டும் நீச்சல் பயிற்சிக்கு திரும்பி-யுள்ளதாக தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.



## அஜித்திற்கே நான்தா கற்றுத் தருகிறேன்

அஜித் சினிமாவில் நாளுக்கு நாள் புதிதாக ஏதும் கற்றுக்கொண்டே இருப்பவர். இந்நிலையில் சமீபத்தில் அஜித் புகைப்படம் எடுப்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தார். தற்போது கிதார் வாசிப்பதில் அஜித்திற்கு மிகுந்த ஆர்வம் வந்து விட்டதாம். இதற்காக காலை 5 மணிக்கே எழுந்து இளையராஜா, ரகுமான் போன்ற முன்னணி இசையமைப்பாளர்களிடம் பணியாற்றிய ஸ்டீவ் வாட்ஸ் என்பவரிடம் பயின்று வருகிறாராம்.



## எமிக்கு கிடைத்த அதிர்ஷ்டம்

ஷங்கரின் எந்திரன் 2 படத்தில் ஏமி ஜாக்சன் நடிக்க உள்ளதை நினைத்து பல நடிகைகள் ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்களாம். வெற்றிகரமான இயக்குனராக பல ஆண்டுகளாக இருந்து வருபவர் ஷங்கர். அவர் இயக்கத்தில் ஒரு படத்திலாவது நடித்துவிட்டால் அது பெரிய பாக்கியம் என்று நினைக்கிறார்கள்.

## சிவாவிற்கு அஜித் அறிவுரை

சிவகார்த்திகேயன் நடிப்பைப் பாராட்டிய அஜீத் அவருடைய எதிர்கால வளர்ச்சிக்காக சில அறிவுரைகளையும் வழங்கி இருக்கிறார். இந்த சந்திப்பின்போது மதுரை பிரச்சினையில் என்ன நடந்தது என்பது பற்றி கேட்டுத் தெரிந்து கொண்ட அஜீத், பொது இடத்தில் மிகவும் கவனம் தேவை கொஞ்சம் பார்த்து இருங்கள் என அறிவுரை கூறினாராம்.

## அழைப்பே இல்லையாம் பிறகு எப்படி மறுப்பு

விக்ரம் எந்திரன்- 2 படத்தின் ரஜினியுடன் நடிக்க மறுத்து விட்டார் என கூறப்பட்டது. இதுகுறித்து விக்ரம் கூறுகையில் 'எந்திரன் 2ம் பாகத்தில் வில்லனாக நடிக்க எனக்கு அழைப்பு வரவில்லை, அப்படியிருக்க நான் எப்படி மறுக்கமுடியும். இதுபோன்ற செய்திகள் குறித்து ஷங்கரிடம்தான் கேட்க வேண்டும்' என கூறியுள்ளார்.

## எதிர்பார்ப்பு நிறைவேறுமா?

அந்நியன் படத்திற்கு பிறகு ஐ படத்தின் மூலம் இழந்த மார்க்கெட்டை பிடித்து விட்டார் விக்ரம். இதனால் 10 எண்றதுக்குள்ள படமும் தனக்கு இதே போல் ஒரு வெற்றியை தரவேண்டும் என எதிர்ப்பார்த்து இருக்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## ஆடைகளை துவைத்து மடிக்கும் ரோபோ

ஆடைகளை துவைத்து உலர்த்தி தரும் சலவை இயந்திரங்கள் காணப்படுகின்றன. ஆனால் ஆடைகளை துவைத்து, உலர்த்துவதுடன் மட்டுமன்றி அழுத்தி மடித்து தரக்கூடிய ரோபோ ஒன்று ஜப்பானில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. anasonic நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்ட இந்த ரோபோ டோக்கியோவில் இடம்-பெற்ற 2015ம் ஆண்டிற்கான Combined Exhibition of Advanced Technologies நிகழ்வில் காட்சிப்படுத்தப்-பட்டுள்ளது.

## உடல் ரீதியான உறவு மட்டும் வேணாம்




பேசும் திறனுடன், மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளும் வசதியுடன் “பெப்பர்” ரோபோ ஒன்றினை ஜப்பானின் சாப்டபேங் என்ற நிறுவனம் தயாரித்துள்ளது. 120 செ.மீ. உயரம் உள்ள இந்த நகரும் ரோபோக்கள், ஆண்ட்ராய்டு வசதி கொண்டதாகும். இந்த ரோபோக்களை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு ‘சாப்ட்பேங்க்’ நிறுவனம் கண்டிப்பான கட்டளை ஒன்றை போட்டுள்ளது. எக்காரணம் கொண்டும் இந்த ரோபோவுடன் உடல் ரீதியான தொடர்பு அல்லது அதுபோன்ற கீழ்த்தரமான நடவடிக்-கைகளில் ஈடுபடக்கூடாது. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டால் மட்டுமே இந்த ரோபோக்களை வாங்க முடியும்.

## ஒலிம்பிக்கை முன்னிட்டு ஜப்பான் திட்டம்

கூகுள் நிறுவனம் உட்பட வேறு சில நிறுவனங்களும் சாரதிகள் அற்ற தானியங்கி கார்களை உருவாக்கி அவற்றினை தொடர்ச்சியாக பல்வேறு பரீட்சிப்புக்குள்ளாக்கி வருகின்றன. இந்நிலையில் அடுத்த வருட ஆரம்பம் முதல் பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய தானியங்கி டாக்சிக்களை பணியில் ஈடுபடுத்தவுள்ளதாக ஜப்பான் அதிரடியாக அறிவித்துள்ளது.

ஜப்பானிய அரசுடன் Robot Taxi நிறுவனமும் இணைந்து நடைமுறைப்படுத்தவுள்ள இத்திட்டத்திற்கான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி பிரதான நகரங்களின் பெருந்தெருக்களில் இருந்து 3 கிலோமீற்றர்கள் வரை பயணம் செய்ய விரும்புபவர்கள் இச்சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதிரடி திட்டத்தினை அறிமுகம் செய்வதற்கு 2020ம் ஆண்டு ஜப்பானில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை இலக்கு வைப்பதாகவும் இருக்கலாம் எனவும் ஊகம் வெளியிடப்பட்டுள்ளது.




## Dellன் வெளியீடு

உலகத்தரம் வாய்ந்த கணனிச் சாதனங்களை வடிவமைத்து அறிமுகம் செய்யும் Dell நிறுவனம் Dell XPS 15 Infinity Edge எனும் புதிய மடிக்கணினியை அறிமுகம் செய்யவுள்ளது.

இன்டெல் நிறுவனத்தின் ஆறாவது தலைமுறை Processor Md Core Skylake இனைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. 15.6 அங்குல வளைந்த திரையினைக் கொண்டுள்ளதுடன், இதன் தடிப்பமானது

OTHER

## ∴பேஸ்புக் இல் Dis like இற்காக புதிய வசதி



பேஸ்புக், டிஸ்லைக் பட்டனுக்கு பதிலாக ஆறு உணர்வுகளை வெளிப்படுத்தும் ஸ்மைலிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. பேஸ்புக்கில் டிஸ்லைக் பட்டன் தேவை குறித்து நாளுக்கு நாள் விவாதங்கள் எழுந்த நிலையில், முதல் படியாக லைக் பட்டனுடன் ஆறு உணர்வுகளை வெளிப்படுத்தும் ஸ்மைலிகளை அறிமுகம் செய்துள்ளது. அதன் படி அன்பு, ஹாஹா, யாஹ், வாவ், சோகம் மற்றும் கோபம் உட்பட ஆறு வகையான பாப் அப் பட்டன்களின் ஒன்றை பயனாளர்கள் தங்களது லைக்குடன் கிளிக் செய்து உணர்வுகளை பகிரலாம்.

இது முதற்கட்டமாக அயர்லாந்து மற்றும் ஸ்பெயின் நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## அடொப் போட்டோஷொப்பின் அட்டகாசமான வசதி




புகைப்படங்களை எடிட் செய்யும் சிறந்த போட்டோஷொப் மென்பொருளை வடிவமைத்த அடோப் நிறுவனம் ஸ்மார்ட் கைப்பேசி கமெராக்களுக்கென விசேட வசதி ஒன்றினை உள்ளடக்கியுள்ளது. Monument Mode எனும் இப்புதிய வசதியின் ஊடாக புகைப்படங்கள் எடுக்கும்போது அக்காட்சிகளில் தோன்றும் மனிதர்களை தானாகவே நீக்க முடியும். இதற்கு முதல் ப்டம்பிடிக்கப்பட்ட பின்னரே அப்படத்தினை எடிட் செய்து தேவையற்ற காட்சிகள் அல்லது பொருட்களை நீக்கக்கூடியதாக இருந்தது, ஆனால் இவ் வசதி மூலம் படம்பிடிக்கும் நேரத்திலே இவ் வசதி கிடைக்கப் பெறுதல் விசேட அம்சமாகும்.




பிரித்தானியாவில் உள்ள பிரபல ரேஸிங் கார் தொழில்நுட்ப நிறுவனமான McLaren ஆனது 675LT Spider எனும் காரினை 2016 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யவுள்ளது.

260,000 பவுண்ட்ஸ் பெறுமதியைக் கொண்டதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மணிக்கு 205 மைல்கள் எனும் உச்ச வேகத்தில் பயணிக்கக்கூடியதாக இருப்பதுடன் ஓய்விலிருந்து வெறும் 2.9 செக்கன்களில் மணிக்கு 62 மைல்கள் எனும் வேகத்தை எட்டவல்லது என்பது குறிப்பிடத்தக்கது.

## XIAOMI - MI 5



Xiaomi நிறுவனமானது Mi 5 எனும் தனது புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை எதிர்வரும் 19ம் திகதி அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இக்கைப்பேசியானது 5.3 அங்குல அளவுடையதும், QHD தொழில்நுட்பத்தினைக் கொண்டதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளதாக காணப்படுகின்றது. இவற்றுடன் முதன் முறையாக Deca-Core MediaTek Helio X20 Chipset இனைய உள்ளடக்கியதாகவும், பிரதான நினைவகமாக 4GB RAM இனைக் கொண்டதாகவும் அறிமுகம் செய்யப்படவுள்ளது. மேலும் இதில் 16 மெகாபிக்சல்களை உடைய கமெராவும் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடுத்தவொரு கைப்பட்டி

மைக்ரோசொப்ட் நிறுவனம் புதிதாக அறிமுகம் செய்யவுள்ள டேப்லட்கள், ஸ்மார்ட் கைப்பேசிகள் மற்றும் கைப்பட்டி போன்றன தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி அந்நிறுவனம் அறிமுகம் செய்யவிருக்கும் Microsoft Band 2 ஆனது 320 x 128 Pixel Resolution உடையதும் OLED தொழில்நுட்பத்துடன் கூடிய Gorilla Glass 3 தொடுதிரையினைக் கொண்டுள்ளதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் 48 மணி நேரத்திற்கு தொடர்ச்சியாக மின்சக்தியை வழங்கக்கூடிய மின்கலம், Optical heart, Ambient light sensor, Skin temperature sensor, Galvanic skin response, Microphone, Barometer போன்றவற்றிற்கான

## HTML தமிழில்....

இத்தகைய வடிவூட்டல்களுக்குப் பயன்படும் குறிஓட்டுகளைப் பற்றிப் பார்க்கலாம்.

1. தலைப்புக் குறி ஓட்டு (Heading Tags)

எழுத்துகளை பெரிதாகவும், தடிமனாகவும் கொடுப்பதன் மூலம் காண்போரின் கவனத்தை ஈர்க்க முடியும். HTML ஆவணத்தில் ஆறு அளவுகளில் தலைப்புகளை அமைக்க முடியும். இந்த எழுத்து அளவுகள் ஏற்கனவே முன்வரையறுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இந்த அளவுகளை <H1>...</H1, எனத் தொடங்கி <H6>...</H6, வரைக் குறிப்பிடலாம்..

<H1, என்பது இருப்பதிலேயே பெரிய அளவையும், <H6, என்பதை இருப்பதிலேயே சிறிய அளவையும் குறிக்கும்.

## தலைப்புக்குறி ஓட்டு

வேறுபட்ட அளவுள்ள தலைப்புகளை உருவாக்கு-வதற்காக எழுதப்பட்ட நிரல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

```
<HTML>
<HEAD>
<TITLE> Heading Tags</TITLE>
</HEAD>
<BODY>
<H1>Heading Level 1 </H1>
<H2>Heading Level 2 </H2>
<H3>Heading Level 3 </H3>
<H4>Heading Level 4 </H4>
<H5>Heading Level 5 </H5>
<H6>Heading Level 6 </H6>
</BODY>
</HTML>
```




மேற்கண்ட கோடிங்கை ஒரு நோட்பேடில் எழுதி உங்களுக்கு விருப்பமான பெயரில் .html என்ற விரிவுடன் சேமித்துக்கொள்ளுங்கள்.

சேமிக்கப்பட்ட கோப்பை உங்கள் இணைய உலவியில் (Internet Browser) பிரௌசரில் திறந்து பார்க்கும்போது இவ்வாறு இருக்கும்.

Heading Level 1
Heading Level 2
Heading Level 3
Heading Level 4
Heading Level 5
Heading Level 6

பல்வேறுபட்ட தலைப்புகளை ர்வுஆடு -ல் எழுதிப் பழகுங்கள்.

மேலும் கிடைக்கோடுகள் பற்றி ஆராய்ந்து கற்கலாம்.

நன்றி நண்பர்களே ...!! இதன் தொடர்ச்சி அடுத்த வார இயத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுக் கணக்கு

சிறுகதை

— கீதா —

இப்ப கொஞ்ச நாட்களாக வரவு செலவையெல்லாம் புத்தகத்தில் எழுதிவைக்கலாம் என முடிவு செய்திருக்கிறேன். எப்படி எழுதவேண்டும் என்பதை அக்காவிடமிருந்து கற்றுக்கொண்ட படிப்பினை கொஞ்சம் இருக்கிறது.

அக்காவை கடைப்பிடித்து எழுதுவதில் ஏதோ ஒருவகை சலனம் எனக்குள் உண்டாவதை உணரமுடிகிறது. ஐம்பது பைசா ஊறுகாய் வாங்குவதைக்கூட தவறாமல் எழுதிவிடும் பழக்கம் உடையவள். அவள், இரகசியப் பொருட்களைக்கூட விலையையும் சேர்த்து எழுதி வைக்கும் பழக்கத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. அதில் வேறு கடைக்காரர் கொடுக்கும் பற்றுச்சீட்டுக்களைக்கூட மயிலிறகைப்போல நடுப்பகத்தில் வைத்திடுவாள். நல்லவேளை, கொடுக்கும் வீட்டு வாடகைக்கு வீட்டுக்காரரிடம் பற்றுச்சீட்டு கேட்டு அடம்பிடிக்கும் பழக்கம் மட்டும் அவளிடம் இல்லை. அப்படியொரு பழக்கம் இருந்திருந்தால் அடிக்கடி வீட்டை காலி செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி இருப்பாள்.

எனது அக்கா மாதிரி வரவு செலவுக் கணக்கை எழுதுவதாக வைத்துக் கொள்வோம். சிகரெட், தண்ணிச் செலவையும் நான் எழுதியாக வேண்டுமோ..? அப்படி எழுதி வைக்க என் ஆழ்மனது இடம் கொடுக்கவில்லை. முதலில் எதையெல்லாம் எழுத வேண்டாம் என்பதில் ஒரு தீர்க்கமான முடிவு செய்தேன். பட்டியல் நீளவில்லை. சிகரெட், தண்ணியோடு நின்று விட்டது.

நான் தினம் வரவு செலவு கணக்கு எழுதுவதை என் அக்காள் கேள்விப்பட்டிருக்கிறாள். மனசுக்குள் ரசித்திருக்கிறாள். வரவு செலவு கணக்கு எழுதும் எல்லோரையும் அவளுக்குப் பிடித்துப் போய்விடுகிறது. அதற்கான காரணத்தை ஒரு முறைக்கு பலமுறை சொல்லி கேட்டிருக்கிறேன். "எவ்ளோ வேண்டுமானாலும் நம்பி கடன் கொடுக்கலாம் கடன் வாங்கலாம். அவங்ககிட்ட வரவு செலவு வச்சிக்கிறது கல்லில் எழுதின எழுத்து" நான் திரும்ப கேட்கிறேன். "எங்கள மாதிரி ஆள்களுக்கிட்ட வச்சிக்கிற வரவு செலவு?" பட்டென்று சொன்னாள். "என்னா தண்ணியில எழுதுற கணக்குதான்."

முச்சந்தி வரை மட்டுமே வரும் பெண்களைப் போல வாங்கிய சம்பளம் பதினைந்து தேதியோடு சரி. அதற்குப்பிறகு அக்காதான் எல்லாம். சம்பளத்தேதியில் அக்கா கணக்கு போகத்தான் எனக்கு. இதையும் தாண்டி நண்பர்கள் யாரும் ஊருக்கு சென்றால் அம்மாவிற்கு பணம் கொடுத்து அனுப்புவதோடு சரி.

அக்கா என்னைப் பார்க்க குருணாகல் வரைக்கும் வந்திருக்கிறாள். ஒரு வாரப்பொழுதுகளை குருணாகலில் கடத்த வேண்டும் என்பதுதான் அவளுடைய அவா. கூடவே ஐந்து வயதாகும் மகனையும் அழைத்து வந்திருந்தாள். ஆறு நாட்கள் நகரத்தை சுற்றிப்பார்ப்பதிலேயே கடந்து விட்டது. ஏழாம் நாள் இன்று.

ரகு... நீ வரவு செலவு புத்தகம் போட்டிருக்கேனு கேள்விப்பட்டேன். எங்கே காட்டுப் பார்க்கலாம்.

எனக்குள் குறுகுறுத்தது.

அதை என்னதுக்கு நீ கேட்கிறேக்கா..?

சும்மா பார்க்கலாமுனுதான்

புத்தகத்தை எடுத்து நீட்டினேன்.

"ரொம்ப சின்ன புத்தகமா போட்டிருக்கே..."

"விரலுக்கேத்த வீக்கம்"

"எழுத்தெல்லாம் கோழி சீக்கிற மாதிரி எழுதிருக்கே"

"எனக்கு மட்டும் புரிஞ்சா போதுமுனுதான்"

"நீ நினைக்கிற மாதிரி இல்ல ரகு, வரவு செலவு கணக்கு. கிட்டத்திட்ட சுய சரிதை மாதிரி அது. ரொம்ப வெளிப்படையாகவே இருக்கணும்"

"வெளிப்படையாக இருக்கணுமுன்னா..?"

"இப்ப நீ சிகரெட்டை புகைச்சிட்டு தூக்கியெறிஞ்சியே. அந்தக்கணக்கெல்லாம் இதுல வரணும்.."

அவளுடைய வாதத்தில் குறுக்கிட்டேன்.

"நீ ஒரு ஆளுக்கா. நேற்றைக்கு பத்து ரூபா கொடுத்து டாய்லெட்க்குள் போனேன். அதெல்லாம்மா எழுதணும்."

"பின்னே எழுதுறதில்லையா..?"

பக்கத்தை முழுவதுமாக புரட்டிவிட்டு உள்ளங்கையில் புத்தகத்தைத் தட்டினாள். புத்தகத்தில் ஒட்டிக் கொண்டிருந்த தூசிகள் துண்டைக் காணாம் துணியைக் காணாம் என பறந்தது.

அடுத்தச்சுற்றாக புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு முணுமுணுத்தாள்.

"என்ன ரகு. சம்பளம் பதினையாயிரம் வாங்கிருக்கே அது வரவு. ஆனா.. செலவு வெறும் பத்னோராயிரத்து எண்ணூற்று தொண்ணூறு மட்டும்தான் வருது."

"ஆமாம் மீதி எங்கே...?" மனதிற்குள் அலசினேன்.

"ரகு.. நான் கொடுத்த ஆயிரத்தில முந்நூறு ரூபாய்க்கு கணக்கை காணாம்.."

நெற்றி தசைகளை ஒரு சேர இழுத்து வந்து துலாவினேன். முந்நூறுக்கான செலவு தென்பட்டது. ஆனால் சம்பளக்கணக்கில் மீதி..?

அக்கா பெருமூச்சு விட்டப்படி சொன்னாள்.

"ம்.. ரகு. கண்டுப்பிடிச்சிட்டேன். என் பையன் பிறந்த நாளுக்கு மாமன் ட்ரெஸ் முந்நூறு ரூபாய்க்கு எடுத்து அனுப்பியிருந்தியே ஞாபகமிருக்கா..?"

"..ம்" தலையாட்டினேன்.

"அடுத்து ரகு. அம்மாவிற்கு மூவாயிரம் கொடுத்து அனுப்பினியே. அதை எழுதல."

பேனாவை திறந்து எழுதத்தொடங்கினாள்.

"அக்கா நிறுத்துக்கா."

"ஏன்டா...?"

"தம்பிக்கு ட்ரெஸ் எடுத்ததையும் அம்மாவுக்கு பணம் அனுப்பி வைத்ததையும்மா எழுதி வைக்கணும்!"

"ஆமான்டா. அப்பதான் வரவு செலவு கணக்கா வரும்"

"என்ன வரவு செலவு கணக்கா வரும்...?"

"என்னடா சொல்றே..?"

"நீ நினைக்கிற மாதிரி இல்லக்கா. உழுவுறவன் கணக்குப்பார்த்தா உலைக்கு கூட மிஞ்சாது. அப்பா அப்படியெல்லாம் கணக்கு பார்க்காத வரைக்கும்தான் அவரு தொடர்ந்து விவசாயம் பண்ணிக்கிட்டிருந்தார். நானும் நீயும் கணக்குப் பார்த்தோம். உழுத நிலத்தையெல்லாம் குத்தகைக்கு விட்டுட்டு நீ திருகோணமலையிலையும் நான் இங்கேயும் இருக்கிறோம்."

"நான் இப்ப என்ன சொல்லிட்டேன். இப்படி கொதிக்கிற"

"பின்னே என்னக்கா நீ. பெத்தவளுக்கு கொடுக்கிற பணத்தையெல்லாம் செலவுல எழுதுறது எனக்கு நல்லதா படல. நம்ம அம்மா நமக்கு கொடுத்த பாசம் நேசம் எல்லாத்தையும் கணக்குப்பார்த்தா நாம அம்மாவுக்கு கொடுக்க பூமியே பத்தாதுக்கா."

அவளுக்குள் கீறல் விழுந்ததை என்னால் உணர முடிந்தது.

"சரிடா ரகு நான் கிளம்புறேன். லீவு கிடைச்சா திருமலைக்கு வா. இந்தா செலவுக்கு பணம். ஆயிரம் வச்சிக்கோ."

வழக்கமாக அக்கா என்னிடமிருந்து பிரியும் போது கொடுக்கும் சம்பிரதாயமாகிப்போன காசு இது.

கையிலேயே புத்தகம் வைத்திருந்ததால் வரவில் ஆயிரம் வைத்தேன்.

"வாய் கிழிய பேசினே. அக்கா கொடுக்கிறத புத்தகத்துல எழுதுற"

"அக்கா.. உறவுக்காரங்கக்கிட்ட வாங்கியதை எழுதணும். கொடுக்கிறதை எழுதக்கூடாது"

"அய்யோ.. எனக்கு தலை சுத்துதுடா." எனச் சொல்லிக்கொண்டு அக்கா அவளுடைய புத்தகத்தை வேகமாகத் தேடினாள்.

"எப்பா ரகு.. சொல்லு."

"எனக்கு ஆயிரம் கொடுத்திருக்கிற" அக்கா சிடுசிடுத்தாள்.

"அட அது இல்லப்பா. கடைசியா ஒரு வசனம் பேசினியே"

"அதை வீட்ல போய் யோசிச்சு எழுதுக்கிறலாம். இப்ப வருகிற பஸ்ல சீட் பிடிக்கப்பாரு." முண்டியடித்துக்கொண்டு ஓடினாள் அக்கா.



# அற்புத அழகியின் அற்புத முத்தம்

சஞ்சயன் செல்வமாணிக்கம்

பல தொழில்கள் இருக்கின்றன. ஆனால் சிலர் இந்தத் தொழிலை ஏன் தேர்ந்தெடுக்கின்றனர் என்று என் சிற்றறிவுக்கு இன்றுவரை புரியவில்லை. எது வித மகிழ்ச்சியையும் தராத ஒரு தொழில், மற்றவர்களுக்கு மகா எரிச்சலை ஏற்படுத்தும் தொழில். எவரும் இந்தத் தொழிளார்களை மதிப்பதில்லை. நான் உட்பட. எப்போதும் மற்றவர்களுடன் மனக்கசப்புகளை தந்து போகும் தொழில் அது.

நான் எனது நண்பர் என்னை அங்கிருக்கும் எரிபொருள் விற்பனை நிலையத்தில் காத்திருக்கும்படி கூறியிருந்தார். அவருக்காக அங்கு காத்திருந்தேன்.

அப்போது ஒரு இளைஞன் தனது அழகிய கறுப்பு நிறமான காரில், காரரைவிட அழகான இளம் பெண்ணுடன் வந்தான். அவளின் நிறம் என்னுடையதைவிடவும், காரினுடையதைவிடவும், அந்த இளைஞனைவிடவும் கறுப்பாக இருந்தது. அவர்களது வாகனத்தை என்னருகில் நிறுத்தி இறங்கிப் போயினர். பெண்ணின் பிட்டம் ஆபிரிக்கர்களுக்குரியது போன்று இருந்தது. என்னருகில் நின்றிருந்த பல கண்கள் அப்பெண்ணின் பின்னழகை ரசித்ததை அவதானிக்க முடிந்தது என்னால்.

அவர்கள் சென்று 5 நிமிடங்களின் பின் அவர்களின் வாகனத்துக்கு முன்னாலிருந்த ஒரு மிகச் சிறிய வாகனத்தில் இருந்தது ஒருவர் வெளியே இறங்க முயற்சிப்பது தெரிந்தது. அவர் காரினுள் இருந்து இந்த உலகத்திற்கு பிரசவித்துக்கொள்ள முயற்சிப்பது போன்று இருந்தது அந்தக்காட்சி. சற்று நகைச்சுவையான காட்சியாகவே இது இருந்தது.

சற்று அதிகமாகவே பெருத்த உடலைக்கொண்ட அவர் ஒரு காவல் அதிகாரி போலிருந்தார். அவரது மேலுடலையும் கீழுடலையும் ஒரு கறுப்புநிறபட்டி பிரித்துக் காட்டியபடி இருந்தது. அவரின் அந்த பட்டியில் பல இலத்திரனியல் உபகரணங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. காதில் பாட்டு கேட்கும் உபகரணமும் இருந்தது. அவரது நடையில் அவர் கேட்டுக்கொண்டிருந்த பாட்டிற்கான தாளலய நடனம் தெரிந்தது. மனிதர் வித்தியாசமானவராக இருக்கிறாரே என்று நான் நினைத்தபடியே அவரை பார்த்துக்கொண்டிருந்தேன்.

அந்த கறுப்பு இளைஞனின் காரை நன்கு உற்றுப்பார்த்தார். நான்கு முறை சுற்றிப்பார்த்தார். பின்பு மணியைப்பார்த்தார். தலையை மெதுவாய் ஆட்டிக்கொண்டார். மெதுவாய் தொலைபேசியை எடுத்து அதைவிட மெதுவாய் ஒரு இலக்கத்தை தட்டி அதனிலும் மெதுவாய் தொலைபேசியை காதிற்கருகில் கொண்டுசென்றார். ஏதோ பேசினார். மிகவும் மெதுவாய் தொலைபேசியை இடுப்புப்பட்டியில் பொருத்திக்கொண்டார்.

இடுப்புப்பட்டியில் இருந்து சிறு கணணியை எடுத்து குச்சி போன்றதோர் பொருளினால் ஏதோ எழுதினார். இடுப்புப்பட்டியில் இருந்த ஒரு உபகரணத்தை அமத்த அது பச்சை நிற ஒளிவீசி தனது இருப்பை அறிவித்தது.

இப்போது மனிதர் சிறு கணணியை இடுப்பில் பொருத்திக் கொண்டு. கமராவை எடுத்துக் கொண்டார். அழகிய அந்த கறுப்புக் காரை படம் எடுத்தார்.

இவர் சிவில் காவல்துறை அதிகாரியாக இருக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். என் மனதில் அந்த கறுப்பு இளைஞன் காரைத் திருடுவது போலவும், இவர் காவல்துறையுடன் தொடர்புகொண்டு திருட்டுக்காரை என்பதை உறுதி செய்திருக்கிறார் என்று நினைத்துக்கொண்டிருக்கும் போது தான் அந்த அதிசயம் நடந்தது.

பச்சை நிற ஒளிவீசி தனது இருப்பைக் காட்டிய அந்த உபகரணம் கிர்ர்ர் என்று இயங்கத் தொடங்கியது அதனுள் இருந்து ஒரு மஞ்சள் காகிதம் வெளியே வரவும் அவர் அதை லாவகமாகக் கிழித்து அந்த இளைஞனின் காரின் கண்ணாடியில் ஒட்டிவிட்டார்.

அப்போது தான் புரிந்தது சகலரும் வெறுக்கும், இன்பத்தையே தராத தொழிலான வாகனத்தரிப்பிட கண்காணிப்பாளர் அவர் என்று.

அதன் பின்னான 10 நிமிடங்களில் மேலும் 4 - 5 வாகனங்களுக்கு தண்டப்பணம் விதித்து மஞ்சள் நிற து தாசியை ஒட்டிவிட்டார். பலருக்கும் அந்த தரிப்பிடம் முன்பு போல் இலவச தரிப்பிடம் அல்ல என்பது தெரியாதிருந்தது.

அந்நேரம் பார்த்து தனது அழகியின் பிட்டத்தில் வைத்த கையை எடுக்காது மறு கையில் தொலைபேசியுமாக நடந்து வந்து கொண்டிருந்தான் அந்த இளைஞன்.

ஆஹா! கிளைமாக்ஸ் ஆரம்பிக்கப்போகிறது என்று என் உள் மனது ஆனந்தக்கூத்தாடியது.

எனது எதிர்பார்ப்பை ஏமாற்றவில்லை அந்த இளைஞன். தனது காரில் மஞ்சள் துண்டினைக் கண்டதும் அவனது இரத்தம் கொதிநிலைக்கு ஏறியது. வாயில் இனிமையான வார்த்தைகளுடன் வாகனத்தை சுற்றிச் சுற்றி வந்தான்.

என்னைப் பார்த்தான். நான் அந்த மனிதர்தான் இதை எழுதிவைத்தார் என்று பத்தவைத்துவிட்டு புதினம் பார்க்கலானேன்.

மெலிந்த இளைஞனும், மிகவும் பருத்த மனிதரும் நேரெதிரில் நின்று கொண்டிருந்தனர். அந்த மனிதர் மிதித்தால் இவன் சப்பளிந்துவிடுவான்.

வாகனதரிப்பிட கண்காணிப்பாளரோ அவனின் பேச்சை கேட்டமாதிரி தெரியவில்லை. ஒரு சிறு குச்சியினால் பல்லைக் குடைத்து, நாக்கினால் எதையோ தட்டியெடுத்து துப்பியபடியே வேறொரு வாகனத்துக்கு தண்டப்பணம் விதித்துக்கொண்டிருந்தார்.

இளைஞனின் முகம் அவனது கரிய நிறத்தையும் கடந்து சிவந்தது போல இருந்தது எனக்கு. மீண்டும், ஏன் எனக்கு தண்டப்பணம் விதித்தாய் என்றான் இளைஞன்.

நிமிர்ந்து இளைஞனைப் பார்த்து முதலில் அதிகாரிகளுடன் பேசக் கற்றுக்கொள் என்றார்.

இளைஞன் நிதானத்தை இழந்திருந்தாலும் மிக அறுதலாக தனது கேள்வியை மீண்டும் கேட்டான். பின்பு அவரே அவனை அழைத்துவந்து அவனது வாகனம் நிறுத்தப்பட்டிருக்கும் முறை பிழையானது. அடுத்தவருடைய இடத்தையும் சேர்த்து உனது வாகனம் நிற்கிறது என்றார். தவிர இது கட்டணம் செலுத்தி வாகனம் நிறுத்துமிடம், நீங்கள் கட்டணமும் செலுத்தவில்லை, அது தான் தண்டம் விதித்தேன் என்றார். அவன் எவ்வளவோ வாதாடியும் அவர் இரங்கவில்லை.

இன்றைய நாளும் நல்லதே ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமையல் சமையல்

## இறால் வறுவல்

### தேவையான பொருட்கள்

இறால் - 500 கிராம், தக்காளி சாஸ் - 2 மே.கரண்டி, மிளகாய் வற்றல் விழுது - 1 மே.கரண்டி, சோள மா - 4 மே.கரண்டி, இஞ்சி, பூண்டு விழுது - 2 ½ மே.கரண்டி, முட்டையின் வெள்ளைப்பகுதி – 1, உப்பு - 1 தே.கரண்டி, தண்ணீர் - 4 மே.கரண்டி, எண்ணெய் - 1 லிட்டர்



முட்டையின் வெள்ளைப் பகுதி, 3 மே.கரண்டி சோளமா, ½ தே.கரண்டி உப்பு, தண்ணீர், எண்ணெய் இவற்றைச் சேர்த்து ஒரு கலவையைத் தயாரிக்கவும். அந்தக் கலவையில் இறாலை 20 நிமிடம் ஊர வைக்கவும். தக்காளி சாஸ், உப்பு, மீதமுள்ள

### செய்முறை

சோள, இஞ்சி, பூண்டு விழுது, மிளகாய் வற்றல் விழுது ஆகியவற்றை ஒன்றாகக் கலக்கவும். தேவையான அளவு எண்ணெயை தாச்சியில் இட்டு சூடாக்கி, ஊர வைத்த இறாலை பொன்னிறமாக வறுத்து எடுக்கவும். 3 மே.கரண்டி, எண்ணெயை சூடாக்கி, தக்காளி சாஸ் கலவையை 1 நிமிடம் வதக்கவும். இதில் இறால்லைக் கலந்து மேலும் 5 நிமிடம் வதக்கவும். மணக்க மணக்க இறால் பிரட்டல் தயார்.

## மோரின் மருத்துவ மகத்துவங்கள்



மோரில் விட்டமின் பி, புரோட்டீன் மற்றும் பொட்டாசியம் அதிகம் உள்ளது. அதில் வைட்டமின் பி, அதாவது ரிபோப்ளேவின் தான் உணவை எனர்ஜியாக மாற்றவும், செரிமானத்தை அதிகரிக்கவும், ஹார்மோனை சீராக சுரக்கவும் உதவி புரிகிறது. தினமும் ஒரு டம்ளர் மோர் குடித்து வந்தால், வைட்டமின் குறைபாடு ஏற்படுவதைத் தடுக்கலாம்.

மருத்துவ பயன்கள்:

காரசாராமான உணவுகளை உட்கொண்ட பின்னர் ஒரு டம்ளர் மோர் குடித்தால் வயிறு எரிச்சல் அடங்கும்.

வயிற்றை சுற்றி எண்ணெய் மற்றும் நெய்யினால் ஏற்பட்ட படலத்தை நீக்குவதோடு கொழுப்பையும் கரைக்கும்.

மோருடன் இஞ்சி, மிளகு மற்றும் சீரகம் போன்றவற்றை சேர்த்து குடித்து வந்தால், செரிமானம் நன்கு நடைபெறும். அதிலும் உங்கள் வயிறு உப்புசமாக, ஒருவித அசௌகரியமாக உணரும் போது, இதைக் குடித்தால், உடனடி நிவாரணம் கிடைக்கும்.

இதில் எலக்ட்ரோலைட்ஸ் மற்றும் தண்ணீர் அதிகமாக இருப்பதால், இதனை கோடையில் குடித்து வந்தால் உடல் வறட்சிஅடைவதைத் தடுக்கலாம்.

மோரில் இரத்த அழுத்ததைக் குறைக்கும் தனித்துவமான பயோஆக்டிவ் புரோட்டீன், ஆன்டி-வைரல், ஆன்டி-பாக்டீரியல் மற்றும் ஆன்டி-கேன்சர் பொருள் நிறைந்துள்ளதாக தெரிவிக்கிறது.

மோரில் நிறைந்துள்ள நன்மைகளில் முக்கியமானது அசிடிட்டி பிரச்சனைக்கு நிவாரணம் தரும் என்பது தான். மோர் வயிற்றைகுளிர்ச்சி அடையச் செய்து, அமில படலத்தால் ஏற்படும் வயிற்று எரிச்சலை குறைத்து உடனடி நிவாரணத்தைத் தரும்.

டிசைன்ஸ்



அழகு குறிப்பு

## முதிர்ச்சிச் சுருக்கத்தினை தடுக்க...



தினமும் காலை, மாலை வேளைகளில் 5 நிமிடம் மூச்சுப்பயிற்சி செய்து வந்தால் அன்றைய தினம் முழுவதும் ப்ரெஸ் ஆக காணப்படுவீர்கள்.

தினமும் காலையில் எழுந்ததும் ஒரு லிட்டர் தண்ணீர் குடித்து வந்தால் அன்றைய நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருக்கும்.

தினமும் காலையில் பழங்கள் சாப்பிடுவது இளமையை அதிகரிக்கும். குறிப்பாக, ஆப்பிள், ஆரஞ்சு, பப்பாளிப் பழங்கள் சாப்பிடுவது நல்லது.

தினமும் காலையில் ஒன்று அல்லது இரண்டு கேரட்டை பச்சையாக சாப்பிட்டு வந்தால் உடலில் ஒருவித மினுமினுப்பை பெறலாம்.

கறிவேப்பிலையின் இளம் தளிர்களை காய வைத்து பொடியாக்கி, அதை தேங்காய் எண்ணெயில் கலந்து தலையில் தேய்த்து வந்தால் முடி கருகருவென்று வளரும்.

தயிருடன் கடலை மாவு சேர்த்து முகத்தில் பூசி வந்தால் முகப்பரு தொல்லை வராது.

10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு தடவை முல்தானி மெட்டியுடன் பன்னீர் கலந்து முகத்தில் பூசி வந்தால் முகம் பளிச்சென்று காணப்படும்.

2தே.கரண்டி தேனுடன் எலுமிச்சம் பழச்சாறு ¼ சொட்டு கலந்து குடித்து வந்தால் உடலில் தேவையற்ற கொழுப்பு சேர்வது தடுக்கப்படும்.

பப்பாளி வயிற்றுக்கோளாறுக்கு மருந்தாகப் பயன்படுகிறது, செரிமானத்தை ஊக்குவிக்கிறது, பப்பாளிக் காயின் பால் வயிற்றில் உள்ள பூச்சிகளை அகற்றுகிறது.

பப்பாளி தோலில் உள்ள மருக்கள் மற்றும் கரும் புள்ளிகளை நீக்குகிறது. இதன் விதைகளும் பூச்சிகளை அகற்றும் மருந்து தயாரிக்க பயன்படுகிறது.

பப்பாளி இலைகளின் சாறு காய்ச்சலைப் போக்கும் மருந்தாக பயன்படுகிறது. இதய நோயைக் குணப்படுத்தவும் இது உதவுகிறது.

வைட்டமின் ஈ சத்து நிறைந்த பாதாம், பிஸ்தா, முந்திரிப்பருப்பு போன்ற கொட்டை வகைகள், விதை வகைகளான வேர்க்கடலை மொச்சைப் பயறு வகைகளை அழகிய உணவு வகைகளாக உங்கள் அன்றாட உணவில் அளவோடு சேர்த்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் உங்கள் மேனி முதுமைச் சுருக்கமின்றி இளமையுடன் திகழும்!



உங்கள் உடம்பின் கொலஸ்ட்ரால் அளவை கட்டுப்படுத்தும் ஹை டென்ஸிட்டி லைபோபுரோட்டீன் (ஹெச்.டி.எல்) சத்து நிறைந்த ஆலிவ் எண்ணெய் உங்கள் மேனியை உலர விடாமல் ஈரப்பசையுடன் மின்னிப்-பிரகாசிக்கச் செய்யும்!

நாள் முழுக்க வேலை செய்தால் கண்கள் சோர்ந்து போகும். அப்போது வைட்டமின் ஏ சத்து நிறைந்த கேரட்டினை உட்கொள்ளுங்கள். சோர்வு நீங்கி கண்கள் புத்தொளி பெறும். சுறுசுறுப்படைவீர்கள்!

பிராக்கோலி இலைகள் நக வளர்ச்சிக்கு மட்டுமன்றி மன அமைதிக்கும் உகந்தது. பிராக்கோலி மர இலைகள் கிடைக்காவிடில் அதற்கு இணையான காலிபிளவர் மற்றும் பீட்ரூட் இலைகள் நக வளர்ச்சிக்கு பேருதவி புரிகின்றன.

வைட்டமின் டி சத்து நிறைந்த பால், கல்சியம் சத்து நிறைந்த பச்சை கீரை வகைகள், பாஸ்பரஸ் சத்து நிறைந்த பூசணி விதை போன்ற-வைகளும் அழகிய உணவுப் பட்டியலில் இடம் பெறுகிறது. அவை எலும்பு வளர்ச்சிக்குத் துணைபுரிந்து, ஆஸ்ட்டியோபீனியா என்ற எலும்புத்தளர்ச்சி மற்றும் வலுவின்மை என்கிற நோயிலிருந்து காப்பாற்றுகிறது. இந்த உணவு வகைகளை நம் அன்றாட உணவில் அளவோடு உட்கொண்டால் அழகாக வாழலாம்!

## வினோதங்கள்

### கவர்ச்சி காட்டுவதை தடுக்க மார்பகங்களில் சூடு

ஐ.நாவை சேர்ந்த இங்கிலாந்து தேசிய பெண்கள் குழு சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சில தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் மார்பகங்கள் ஆண்களை கவரும் வகையில் கவர்ச்சியாக வளரக்கூடாது என்பதற்காக, சூடான கற்கள், பெரிய கட்டைகள் போன்றவற்றை பயன்படுத்தி மார்பகங்கள் மீது சூடு வைக்கின்றனர் (மார்பக சலவை சடங்கு) என தெரிவித்துள்ளது.

இப்படியும் நடக்கலாம்

### 450அடியிலிருந்து தள்ளி விடப்பட்ட சிறுவன்

குவாத்தமாலா எனும் இடத்தில் பாடசாலை முடித்து வீடு திரும்பிய 12 வயது நிரம்பிய பேரேஸ் எனும் சிறுவனை கொலைகார கும்பல் ஒன்று மறித்து அப்பகுதியில் உள்ள பேருந்து சாரதி ஒருவரை கொலை செய்யும் படி வற்புறுத்தியுள்ளனர். இதற்கு மறுப்பு தெரிவித்த அச்சிறுவனிற்கு இரண்டு வாய்ப்புக்கள் கொடுத்துள்ளனர். ஒன்று அகலக் கத்தியால் தன்னைத் தானே குத்தி சாக வேண்டும் இரண்டாவது உயரமான பாலத்தில் இருந்து தற்கொலை செய்து கொள்வதாகும். இதில் இரண்டாவதை தெரிவு செய்த சிறுவனை 450 அடி உயர்த்தில் இருந்து தள்ளி விட்டுள்ளனர்.

மூன்று நாட்கள் கழித்து மீட்டுப்படையினருடன் தேடியபோது புதரொன்றினுள் இருந்து கண்டெடுக்கப்பட்டான். இருப்பினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான் அச்சிறுவன்.

### நிலவில் பாலியல் பலாத்காரம்

அமெரிக்க விமானப்படையின் முன்னாள் பெண் ஊழியை ஒருவர், சமீபத்தில் 1980களில் எனக்கு 25 வயது இருக்கையில் வால் உள்ள ஊர்ந்து செல்லும் வேற்று கிரகவாசிகளால் கடத்தப்பட்டேன்.

அவர்கள் 7 மாத காலத்தில் என்னை 8 முதல் 10 முறை நிலாவுக்கு கடத்தி சென்றனர். என்னை நிலாவில் வைத்து அவர்கள் பலமுறை பாலியல் பலாத்காரம் செய்தனர். தினமும் இரவு என்னை அவர்கள் பாலியல் பலாத்காரம் செய்தனர். இரவு நேரத்தில் என்னை தூங்க விடாமல் [illegible] செய்தனர் என தெரிவித்துள்ளார்.

- சவுதி அரேபியாவில் தந்தையுடன் வாழ்ந்து வந்த யாரா எனும் சிறுமி தந்தையை பார்த்து, உன்னை எனக்கு பிடிக்கவில்லை என்று கூறியதால் குழாய் ஒன்றினால் தலையில் அடித்துக்கொன்ற தந்தையின் வெறிச்செயல் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.
- அமெரிக்காவில் தனது திருமணத்திற்கு வந்திருந்த உறவினர் சென்ற கார் விபத்துக்குள்ளானதை கண்டதும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உதவுவதற்காக மணக்கோலத்தில் காரிலிருந்து இறங்கி ஓடிவந்து உதவிய பெண்ணின் புகைப்படம் வைரலாக பரவி வருகிறது.



- பாகிஸ்தானில் நபரொருவர் தனக்குத் தானே தீ வைத்துக்கொண்டு வீதியில் சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வரி விதிப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே அவர் தீ வைத்துக்கொண்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில் உடல் முழுவதும் எரிந்த நிலையில் சாலையில் சென்ற இவரை பார்த்த பொது மக்களில் சிலர் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.
- விமானம் தாமதமானதற்கு தகுந்த காரணத்தை கேட்ட பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஆபாச நடிகை ஒருவரிடம் அவரது தொழில் குறித்து கீழ்த்தரமாக பேசிய காரணத்திற்காக விமான நிறுவனம் ஒன்று மன்னிப்பு கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## குழப்பங்களின் போது ஒரு முஃமின்

### குழப்பங்கள் நிறைந்த பிரதேசம்

அதன் பக்கமாக வசிப்போர் மக்கள் அதில் இருந்து எடுக்க நாம் அனுமதித்தால் அவை அனைத்தையும் அவர்கள் எடுத்துச் சென்று விடுவார்கள் எனக் கூறி அதற்காக சண்டயிட்டுக் கொள்வார்கள். அவர்கள் நூறுபேரில் ஒருவர் மாத்திரமே மீதமாக இருப்பர் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

முஸ்லிம் கிரந்தத்தின் மற்றொரு அறிவிப்பில் அங்கு செல்பவர் அதில் எதையும் எடுக்க வேண்டாம் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளதாக இடம் பெற்றுள்ளது.

குழப்பங்களின் போது ஒதுங்கி வாழுதல் என்பது நபி (ஸல்) அவர்களின் முக்கிய வழிகாட்டல்களில் ஒன்றாக இடம் பெறுவதை இங்கு கவனிக்க முடிகின்றது.

1980- 1988 வரையான ஈராக், ஈரான் போரின்போது பத்து லட்சம் பேர் உயிரிந்துள்ளனர்.

எட்டு வருடகால யுத்தத்தின்போது 400 பில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவு செய்யப்பட்டுள்ளது.

2004ல் ஈராக்கை ஆக்கிரிமித்த அமெரிக்கப்படையினரில் மட்டும் 2013 காலப்குதி வரை (73.000) எழுபத்தி மூவாயிரம் பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். காயப்பட்டவர்கனின் எண்ணிக்கை ஒரு மில்லியனையும் தாண்டி இருந்ததாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

அமெரிக்க ராணுவத்தில் உடல் ஊனமுற்றவர்கள் எண்ணிக்கை 1,620.906 (பதினாறு லட்சத்தி இருபதாயிரத்தி, தொள்ளாயிரத்து ஆறுபேர் என
செய்திகள் வெளியிட்டுள்ளது.

ஈராக்கில் 2013 மாத்திரம் 714 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.


சிரியாவில் மூன்று ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போரில் இதுவரை 1.62.000 பேர் உயிரழந்துள்ளனர்.

இன்றும் ஈராக்கிலும் சிரியாவிலும் போர் நடந்து கொண்டே இருக்கின்றது. வஹியின் அடிப்படையில் வெளிப்பட்ட நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்களில் எவ்வளவு பெரும் உண்மைகள் உள்ளடங்கி இருக்கின்றன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

தொடரும் .. ..

– எம்.ஜே.எம். ரிஷ்வான் –

## சிறிய இறைவாக்கினர்கள் வரலாறு




அடிமைகளைக் கொடுமைப்படுத்து-கின்றனர். வியாபாரத்தில் விளையாடுகின்றனர். ஏன், அவர்கள் இறைவனுடைய திருநாட்கள் எப்போது முடியும், நாம் எப்போது வேலையை ஆரம்பிக்கலாம் என்ற ஆவலோடு காத்திருக்கின்றனர். ஆனால் இதே நேரத்தில் அவர்கள் பக்தியுள்ளவர்கள். கடவுளின் திருநாட்களைப் பரிசுத்தமாய் அனுசரிக்கமறப்பதில்லை. எனவேதான் ஆமோஸ் கூறுகிறார், "உங்கள் திரு விழாக்களை நான் வெறுத்து அருவருக்கிறேன் உங்கள் வழிபாட்டுக் கூட்டங்களில் எனக்கு விருப்பமே இல்லை" என்று (5:21). எளியவர்கள், காலில் அணியப்படும் செருப்பை விடவும் தரம் தாழ்த்தப்பட்டுவிட்டார்கள். அவர்கள் ஒரு சோடிசெருப்புக்காக விற்கப்படுகிறார்கள். தந்தையும், மகனும் ஒரே அடிமைப்-பெண்ணைத் தங்கள் வைப்பாட்டியாக வைத்துக் கொள்கிறார்கள் (2:6-8). விதிமுறைப்படி, மதிக்கப்பட வேண்டும் (இச 27:30 விப 21:18). ஆனால் இங்கு, எல்லாம் தலைகீழாக நடைபெறுகிறது. தங்களிடம் அடைமானம் வைத்த ஏழைகளின் பொருளை (முக்கியமாக அடிமைகளின்மேலாடைகளை) அன்று மாலையே அவர்களிடம் (அடிமைகள் பணத்தைத்திருப்பி கொடுக்காவிட்டாலும்), திரும்பிக் கொடுத்துவிட வேண்டும் (விப 22 :26). ஆனால், இவர்கள் அதைத் திருப்பிக் கொடுப்பதற்குப் பதிலாக, தங்களின உடமையாக்கிக் கொள்கிறார்கள்.

2:9-12 கடவுள் அவர்களுக்கு என்ன-வெல்லாமோ செய்துள்ளார். அவர்கள் மேல் படையெடுத்து வந்த சக்திவாய்ந்த அமோரியர்களை அழித்தார். எகிப்திலிருந்து விடுவித்து, 40 ஆண்டுகள் பாலைவனத்தில் நடத்தி வந்து இறுதியில் வாக்களித்த நாட்டையும் கொடுத்தார். இவைகளை-யெல்லாம்மக்கள் பெருமையாகப் பேசுகிறார்கள். அவர்களுக்கு இறைவாக்கு உரைக்க, இறைவாக்கினர்கள், நாசரேயர்-களை அனுப்பினார். ஆனால் மக்கள் இவர்களை ஏற்றுக் கொள்ள வில்லை. ஆக இறைவாக்கினர்களை ஏற்றுக் கொள்ளாதது, இஸ்ரயேல் செய்த மற்றொரு குற்றம்.

3:1-2 இஸ்ரயேல் மக்கள், தாங்கள்கடவுளின் மக்கள், தேர்ந்-தெடுக்கப்பட்டமக்கள்...

தொடரும் .. ..

www.bible.me

## ஒரு ஆணுக்கு பெண் உயிர்த் தோழியாகலாமா???

ஒரு ஆணுக்கு, ஒரு பெண் உயிர் தோழியாக இருந்தால் அவனது வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்று சொன்னால் அது மிகையல்ல.



ஏனெனில், தனது நண்பனின் வாழ்க்கைக்கு தேவையான பாதைகளை ஏற்படுத்திக்-கொடுப்பதில் உறுதுணையாக இருப்பாள்.

ஆனால், பெண் தோழியை வைத்திருப்பது என்பது சில நேரங்களில் மன வலியையும் ஏற்படுத்தும்.

ஒரு ஆணுக்கு என்னதான் ஏராளமான ஆண் நண்பர்கள் இருந்தாலும், ஒரு பெண் தோழி இருப்பது அவசியம்.

ஏனெனில், பிரச்சனைகளில் சிக்கித்தவிக்கும் வேலைகளில், அதனை சரியாக புரிந்துகொண்டு அந்த பிரச்சனைக்கு சரியான தீர்வை ஏற்படுத்திக்கொடுப்பார்கள்.

"உண்மையான நண்பனை ஆபத்தில் அறிவாய்" என்ற பழமொழி பெண் தோழிகளுக்கு நிச்சயம் பொருந்தும், நீங்கள் உயிருக்காகவோ, அல்லது பண உதவி இல்லாமல் சிக்கித்தவிக்கும்போது கண்டிப்பான முறையில் உங்கள் சூழ்நிலையை உணர்ந்து உதவுவார்கள்.

நீங்கள் ஒரு பெண்ணிடம் காதல் வயப்பட்டு-விட்டீர்கள் என்பதை சரியான முறையில் கண்டுபிடிப்பது உங்கள் பெண் தோழியாகவே இருப்பாள்.

அது மட்டுமின்றி நீங்கள் காதலிக்கும் பெண், உங்களுக்கு பொருத்தமானவளா அல்லது உங்கள் குடும்பத்திற்கு சிறந்த மருமகளா என்பதை கச்சிதமாக கூறிவிடுவாள்.

ஏனெனில் அவளும் ஒரு பெண் என்பதால், நீங்கள் காதலிக்கும் பெண்களை பற்றி உங்கள் தோழியிடம் கூறி கொஞ்சம் அறிவுரை கேட்டுக்கொள்ளுங்கள்.

ஆனால், இந்த அறிவுரை அளவுக்கு மீறி சென்றால் ஆபத்தே, உங்கள் காதலியை பற்றி அவள் அதிகமாக விமர்சிக்கும்போது அதனை உங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆனால், இதனை வெளியில் சொல்ல முடியால் தவிக்க வேண்டி வரும், தப்பித்தவறி வெளியில் சொல்லிவிட்டால் அது இருவருக்குமான பிரிவினை ஏற்படுத்திவிடும்.



*சார்! லோன் கேட்கறீங்களே எங்க கணக்கு வைத்திருக்கீங்க?*

எல்லாத்துலயும் தான்.டுவிட்டர். ஃபேஸ்புக், மளிகைக்கடை ....!!



**15 வருஷமா தீராத உங்க வியாதிக்கு ஒரு வழியா மருந்து கண்டு பிடிச்சுட்டேன். ஆனா பேட் லக் எழுதி வெச்ச என்னோட கையெழுத்தை என்னாலேயே படிக்க முடியல!**

## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : நீண்ட நாள் எதிர்பார்ப்பும் நிறைவேறும். நல்லோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். விற்பனை அதிகரிப்பதால் வருமானம் பன்மடங்கு உயரும்.

**ரிஷபம்** : குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். வருமானத்திற்கான புதிய முயற்சி வெற்றி பெறும். உடல்நலனில் அக்கறை தேவை. முயற்சிக்கேற்ற முன்னேற்றம் உண்டாகும்.

**மிதுனம்** : அன்றாடப்பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமையும். எதிரிகளின் பலம் குறையும். தாய் வழி உறவினர்களால் உதவி கிடைக்கும்.

**கடகம்** : பேச்சில் இனிமை உண்டாகும். புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை ஏற்படும். சமூகப்பணிகளில் ஈடுபடுவீர்கள். வாகனம் வாங்க யோகம் உண்டு.

**சிம்மம்**: சோம்பலைத் தவிர்த்து பணியில் கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத் தேவைக்கான பணச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**கன்னி** : புதிய முயற்சி சிறப்பாக நிறைவேறும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் காண்பீர்கள்.

**துலாம்** : மற்றவர் வி'யத்தில் கருத்து சொல்வதை தவிர்க்கவும். குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது.

**விருச்சிகம்** : உறவினர் வருகையால் கலகலப்பு உண்டாகும். குடும்பத்தில் ஒற்றுமை பெருகும். எதிரியின் கெடு செயல் பலமிழக்கும். பணிச்சுமைக்கு ஆளாகலாம்.

**தனுசு** : புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். குடும்பச் செலவு அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். எதிரி தொல்லை மறையும்.

**மகரம்** : மனதில் தைரியம் அதிகரிக்கும். வருமானம் கூடும். மருத்துவ சிகிச்சை தேவைப்படும். வியாபார வளர்ச்சிக்கு புதியவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்** : குழப்பம் நீங்கி, மனதில் தெளிவு பிறக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். மனைவியின் மனதில் நம்பிக்கைக் குறைவு நேராமல் பார்த்துக் கொள்ளவும்.

**மீனம்** :உங்களின் நற்செயலுக்கு அங்கீகாரம் கிடைக்க தாமதமாகலாம். பேச்சிலும், செயலிலும் நிதானத்தைப் பின்பற்றவும். குடும்பச் செலவு அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. இலங்கையிலுள்ள மூவின மக்களும் வழிபடச்செல்லும் இடம்
 i. சிவனொளி பாதமலை ii. பீதுறுதாலகால மலை
 iii. சிகிரியா iv. வெல்கம் விகாரை

02. சிறுவர்களுக்கு எதிராக நிகழும் விரோத செயல்களில் அடங்காதது
 i. வேலைக்கு அமர்த்துதல் ii. சித்திரவதை செய்தல்
 iii. பாலியல் துன்புறுத்தல்
 iv. பாடசாலைக் கல்வியை வழங்குதல்



03. இவ் வீதிக்குறியீடு உணர்த்துவது?
 i. பஸ் சாரதிகள் அவதானமாகச் செல்லவும்
 ii. முன்னால் பஸ்
 iii. இலங்கை போக்குவரத்துச்சபை iv. பஸ் தரிப்பிடம்

**பகுதி 02**

01. i. 1090 என்பதை எழுத்தில் எழுதுக? ..............................
 ii. பதினெட்டை உரோம எண்ணில் எழுதுக? ..............................

02. 6050ml ஐ L, ml இல் தருக ......................

03. கிரிக்கட் போட்டியொன்றைப் பார்வையிடுவதற்காக 8303 ஆண்கள் வந்திருந்தனர். ஆண்களை விட 2636 பெண்கள் குறைவாக வருகை தந்திருந்தனர். எனின் போட்டி நிகழ்ச்சியைப் பார்வையிடுவதற்காக வந்திருந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை யாது?

..............................

04. குவியலொன்றில் 609 மாம்பழங்கள் உள்ளன. அவை மூன்று பெட்டிகளில் சமனாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் இருக்கும் மாம்பழங்கள் எத்தனை?

..............................

05. உலக வர்த்தகமையம், இலங்கை மத்திய வங்கியின் தலைமையகம், லங்காதிலக விகாரை, இலங்கை வயார்ட்கிளி, சிலோன் இந்திகோ றோயல் வண்ணத்துப் பூச்சி என்பன பொறிக்கப்பட்டுள்ள நாணயத்தாள்?

..............................

06. 1kg தேயிலையின் விலை ரூ 375.00 எனின் 200g தேயிலையின் விலை?

..............................

07. பேருந்து வண்டியொன்று மட்டக்களப்பு பேருந்து நிலையத்திலிருந்து 09.30 மணிக்குப் புறப்பட்டு 14.15 மணிக்கு கொழும்பு பேருந்து நிலையத்தைச் சென்றடைந்தது பேருந்து கொழும்பைச் சென்றடைய எடுத்த காலம்?

..............................

08. 8500g சீனிப்பொதி ஒன்றினை வாங்கி 250g அளவு கொண்ட எத்தனை சிறிய பொதிகளில் அடைக்கலாம்?

..............................

09. ஆங்கிலத்தில் உள்ளதன் கருத்தை தமிழில் எழுதுக
 1. Please give me a book : ..............................
 2. be quiet : ..............................
 3. How are you : ..............................

10. சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக
 1. மலசல கூடம் எங்கே உள்ளது? ..............................

11. தமிழில் எழுதுக
 1. செனசுறா (னு) தா ..............................
 2. இற பாயனவா ..............................

அடுத்த இயத்திலிருந்து விடைகள் பிரசுரிக்கப்படும்



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு






## முட்டாளாக்கிய திட்டம்

ஓர் ஊரில் இளைஞன் ஒருவன் இருந்தான். 'சிக்கனமான பெண்ணையே திருமணம் செய்து கொள்ள வேண்டும், அப்பொழுது தான் வாழ்க்கை இனிமையாக இருக்கும்' என்று நினைத்தான் அவன்.

பெண் பார்க்கப் போகும் போதே அந்தப் பெண் சிக்கனம் உடையவளா என்பதை எப்படி அறிவது என்று சிந்தித்தான். நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது. முதன் முதலாகப் பெண் பார்க்க ஒரு வீட்டிற்குப் போனான். அந்தப் பெண் அழகாக இருந்தாள். அந்த ஊரிலேயே சிறந்த குடும்பங்களுள் ஒன்றாக அவள் குடும்பம் இருந்தது.

மாப்பிள்ளை குடிப்பதற்காக அவள் ஒரு கோப்பையில் பால் கொண்டு வந்தாள் அதை வாங்கினான் அவன். கோப்பையில் வழிய வழிய பால் இருந்தது. இதைப் பார்த்த அவன், "இப்படிப்பட்ட ஊதாரியை திருமணம் செய்தால் ஒரே மாதத்தில் என் சொத்தை அழித்து விடுவாள்" என்று நினைத்தான். "பெண் பிடிக்கவில்லை" என்று சொல்லி விட்டு அங்கிருந்து புறப்பட்டான். அவன் பெண் பார்க்கப்போன எல்லா இடங்களிலும் கோப்பை நிறைய பாலே அவனுக்கு தரப்பட்டது.

எல்லாப் பெண்களும் ஊதாரிகளாவே இருக்கின்றனர். எனக்கு ஏற்ற சிக்கனமான மனைவி கிடைக்க மாட்டாள் என்று நம்பிக்கை இழந்தான் அவன். பக்கத்து ஊரில் உள்ள ஒரு பெண்ணைத் திடீரென்று பார்க்கச் சென்றான் அவன். அவள் பார்க்க அவலட்சனமாக இருந்தாள். வழக்கம் போல் அவளும் பால் கொண்டு வந்தாள். கோப்பையில் பால் பாதி அளவு தான் இருந்தது.

இவள் தான் ஏற்ற துனை என நினைத்து திருமணம் முடித்தான்.

முதல் இரவு, கோப்பை நிறைய பாலுடன் கணவனின் அறைக்குள் நுழைந்தாள் அவள் வரும் பொழுதே பால் வழிந்து எங்கும் சிந்தியது. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அவன். அவளைப் பார்த்து நான் உன்னை பெண் பார்க்க வரும் போது அரைக் கோப்பை பால் தான் கொண்டு வந்தாய். ஆனால் இப்பொழுதோ பாலை கோப்பை நிறைய ஊற்றி கொண்டு வருகிறாயே. ஏன்? என்று கேட்டான். அன்று நீங்கள் திடீரென்று என்னை பெண் பார்க்க வந்து விட்டீர்கள். எங்கள் வீட்டில் அரைக் கோப்பை பால் தான் இருந்தது. அதைத்தான் உங்களுக்கு கொண்டு வந்து தந்தேன் என்றாள்.

என்ன செய்வான் அவன். புத்திசாலித்தனமாகப் போட்ட திட்டம் தன்னை வாழ்நாள் முழுமையும் முட்டாள் ஆக்கி விட்டதே என்று எண்ணி வருத்தப்பட்டான் அவன்.




**சிந்திக்க .. ..**
ஒரு முறை வந்தால் அது கனவு:
இரு முறை வந்தால் அது ஆசை:
பல முறை வந்தால்
அது இலட்சியம்

## விடுகதைகளும் விடைகளும்


1. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?
2. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன?
3. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்- அது என்ன?
4. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது- அவர்கள் யார்?
5. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம்- நான் யார்?

**விடைகள்**
1. சைக்கிள்
2. பட்டாசு
3. தராசு
4. எறும்பு
5. தபால் பெட்டி

கே. பிரணவி,
தரம் -05
திருகோணமலை



வீ. மேஷானினி
தரம் - 01



எம்.பரிதி
தரம் - 02




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

### பகுதி 02

01. அ. ஒரு பொறியில் உள்ள பற்சில்லு தொடக்கத்தில் சம நிகழ்வுகளுடன் வலஞ்சுழியாக அல்லது இடஞ்சுழியாகச் சுழல்கிறது. அச்சந்தர்ப்பத்தில் சுழற்சி திசையைக் காட்டுவதற்கு வரையப்பட்ட பூரணமற்ற மர வரிப்படம் கீழே காணப்படுகின்றது. அதில் உரிய நிகழ்வுகளைக் குறிப்பிடுக.




ஆ. பற்சில்லு ஒரு கணத்திற்கு நின்று பின்வரும் நிகழ்தகவுகளுடன் மறுபடியும் வலஞ்சுழியாக இருந்தால், அடுத்த சந்தர்ப்பத்திலும் அது அதே திசையில் சுழல்வதற்கான நிகழ்தகவு 3/4 ஆகும். முதற் சுழற்சி இடஞ்சுழியாக இருத்தால், அடுத்த சந்தர்ப்பத்திலும் அது அதே திசையில் சுழல்வதற்கான நிகழ்தகவு 1/3 ஆகும். மர வரிப்படத்தை விரிவுப்படுத்தி இரண்டாம் சுழற்சிக்குரிய நிகழ்தகவுகளைக் குறிக்க.

இ. பற்சில்லு இவ்விரு சந்தர்ப்பங்களில் எதிர்த் திசைகளில் சுழல்வதில் பார்க்க ஒரே திசையில் சுழல்வதற்கு கூடிய நாட்டத்தைக் கொண்டதெனக் காட்டுக.

ஈ. 1 தொடக்கம் 4 வரைக்கும் இலக்கமிடப்பட்ட ஒரு கோடத நான்முகித் தாயக் கட்டையும் ஒரு கோடாத நாயணயமும் ஒரே தடையில் மேலே எறியப்படுகின்றன. தாயக்கட்டையில் ஓர் ஒற்றை எண்ணும் நாயணயத்தில் தலையும் கிடைப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

02. 02. ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்துக. 0.003Kg, 3075mg, 3.5g

03. சுருக்குக. $(x^2-5x+6)/3(x-2)$

## பாடம் : வரலாறு

01. 15ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாணப்பிரதேசம் விஜயநகரப் பேரரசிற்குக் கீழ்ப்படிந்தமை பற்றிய தகவல்களைக் குறிப்பிடும் மூலம் பின்வருவனவற்றுள் எது?
   (1) பணாக்கடுவாச் செப்பு பட்டயம்
   (2) வல்லிபுரம் பொற் பட்டயம்
   (3) ஆலம்புண்டிச் செப்பு பட்டயம்
   (4) செகராஜசேகர மலை என்னும் நூல்

02. மகத இராச்சியத்தை ஆட்சி செய்த காலத்திற்கேற்ப பின்வரும் அரசர்களை ஒழுங்குபடுத்தும் போது சரியான விடை யாது?
   A- அஜாதசத்தன் B - மகாபத்மானந்தன்
   C - பிம்பிசாரன் D- சந்திர குப்தமௌரியன்
   E - அசோகன்
   (1) **CABDE** (2) **BCAED** (3) **BADCE** (4) **CADBE**

03. மௌரிய பேரரசின் அசோகப் பேரரசின் அரசியல் கொள்கையில் பெரும் புரட்சி ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்திய முக்கிய சம்பவம் பின்வருவனவற்றில் யாது?
   (1) அசோக பேரரசர் புத்த சமயத்தை தழுவுதல்
   (2) கலிங்கப்போரில் ஏற்பட்ட பெரிய உயிரிழப்பு
   (3) மொக்கலீபுத்ததீசத் தேரரின் தலைமையில் 3வது தர்ம சங்கம் நடைபெறல்
   (4) அசோகனின் கொள்கைகளைப் பரப்புவதற்குத் தர்ம மகா யாத்திரர்களை நியமித்தல்.

04. போர்த்துகேயர் கண்டி இராச்சியத்தில் தமது அதிகாரத்தைத் தாபிப்பதற்கு மேற்கொண்ட முயற்சியின் போது கையாண்ட உத்தி பின்வருவனவற்றில் யாது?
   (1) கொனப்பு பண்டாரவை அரசனாக்குதல்
   (2) கண்டி இராச்சியத்தில் கத்தோலிக்க சமயத்தை பரப்புதல்
   (3) கண்டி பிக்குகளின் உதவியை பெறல்
   (4) தமது கட்டுப்பாட்டின் கீழ் குசமாசன தேவிக்கு முடிசூட்டுதல்

## பாடம் :பௌதிகவியல்

01. பின்வரும் அலை வடிவங்களில் எது மிகக் குறகிய அலை நீளத்தையும் உயர் மீடிறனையும் உடையது?
   (1) ஒளி அலைகள் (2) நுணுக்கு அலைகள்
   (3) X - கதிர்கள் (4) வானொலி அலைகள்

02.பாயும் நீரில் இருக்கும் சக்தி
   (1) அழுத்த சக்தி (2) இயக்கப்பாட்டு சக்தி
   (3) மின் சக்தி (4) வெப்ப சக்தி

03. நீர் நிரம்பிய வாளி ஒன்றைக் கிணற்றினுள்ளே இட்டு மேலே இழுக்கும் போது நீரினுள்ளே இருக்கும் வரை உணரப்படும் சுமை வாளி நீர்ப்பரப்பை விட்டு வெளியே வந்ததும் அதிகரிப்பதை அனுபவத்திற் கண்டுள்ளோம். இதற்கு காரணம்.

(1) வாளி நீரினுள்ளே இருக்கும் வரை வளி மண்டல அமுக்கம் அதன் மீது தாக்காத போதிலும் நீர்ப்பரப்பை விட்டு மேலே உயர்ந்ததும் தாக்குதலாகும்

(2) வாளி நீரினுள்ளே இருக்கும் வரை நீரினால் மேலுதைப்பு ஏற்படுத்தப்படும் அது நீர்ப்பரப்பை விட்டு வெளியே வந்ததும் மேலுதைப்பு தாக்க மாட்டாது.

(3) வாளி நீரினுள்ளே இருக்கும் வரை வாளி மூலமாக மேலுதைப்பு ஏற்படுத்தப்படும். அது நீர்ப்பரப்பை விட்டு வெளியே வந்ததும் மேலுதைப்பு தாக்கமாட்டாது.

(4) நீரினுள்ளே வாளியின் அடர்த்தி குறைவானதாகும். அது நீர்ப்பரப்பை விட்டு வெளியே வந்ததும் அடர்த்தி அதிகரிக்கும்.

04. நீண்ட சட்டக் காந்தம் ஒன்றின் வடமுனைவு கல்வனோமானி ஒன்றுடன் தொடுக்கப்பட்டுள்ள வரிச்சுருள் ஒன்றினுள்ளே மெதுவாக செலுத்தப்பட்டது. இவ்வட முனைவு வரிச்சுருள் மையத்திலே சில செக்கன்களுக்கு இருக்க விடப்பட்டுக் கணப்பொழுதில் வெளியே இழுக்கப்பட்டது. கல்வனோமானியில் ஆகக்கூடிய வாசிப்பு குறிப்பிடப்படுவது, வட முனைவு
   (1) வரிச்சுருளை நோக்கியக் கொண்டு செல்லப்படும் போது
   (2) வரிச்சுருளினுள்ளே செலுத்தப்படும் போது
   (3) வரிச்சுருளினுள்ளே நிலையாக இருக்கும் போது
   (4) வரிச்சுருளிலிருந்து வெளியே எடுக்கப்படும் போது

05. தேங்காயெண்ணெய் மண்ணெண்ணெய் நீர் ஆகியவற்றின் அடர்த்தி இறங்கு வரிசை
   (1) தேங்காயெண்ணெய், மண்ணெண்ணெய், நீர்
   (2) மண்ணெண்ணெய், தேங்காயெண்ணெய், நீர்
   (3) நீர், தேங்காயெண்ணெய், மண்ணெண்ணெய்
   (4) மண்ணெண்ணெய், நீர், தேங்காயெண்ணெய்

06. மின்சக்தியை அளக்கப் பயன்படத்தக்க அலகு பின்வருவனவற்றுள் எது?
   (1) அம்பியர் (2) வோல்ட் (3) ஓம் (4) கிலோவாற்று மணி

07. கீழ்வரும் எக்காரணி திரவத்தின் அமுக்கத்தின் மீது செல்வாக்கு செலுத்தாதது?
   (1) திரவத்தின் ஆழம் (2) திரவத்தின் கனவளவு
   (3) திரவத்தின் அடர்த்தி (4) ஈர்ப்பு ஆர்மூடுகள்


**விஞ்ஞானம் (பௌதிகவியல்)**

**பல்தேர்வு**

**ஆசிரியர் . பொன்னுத்துரை தவசிதன் BSC**

மாணவர் ஒளி கல்வி அபிவிருத்தி மையம், திருகோணமலை.


## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் இலக்கணத் தொடர்

### பழமொழிகள்

**15. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு**
ஒற்றுமை மிக்க பலத்தை தரும்

**16. ஆழம் அறியாமல் காலை விடாதே**
எதையும் ஆராய்ந்தறிந்தே செய்தல் வேண்டும்

**17. இரக்கப் போனாலும் சிறக்கப் போ**
வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்

**18. குப்பையிலே கிடந்தாலும் குண்டு மணி மங்காது**
வறுமை வந்த போதும் பெரியோர் பண்பு குன்றார்

**19. இலையும் பழுப்பும் எங்குமுண்டு**
உயர்வு தாழ்வு என்றும் இருக்கும்

**20. கரும்பு தின்னக் கைக் கூலி வேண்டுமா**
நல்லவற்றையே எந்த நிலையிலும் பெற்றுக் கொள்ள வேண்டும்

### கலைச் சொற்கள்

1. இணையம் - internet
2. வையக விரிவு வலை – World wide web
3. மின்னஞ்சல் - E mail
4. கணனி மென் பொருள் - computer soft ware
5. பாதீடு - Budget
6. தொகை மதிப்பு - census
7. தன்னார்வக் குழுக்கள் - Non govern mental organization
8. பச்சை வீட்டு விளைவு – Green house Effect
9. பண்பலை – F.M
10. கருந்துளை – Black hole




**தமிழ் இலக்கியத் தொகுப்பு**

ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special
Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,


## Grammar

**Complete the dialogue using the given groups of words. Write the correct letter in the blank. The first one is done for you.**

**Yaso:** Good morning, nice to see you at the competitions this year too.
**Amal:** Good morning, (1)....6.......
**Yaso:** We are a bit early, aren't we?
**Amal:** (2) ............
**Yaso:** yes, We'll have to wait till 10 o' clock.
**Amal:** Till then yaso (3) ............?
**Yaso:** Give it to me,let me read it first.
**Amal:** (4) ..............
**Yaso:** Ah! It's a beautiful poem.
**Amal:** Yes it is (5) .............
**Yaso:** It is neatly typed. Who typed it?
**Amal:** I did it (6) .............

(1) It's always good to be early
(2) here you are
(3) can you please listen to my poem
(4) my teacher gave it to me
(5) in our school computer room
( 6) nice to see u too

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தொண்டர் ஆசிரியர்...

இப் போராட்டம் நடாத்தப்படுவதாக ஆரம்பத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் தெரிவித் -திருந்தனர்.

எனினும் கடந்த 14 நாட்களாக நடாத்தப்பட்ட போராட்டத்தின் போது பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டே இப் போராட்டத்தைப் பட்டதாரிகள் முன்னெடுத்திருந்தனர்.

உண்ணாநோன்புப் போராட்டத்தினை ஆரம்பித்த போதே கிழக்கு மாகாண சபையின் அதிகாரம் மிக்கவர்களால் இவ்வகையான வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதும் அதனை ஏற்றுக்கொள்ளாமல் பட்டினிப் போராட்டம் கடந்த பதின்நான்கு நாட்களாகத் தொடர்ந்தது. எனினும் தற்போது வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை நம்பி அம்பாரை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

அங்கு கருத்தறிவித்த மாகாண முதலமைச்சர் நியமனம் செய்வதற்குத் தனக்கு அதிகாரமில்லை எனத் தெரிவித்துள்ளார்.

"எங்களுடைய மாகாணசபைக்கு குறிப்பிட்ட சில அதிகாரங்கள்தான் உள்ளன. ஆனாலும் உங்களுடைய பிரச்சினையை கவனத்தில் கொண்டு உங்களுக்கு மிகவிரைவில் நியமனம் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என குறிப்பிட்ட அவர் உங்களுடைய உணர்வுகளை நாங்கள் மதிக்கின்றோம். எங்களுடைய கையில் அதிகாரம் இருந்தால் நாளையே உங்களுக்கு நியமனம் வழங்க முடியும்" என அவர் தெரிவித்துள்ளார்.

"உங்களுடைய போராட்டம் பெரிய அளவில் விழிப்புணர்வை பல மட்டங்களில் ஏற்படுத்தி இருக்கின்றது. எமது மாகாணத்தில் உள்ள திணைக்களங்களில் உள்ள வெற்றிடத்திற்கு அமைவாக மிக விரைவில் நியமனங்கள் உங்களுக்கு வழங்கப்படும். நீங்கள் எங்கள் மீது பழிபோடமுடியாது. எங்களுக்கு முன்னரே இந்த பிரச்சினை உருவானது நீங்கள் இந்த போராட்டத்தின் மூலம் வெற்றியடைந்திருக்கின்றீர்கள்" என்றார் அங்கு வருகை தந்திருந்த கல்வி அமைச்சர் திரு. தண்டாயுதபாணி.

## கசிப்பு....

காவல்துறையின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இச் சுற்றிவளைப்பில் 51 லீற்றர் காய்ச்சப்பட்ட கசிப்பு, கொள்கலன்கள் மற்றும் கசிப்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தும் பொருட்கள் என்பவற்றுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதை அறிந்த சந்தேக நபர்கள், காய்ச்சப்பட்டு விற்பனைக்காக வைத்திருந்த 30 லீற்றர் கசிப்பை அவர்களது வீட்டு மலசலகூடத்தினுள் ஊற்றிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், கைப்பற்றப்பட்ட 51 லீற்றர் கசிப்பு பல கொள்கலன்களில் நிரப்பப்பட்டு நிலக்கீழ் குழிகளில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 220 அரசியல்....

ஆகியோர் உட்பட பலர் சென்று பட்டினிப் போராட்டத்தை நிறைவிற்குக் கொண்டுவரும் பேச்சுக்களை ஆரம்பித்திருந்தனர்.

அப்போது அங்கு உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுடன் நீதி அமைச்சர் நடத்திய பேச்சுக்களின்போது, தமிழ்க் கைதிகளின் விவகாரத்தை எவ்வாறு கையாள்வது என்பதைத் தீர்மானிப்பதற்கு ஒரு வருடகால அவகாசம் வேண்டும் எனத் தெரிவித்தார். கைதிகளின் கோவைகள் பரிசீலிக்கப்பட வேண்டும் அதன்பின்னரே அவர்களை என்ன செய்வது என்பதையிட்டுத் தீர்மானிக்க முடியும் என அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கான பணிகளை 3 கட்டங்களாக முன்னெடுக்க வேண்டியிருப்பதாகவும், அதற்காகவே ஒருவருட கால அவகாசத்தை தாம் கோருவதாகவும் அமைச்சர் தெரிவித்திருந்தார். இச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.ஏ சுமந்திரனும் அங்கிருந்தார். இக்கோரிக்கைகளை ஏற்காத தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் தமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

எனினும் தற்போது அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், எம்.ஏ சுமந்திரன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக் கிடையில் நேற்று காலை நடைபெற்ற முக்கிய சந்திப்பில் நீதி அமைச்சரிடம் தமிழர்களின் தேர்வு செய்யப்பட்ட அரசியல் கட்சியின் முன்வைத்ததாகவும் அவை உடனடியாக சனாதிபதிக்கு நீதி அமைச்சரால் தெரிவிக்கப்பட்டதாகவும் இதையடுத்து குறித்த விவகாரத்திற்கு நிரந்தரத் தீர்வு பெற்றுத் தருவதாகவும், குறைந்தது 3 வார கால அவகாசம் தேவைப்படுவதாகவும் நவம்பர் 7ம் திகதிக்கு முன்னர் நிரந்தரத் தீர்வு வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்ததாக நீதியமைச்சர் தெரிவித்துள்ளார் என்றும் செய்தி வெளியாகியுள்ளது.

## குற்றம் நிரூபிக்...

நாள் கைது செய்யப்பட்டு காவல்துறையின் விசாரணைகளுக்கு முகம் கொடுத்துள்ளார். அவரது தடுப்புக் காவல்துறை விசாரணைக் காலத்தை அதிகரிக்கும் முகமாகக் கடந்த 15ம் நாள் அவரை நீதிமன்றுக்கு முன்நிலைப் -படுத்தியபோது தடுப்புக் காவல்துறை விசாரணைக்காலம் நீடிக்கப்பட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் 4ம் நாள் நீதிமன்றுக்கு முன்நிலைப்படுத்துமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமிடத்து அவருக்கும் அவருடைய இரண்டு சகாக்களுக்கும் உயர்ந்தபட்ச தண்டனைகள் வழங்கப்படும் வாய்ப்புக்கள் உள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

டிசம்பர் 2005ம் ஆண்டு கிறிஸ்மஸ் பூசையின் போது மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து யோசப் பரராசசிங்கம் அவர்கள் அதிகாலை 1.20 மணிக்குச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அப்போது தேவாலயத்தில் சற்பிரசாத நிகழ்வு நடைபெற்றுள்ளது. சற்பிரசாதத்தினை ...

## அரசின் உறுதி...

தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளை நேரில் சென்று அவர்களின் நிலை தொடர்பாக பார்வையிட்டுள்ளனர்.

அப்போது சனாதிபதி சம்பந்தனிடம் வழங்கிய உறுதிமொழி தொடர்பாக பட்டினிப் போரில் ஈடுபடும் அரசியல் கைதிகளிடம் எடுத்துரைத்த போது தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலை தொடர்பாக ஜனாதிபதியை நேரடியாக சந்தித்து நம்பிக்கை ஊட்டும் வகையில் விடுதலைக்கான உறுதிமொழியினை வழங்கவேண்டும் என தெரிவித்து-ள்ளனர்.

இதேவேளை தமிழ் அரசியல் கைதிகள் மேலும் ஒரு கோரிக்கையினை முன்வைத்துள்ளனர். குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16 பேரும் இணைந்து ஜனாதிபதியை சந்தித்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அழுத்தம் கொடுக்கவேண்டும் என கோரியுள்ளனர்.

எனினும் அது நடைபெறாத பட்சத்தில் வட மாகாண முதல்வர் உட்பட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து கொழும்பில் அடையாள உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து தமது விடுதலைக்காக ஒத்துழைப்பு வழங்கும்படி கோரியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

## கிழக்கின்.....

அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டு கிழக்கிலேயே அவ்வேலை இடம் பெற வேண்டும், 4000 மருந்தகங்கள் காணப்பட்ட போதிலும் அதிகமானவை பதியப்படவில்லை, கிழக்கில் உள்ள அனைத்து வைத்திய சாலைகளிலும் குளிசைகளை கடதாசித்துண்டுகளில் வைத்து ஒழுங்கு முறையற்ற விதத்தில் நோயாளர்களுக்கு வழங்கப்படுவது தடைசெய்யப்பட்டு கடதாசி உறை முறை அமுலுக்கு வரவேண்டும்.

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஒசுசல அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் திறந்துவைத்தல். வைத்தியசாலைகளில் கீழுள்ள வெற்றிடங்களுக்கு அவசரமாக ஆட்களை நியமிக்க வேண்டும். ஆலோசகர்கள் 19, மருந்தக அதிகாரிகள் 113, தாதி உத்தியோகத்தர்கள் 73, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் 14, ஆய்வக தொழிநுட்ப வியலாளர் 04, மருந்தாளர்கள் 32, மருந்து விநியோகத்தர் 53 இதனுடன் தொழிலாளர்கள், வேலையாட்கள் என ஆளணிகளை உருவாக்க வேண்டும்.

கிழக்கில் 12 ஆதார வைத்திய -சாலைகளும் 50 மாவட்ட வைத்தியசாலைகளும், 12 சுற்றயற் கூறுகளும் இருக்கின்றன. ஆலோசகர் -களுக்கும், மருத்துவ அதிகாரிகளுக்கு -மான தங்குமிட விடுதி, மருத்துவக் கட்டிடங்கள், தாதியர்களுக்கான விடுதிகள் அமைக்கப்படல் வேண்டும், வாகன வசதிகள் மருத்துவத் தேவைக்கான உபகரணங்கள் பிணவறைக் குளிரூட்டிகள், போன்றன வழங்கப்படவேண்டும் என்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் கோரிக்கை விடுத்தார்.

பெற்றுக்கொண்டு தனது மன்னிலை இருக்கைக்குத் திரும்பிய போதே அவர் சுடப்பட்டார்.

அவரது மெய்பாதுகாவலர்கள் அருகில் இருந்த போதும் அவருக்கு அருகில் இருக்கைகளில் அமர்ந்திருந்த கறுத்த உடைகளை அணிந்திருந்த இருவரே சுடுகலப் பிரயோகம் செய்ததாக அப்போதைய செய்திகள் தெரிவித்திருந்தன.

இதனையடுத்து குறித்த சுடுகலச் சூட்டை கண்டவர்கள் என அடையாளப் படுத்தப்பட்டவர்கள் இனந்தெரியாத நபர்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி-யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாணத்.....

தெரியவருவதாவது, அண்மையில் கோட்டக்கல்வி அதிகாரி ஒருவரின் தலைமையில் பாடசாலை நேரத்தில் அதிபர் பரீட்சைக்கு வழிகாட்டும் பிரத்தியேகப் பயிற்சி நெறியொன்று நடாத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு அதிபர் தரப் பரீட்சைக்கு வழிகாட்டும் பிரத்தியேக பயிற்சி நெறியினை பாடசாலை நேரத்தில் நடாத்தியமை தவறு என்றும், அவ்வாறு நடந்திருக்கும் பட்சத்தில் அதனை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரும் கடிதத்தினையே திருட்டுத்-தனமாக பாடசாலை அதிபர் ஒருவர் திருடிச் சென்றுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிகின்றது.

## இந்திய.....

இந்திய உதவி வீடமைப்பு திட்டத்தை செயல்படுத்தும் யு. என். ஹபிட்டாற் வெளியிட்டுள்ள பட்டியலில் 84 குடும்பங்கள் மட்டுமே இந்திய உதவி வீடுகளைப் பெற தகுதி பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சம்பூரில் மீளக்குடியேறியுள்ள அனைத்து மக்களுக்கும் வீடமைப்பு வசதிகள் செய்யப்பட வேண்டும் என்றே அங்குள்ள மக்கள் அதிகாரிகளிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

அத்துடன் 2008- 2009ம் ஆண்டு காலங்களில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் வீடமைப்பிற்காக வழங்கப்படுகின்ற 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தொகை போதுமானதாக இல்லை என்பதால் அந்தத் தொகை ஆகக் குறைந்தது 7 இலட்சமாக ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் போன்ற விடயங்களில் இந்திய அரசு கவனம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளையும் மக்கள் அதிகாரிகளிடம் முன் வைத்துள்ளதாகவும் இந்த இரு விவகாரங்களும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கும் பல்வேறு தரப்புக்கள் ஊடாக முன்வைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## திருமலையில்...

அடுத்து இப் போராட்டமானது ஆளுனர் செயலகத்திற்கு முன்பாக நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இன்று நடைபெறும் இப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு வர்த்தக நிலையங்கள் மற்றும் கல்விச் சாலைகள் ஆகிய -வற்றிடமும் இவ்வமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. காலை 9.00 மணி தொடக்கம் 10 மணிவரைக்கும் கடைகளையும் கல்விச்சாலைகளையும் மூடி இப் போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு கோரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு

அது Fascio என்பவரின் வழித்தோன்றலாக 19 ம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றி 2ம். உலக யுத்தத்துடன் இந்த ஆட்சிமுறை இல்லாமல் போனது. ஒரு தேசத்தில் மட்டும் அல்ல, குடும்பத்தில் கூட இந்த கொள்கைகள் நிம்மதியையும், சந்தோசத்தையும் தராது உறவுகளே !

அடுத்தது பொதுவுடைமை (Communism). இந்த தத்துவத்தின் சிறப்பு என்ன வென்றால், ஒரு நாட்டின் வளம், உற்பத்தி மார்க்கம் மற்றும் உடைமைகள் அனைத்தும் அரசுக்கு சொந்தமாக இருக்கும். உழைக்கும் வழியையும் அரசே சொல்லும். உழைப்பிற்கான பெறுமதி, அல்லது பொருளாதார பங்கையும் அரசே சமனாகப் பிரித்துக் கொடுக்கும். அதாவது சமூகத்தின் வளங்களும், செல்வங்களும் தனிமனிதனிடம் அல்லது ஒரு முதலாளியிடம் முடக்கப்படுவது தடுக்கப்படுகிறது என்று இந்த சித்தாந்தம் சொல்கிறது. வர்க்க பேதங்கள் இல்லாத இந்த சமூக கொள்கையை வரைமுறை செய்து, சரியான வடிவம் கொடுத்தவர்களில் முக்கியமானவர் Karl Marx. மற்றையவர் Friedrich Engels. ஆகவே மாக்சிசம்-பொதுவுடைமை கொள்கையுடன் தொடர்புபட்டது என்பதை மட்டும் புரிந்து கொள்ளுங்கள்.

தொடர்ந்து இவற்றின் கலப்பாகவும், சமூக தரங்களை மேம்படுத்தவும் எழுந்ததுதான் சோசலிசம். அதாவது சமவுடைமைக் கொள்கை. வர்க்கச் சுரண்டலையும், சமூக ஏற்றத் தாழ்வுகளையும், பாலின ஒடுக்கு-முறையையும் முடிவுக்குக் கொண்டுவந்து மானுட சுதந்திரத்தை உறுதிப்படுத்தி அதை நிலைத்திருக்கச் செய்ய தோன்றிய ஒரு உன்னதமான சித்தாந்தம். பெரிய வித்தியாசங்கள் இல்லை. அதுவும் மார்க்சிச சோசலிசம் மிகவும் சக்தி வாய்ந்ததாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. அனைத்து உடைமைகள், வளங்கள் அரசுக்கு கீழ் இருந்தாலும் உழைக்கும் வர்க்கத்தின் சமூக வாழ்க்கைத்தர உயர்வுக்கு இந்த சோசலிசம்.:. சமவுடைமை வழிவகுத்துக் கொடுத்தது. அரசு மக்களுக்கானது என்ற வழியையும் அது திறந்துவிட்டது.

அடுத்தது லெனினிசம். பொதுவுடைமை வாதத்தின் மார்க்சிசத்தின் கிளை என்றும் சொல்லலாம். விளாதிமிர் இலீச் லெனின். *(1917 –1924)* இரசியப் புரட்சிக்கு வழிசெய்து, போல்செவிக் கட்சியின் தலைவராகி, சோவியத் ஒன்றியத்தின் முதல் அதிபராக பதவி வகித்தவர். அதாவது பொதுவுடைமை சார்ந்த மார்க்சிச அரசியலுடன், கட்டமைக்கப்பட்ட பொருளாதார கொள்கையையும் சேர்த்து ஆட்சி செய்தவர். லெனின் ஒரு மத மறுப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவுடமையில் மார்க்சிசம் பின்பற்றிய நாடுகள் தோற்று இருக்கலாம். ஆனால் அவற்றுடன் லெனினிசம் பின்பற்றிய நாடுகள் தடம்புரண்டதில்லை என வரலாறு சொல்கிறது.

அடுத்தது முதலாளித்துவம் (capitalism). அதனை விளங்கிக் கொள்வது இலகுவானது. அமெரிக்காவை நினைத்தீர்கள் என்றால் சரி. அதிலும் அமேரிக்கா நவதாராளமய முதலாளித்துவ நாடு ஆகும். அதாவது வளங்கள், உற்பத்தி சாதனங்கள், உடைமைகள் பெரும்பாலும் தனி நபர் ஒருவரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். சந்தை மற்றும் விலைகளையும் அவர்களே தீர்மானிப்பார்கள்.

இது சிலவேளை மாநில அரசுகளும் இதனை செய்யும். இன்றைய உலகின் பல நாடுகள் தமக்குத் தெரியாமலேயே இந்த முதலாளித்துவக் கொள்கை-களிலேதான் வாழ்கின்றன. உலகையும் ஆள்கிறது என்றால் பொய்யில்லை. ஏனெனில் மற்றைய சித்தாந்தங்கள் தோற்றுப் போன நிலையில் முதலாளித்துவம் பன்னெடுங்காலமாக அமெரிக்க கண்ட நாடுகள், ஐரோப்பா நாடுகளில் வாழ்கிறது. சுருங்கச் சொன்னால் வளமுள்ளவன், திறமையுள்ளவன், புத்தியுள்ளவன் அந்த அமெரிக்காவில் உயரலாம். அதனை முதலாளித்துவக் கொள்கை ஆதரித்து நிற்கிறது. எப்படி உயர்கிறீர்கள் என்பது இரண்டாவது பிரச்சனை.

இவை எல்லாம் நாம் கண்டு வந்தது. ஆனால் எமது இனத்தை எமக்கே தெரியாமல் அழித்ததும், அழிப்பதும் ஆரியனிசம்(Aryanism) தமிழர் நாம் எந்த கொள்கையில் வாழ்வது? அல்லது ஆள்வது.? உங்களிடம் கேள்விகள் இருக்கலாம்.




# நிகழ்வுகள்

## நூல் வெளியீட்டு விழா – தம்பலகாமம்

சேனையூர் நிருபர்

திருகோணமலையின் மூத்த எழுத்தாளர் அமரர் தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்களின் 22 கவிதைகள் அடங்கிய "வையமெல்லாம் தமிழோசை வளர்ந்தோங்கும்" என்ற தலைப்பில் அமைந்த கவிதைத் தொகுப்பும், அவரது மகன் ஓய்வுபெற்ற அதிபர் கலாபூசணம்.வே.தங்கராசா எழுதிய தம்பலகாமத்தின் கலைப் பாரம்பரியத்தை ஆவணப்படுத்தும் "போற்று-தற்குரிய ஆற்றலாளர்கள் இவர்கள்" என்ற நூலும் *11.10.2015* ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தம்பலகாமம் குளக்கோட்டன் வித்தியாலய மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

கலாசார உத்தியோகத்தர் குணபாலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி பிரசாந்தி ஜெயகாந்த் அவர்களினால் தமிழ்மொழி வாழ்த்து இசை-க்கப்பட்டதைத் தொடர்ந்து வரவேற்புரையை தம்பல-காமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி நிகழ்த்த, நூல் அறிமுக உரையை கேணிப்பித்தன் கலாபூசணம் ச.அருளானந்தம், கவிமணி அ.கௌரிதாசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் கௌரவ சி.தண்டாயுதபாணி அவர்களும், கௌரவ விருந்தினர்களாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ ஜெனார்த்தனன், வரலாற்று ஆய்வாளர் கலாநிதி கனகசபாபதி சரவணபவன், திரு.நடராசா பிரதீபன் (உதவி அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், திருகோணமலை) அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தம்பலகா-மத்தின் கலை இலக்கியப் பாரம்பரியத்தினைச் சேர்ந்த பலர் கௌரவிக்கப்பட்டது இந்நிகழ்வின் சிறப்பம்ச-மாகும்.







## "உலக அஞ்சல் தினம்"

சேனையூர் நிருபர்

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு மூதூர் தபால் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வு மூதூர் தபால் அதிபர் நல்லதம்பி குமணன் தலைமையில் 09.10.2015 வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது ஊழியர்கள் ஒன்றிணைந்து அஞ்சல் தினப் பிரகடனத்தை மேற்கொண்டதோடு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டனர். அஞ்சல் அலுவலகத்திற்கு முன்னால் நிழல் மரமொன்றும் நடப்பட்டது.

இந்நிகழ்வில் உதவித் தபால் அதிபர்களான எம்.எம்.றிசாட்,எஸ். ரி.கே.வீரவங்ச மற்றும் உப தபால் அதிபர்கள் உள்ளிட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர். மூதூர் தபால் அலுவலகமானது ஆங்கிலேயர் காலத்தில் முதன்மையாக நிறுவப்பட்ட தபால் அலுவலகங்களில் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது.



## சிறார்களின் சந்தை

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட அமிர்தகழி மெதடிஸ்த முன்பள்ளி சிறார்களின் வருடாந்தம் நடைபெறும் மாபெரும் சிறுவர் சந்தை கடந்த வியாழக்கிழமை பாடசாலை அதிபர் திருமதி ஜெ.ஞானராஜன் தலைமையில் பாடசாலையில் நடைபெற்றது.

காலை 08.30 மணியளவில் இடம்பெற்ற முன்பள்ளி சிறுவர்-களின் சந்தை நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் கலந்து கொண்டு சிறுவர் சந்தையை ஆரம்பித்து வைத்தார் .

இதில் பல்வேறு வகையான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டன. கலந்து கொண்ட பெற்றோர்களும் சிறார்களின் பொருட்களை வாங்கிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்




## கால்ப்பந்தாட்ட போட்டிகள்

திருகோணமலை மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற கால்பந்தாட்ட போட்டியில் ஜமாலியா வித்தியாலய அணி வெற்றிபெற்றுள்ளது. இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சங்கம் 15 வயதுக்கு உட்பட்ட மைலோ கிண்ணத்துக்கான சுற்றுப்போட்டிகளை நடத்தி வருகின்றது. திருகோணமலை மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான போட்டி, கடந்த வியாழக்கிழமை (15.10.2015) விபுலாநந்தா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் எட்டு பாடசாலைகளின் அணிகள் பங்கு கொண்டன. இறுதிப் போட்டியில் திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் வித்தியாலயத்தை எதிர்த்து கிண்ணியா மத்திய கல்லூரி அணி மோதியது.

### ஜமாலியா வித்தியாலய அணி வெற்றி

ஆட்ட நேரம் வரை இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை போட்டிருந்தன. வெற்றியைத் தீர்மானிக்க தண்ட உதைகள் (பெனால்டி) 5 வழங்கப்பட்டது. இதனை ஜமாலியா வித்தியாலய அணியினர் தமக்கு சாதகமாக பயன்படுத்தி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றனர். இப்போட்டியில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, புனித சூசையப்பர் கல்லூரி, உவர்மலை விவேகாநந்தா கல்லூரி, ஜமாலியா முஸ்லிம் வித்தியாலயம், கந்தளாய் புகாரி வித்தியாலயம், கிண்ணியா அல் அக்ஸா கல்லூரி, கிண்ணியா மத்திய கல்லூரி, வெள்ளைமணல் அல் அசார் வித்தியாலயம் ஆகியன பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## அரச அதிபர் வெற்றிக்கிண்ண இறுதி தொடர்

### எதிர்வரும் திங்களன்று


அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்காக பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப்போட்டிகளும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்டச் செயலக நலன்புரி கழகம் தலைவர் இ.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் யாழ்.மாவட்டச் செயலர் நாகலிங்கன் வேதநாயகன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். துடுப்பாட்டம், கால்ப்பந்தாட்டம் மற்றும் கயிறிழுத்தல் ஆகிய போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. ஆண்களுக்கான மென்பந்தாட்ட துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப்போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி மோதவுள்ளது. பெண்களுக்கான மென்பந்தாட்ட துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியும் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியும் மோதுகின்றன.

## ஓய்வு பெற்றார் சகீர் கான்



இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான சகீர் கான், சர்வதேசப் போட்டிகளிலிருந்தும் முதற்தரப் போட்டிகளிலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். இதற்கான அறிவிப்பை எனினும், இந்தியன் பிறீமியர் லீக் தொடரில், அடுத்த ஒரு பருவகாலத்தில் பங்குபெறவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். 92 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய சகீர் கான், 32.94 என்ற சராசரியில் 311 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவர், 200 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 29.43 என்ற சராசரியில் 282 விக்கெட்டுகளையும் 17 இருபதுககு-20 சர்வதேசப் போட்டிகளில் 17 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தார். தவிர, 169 முதற்தரப் போட்டிகளில் பங்குபற்றிய அவர், 27.97 என்ற சராசரியில் 672 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

## டோனிக்காக பரிந்து பேசிய லாரா



ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கு மோசமான கால கட்டம் வரும். அதற்காக அவர்களை விமர்சிப்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள இயலாது என மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திரம் பிரயன் லாரா தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் சமீபகால தோல்விக்காக தோனியை விமர்சிப்பது நியாயமற்றது. அவரது தலைமையில் இந்திய அணி சாதனை வெற்றிகளை பெற்று உள்ளது. சிறந்த வெற்றிகளை பெற்றுக்கொடுத்து பெருமை சேர்த்ததற்காக சில மோசமான நிகழ்வுகளை மறுந்துவிட வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார்.

## முதன் முறையாக ஆண்கள் அணியில் ஓர் பெண்

அவுஸ்திரேலியாவின் வடக்கு மாவட்டங்கள் கிளப்- போர்ட் அடிலெய்டு அணிகள் மோதும் இரு நாள் போட்டி நேற்று ஆரம்பித்தது. இதில் வரலாற்றில் முதன்முறையாக இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பர் சாரா டெய்லர், வடக்கு மாவட்டங்கள் கிளப் அணிக்காக விளையாடுகிறார்.

கடந்த 1987ம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இந்த தொடரில் ஆண்கள் அணியில் இணைந்து பெண் ஒருவர் விளையாடுவது இதுவே முதன்முறையாகும்.

இது பற்றி சாரா டெய்லர் கூறுகையில், ''பதற்றமாகவும், அதே சமயம் உற்சாகமாகவும் இருக்கிறது. மேலும், வீரர்கள் என்னை மற்ற வீரர்களைப் போன்று பார்த்து வாய்மொழி துஷ்பிரயோகம் செய்தால் கூட நான் மரியாதையாக ஏற்றுக் கொள்வேன்" என்று கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்காக 8 டெஸ்ட், 98 ஒருநாள் மற்றும் 73 டி20 போட்டிகளில் விளையாடி உள்ள சாரா, கடந்த வருடத்தில் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதையும் வென்றுள்ளார்.




## சிறைத்தண்டனையிலிருந்து வீட்டுக் காவலிற்கு

தனது காதலியை சுட்டுக் கொலை செய்த குற்றத்தில் சிறையில் அடைக்கப்பட்ட பராலிம்பிக் மற்றும் ஒலிம்பிக் ஓட்ட வீரரான ஒஸ்கா பிஸ்டோரியசை வீட்டுக் காவலில் வைக்குமாறு தென்னாபிரிக்க பரோல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டில் தனது காதலியை படுகொலை செய்த குற்றச்சாட்டை ஒஸ்கா பிஸ்டோரிஸ் எதிர்கொண்டிருந்தார். இதனையடுத்து கைது செய்யப்பட்ட அவர், நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நி'ரூபிக்கப்பட்டதால் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதுவரை 12 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவித்துவந்த ஒஸ்கா பிஸ்டோரியஸ் சிறையிலிருந்து விடுவித்து, எதிர்வரும் செவ்வாய்க்கிழமையிலிருந்து வீட்டுக் காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானிலிருந்து தென் ஆப்பிரிக்காவிற்கு



1998ஆம் ஆண்டு பாகிஸ்தான் "ஏ" அணியில் இடம் பெற்றிருந்த தாஹிர், தென்னாபிரிக்க சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த அணியில் இடம் பெற்றிருந்தார். அப்போது சுமையா தில்தர் என்ற இந்திய வம்சாவளி பெண்ணை சந்தித்து அவரையே திருமணம் செய்து கொண்டார். பின்னர் தென்னாபிரிக்காவில் குடியேறிய அவர் 2011ஆம் ஆண்டு தென்னாபிரிக்க அணியில் இம்ரான் தாஹிருக்கு இடம் கிடைத்தது.

## நடுவரை விமர்சித்ததால் அபராதம்

இந்திய தென்னாபிரிக்க அணிகள் மோதும் தொடரில் நடுவராக உள்ளார் இந்தியாவின் வினீத் குல்கர்னி. இத்தொடரில் இவர் வழங்கிய பல முடிவுகள் தவறாக உள்ளதாகக் கூறப்படுகிறது. இது குறித்து இந்திய அணி முகாமையாளர் வினோத் பட்கே கூறுகையில், குல்கர்னியின் பல முடிவுகள் தவறு என வெளிப்படையாகவே தெரிகிறது. இது குறித்து கப்டன் தோனி எதுவும் சொல்லியதாக தெரியவில்லை. இருப்பினும் எனது அறிக்கையில் நடுவரின் தவறுகள் குறித்து தெரிவிப்பேன் என்றார்.

பட்கேவின் இந்தப் பேச்சு ஐ.சி.சி. யின் விதியை மீறிய செயல் என்பதால் இவருக்கு ஐ.சி.சி. அபராதம் விதித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காவது தடவையாக தங்கப்பாதணி விருது

இறுதியாக இடம்பெற்ற லா லிகா பருவாகாலத்தில் 48 கோல்களைப் பெற்று, ஐரோப்பாவில் அதிக கோல்கள் அடித்தவர் என்ற ரீதியில் ஸ்பெயின் கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்ட்டியானோ சாதனை ரீதியாக நான்காவது தடவையாக தங்கப்பாதணி வீரர் விருதை வென்றுள்ளார்.

## வயாகராவால் ரன் அவுட்



முந்தைய நாள் இரவு உள்ளெடுத்த வயாகரா மாத்திரையின் வீரியம் காரணமாக மறுநாள் பங்கேற்ற கிரிக்கெட் போட்டியில் ரன் அவுட்டாக வேண்டிய நிலை வந்ததாக இங்கிலாந்து முன்னாள் கிரிக்கெட் வீரர் அன்ட்ரூ பிளிண்டாப் சுவாரஷ்ய தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார். இங்கிலாந்து கண்ட மிகச் சிறந்த சகலதுறை வீரராக வர்ணிக்கப்படுவர் பிளிண்டாப். குத்துச் சண்டைகளிலும் ஆர்வம் உள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் சுகாதாரத்துறைக்குத் தேவைகள் அதிகம்

## கிழக்கின் முதல்வர்



கிழக்கின் சுகாதாரத் துறைக்கு தேவைகள் மிகவும் அதிகமாக இருப்பதாக கிழக்கின் முதலமைச்சரும் தற்காலிக கிழக்கு மாகாணச் சுகாதாரத்துறை அமைச்சருமான ஹாபிஸ் நசீர் அஹமட் கொழும் - பில் தெரிவித்துள்ளார்.

மத்திய சுகாதாரத்-துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவின் தலைமையில் மாகாணங்களின் சுகாதார அமைச்சர்கள் கலந்துகொண்ட மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்த முதலமைச்சர் கிழக்கு மாகாணம் எதிர்கொள்ளும் சுகாதாரத் தேவைகளைப் பட்டியலும் இட்டார்.

கிழக்கு மாகாணத்தில் உணவுகள் வெளியிடங்களுக்கு பரிசீலனைக்கு

17

# கிழக்கு மாகாணத் தமிழர் ஆசிரியர் சங்கம் காவல்துறையில் முறைப்பாடு



கிழக்கு மாகாணத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் திருகோணமலை பிரதான காவல் நிலையத்தில் முக்கிய முறைப்-பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று (16)ம் திகதி மாலை அச்சங்கத்தின் பொதுச்செயலாளர் மற்றும் உதவிச் செயலாளர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டில் தாம் தட்டச்சு செய்யக் கொடுத்த முக்கியமான முறைப்-பாட்டுக் கடிதமொன்றை தமது பெயரைப் பாவித்து அதிபர் தரத்திலான மற்றொருவர் பெற்றுச் சென்றுள்ளார் என்பதே அக்குற்றச்சாட்டாகும்.

விடயம் தொடர்பாக மேலும்

17

# கசிப்பு வேட்டையில் வெருகல் பிரதேசச் செயலாளர்



வெருகல் பிரதேசத்தில் நிகழும் கள்ளச்சாராய உற்பத்தியைத் தடுத்து நிறுத்துவதற்காகப் பிரதேசச் செயலாளர் திரு. தயாபரன் தானே களத்தில் இறங்கிய நிகழ்வொன்று கடந்தவாரம் பதிவாகி உள்ளது.

பலமுறை எச்சரிக்கப் - பட்ட குடும்பமொன்று மிகவும் திட்டமிட்ட முறையில் கசிப்பு வடிக்கும் தொழிலைத் தொடர்வ -தாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே களத்தில் பிரதேசச் செயலாளர் இறங்கியுள்ளார்.

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சீனன்வெளிக் கிராமத்தில் நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த தம்பதியர் கடந்த வியாழக்கிழமை மேற் -கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது கைதாகினர்.

17

# பசுமை இயக்கத்திடமிருந்து உதவிகள்



பசுமை இயக்கத்தினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற உதவிகளைக் கொண்டு சம்பூரில் மீளக் குடியேறிய மக்களுக்கு வேலிக் கம்பிச்சுருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

தேர்வு செய்யப்பட்ட இருபது குடும்பங்களுக்கு தலா இரண்டு கம்பி சுருள்கள் மற்றும் இரண்டு கிலோ அள்ளு என்பன வழங்கப்பட்டது.

அறிவு என்பதே அறிந்துகொள்வதில் இருந்தே பிறக்கின்றது. அரசியல் அறிவு என்பதும் அறிந்துகொள்வதில் இருந்தே பிறக்கும் அறிந்து. ஆய்ந்து தெளிவுபெற்று முடிவு எடுப்பதில் தடையாக இருப்பது... தமிழருக்கு உணர்ச்சி வசப்படுதலே!

"தமிழ்த் தேசம் நோக்கிப் பயணிப்போம்"

# இந்திய வீட்டுத் திட்டத்தை இழக்கும் அரைவாசிச் சம்பூர் குடியேற்றவாசிகள்

சம்பூரில் மீளக்குடியேறியுள்ள மக்களில் சுமார் அரைவாசிக்கும் மேற்பட்ட மக்களுக்கு இந்திய வீட்டுத் திட்டத்தின் ஊடாக வீடகள் கட்டிக்கொடுக்கப்பட மாட்டாது என ஐநாவின் வீடமைப்பு நிறுவனமான யுஎன்ஹபிடாட் அறிவித்துள்ளது.

வீடுகளை பெற விதிக்கப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் புள்ளிகளின் அடிப்படையிலே இந்த குடும்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பூர் பிரதேசத்தில் தற்போது அதிகாரபூர்வமாக 344 குடும்பங்கள் 9 வருடங்களின் பின்னர் தற்காலிக குடியிருப்புகளை அமைத்து மீளக்குடியேறியுள்ளன.

அங்கு அரச முதலீட்டு வலயத்திற்கென சுவீகரிக்கப்பட்டு முதல் தொகுதியாக விடுவிக்கப்பட்டுள்ள காணிகளில் மட்டும் 204 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன.

இந்தக் குடும்பங்களே பிரதேச செயலக அதிகாரிகளினால் முன்னுரிமை அடிப்படையில் இந்திய உதவி வீடுகளுக்காக தெரிவு செய்யப் பட்டிருந்தன.

17

# அஸீமாவிற்கான போராட்டம்

கடத்தப்பட்ட சிறுமி அஸீமாவைக் கண்டுபிடித்துத் தரும்படி மட்டக்களப்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த 27.03.2013 அன்று பாடசாலைக்கு செல்லும் போது ஓட்டமாவடி கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பாலைநகர் பகுதியினைச் சேர்ந்த 13 வயதுடைய மாணவி முஹம்மது அலியார் பாத்திமா அஸிமா காணாமல் போயிருந்தார்.

எனினும் இதுவரை அச்சிறுமியை கண்டிபிடிக்க முடியவில்லை. என்பதோடு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை எந்த சந்தேக நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.




எனவே குறித்த சிறுமி தொடர்பான உண்மை நிலையினைத் தெரிந்துகொள்ளக் காவல்துறை நடவடிக்கையைச் சிறப்பாக முன்னெடுக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

முதந்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738

இவ்வாரப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 17.10.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org